யார் அந்த பிரஜாபதி

அறிய / அறிவிக்கவேண்டிய
அரிய உண்மைகள்
(தமிழகத்தில் இறைப் பணியாற்றுவோர்க்கு
வழித்துணையாக விளங்கக் கூடிய ஒரு கைநூல்)

DOME OF THE ROCK

தொகுப்பு ஆசிரியர் :
டாக்டர் B. விஜயன், பொள்ளாச்சி

பெத்லகேமில் ஆண்டவர் பிறந்த இடத்தில்
அமைந்துள்ள பளிங்கு சிற்பம் (Star of Bethlahem)

இயேசு கிறிஸ்து 'பரமண்டல ஜெபம்' கற்பித்த இடத்தில்
அமைந்துள்ள பளிங்கு பலகைகள்
(Arameen Language & Hebru Language)

யார் அந்த பிரஜாபதி

அறிய / அறிவிக்கவேண்டிய அரிய உண்மைகள்

(தமிழகத்தில் இறைப் பணியாற்றுவோர்க்கு வழித்துணையாக விளங்கக் கூடிய ஒரு கைநூல்)



தொகுப்பு ஆசிரியர் :
டாக்டர் B. விஜயன், பொள்ளாச்சி

அச்சு பதிப்பகம் : ஜோதி பிரிண்ட்ஸ், சென்னை - 40
செல் : 97890 23419

வருடம் 2015, புத்தகம் 5000

"கடுகை துளைத்து அரியன புகட்டி குறுக சேர்த்த கைநூல்." **- ஆசிரியர்**

தட்டச்சு உதவி
அச்சுக்கு உதவி : **திரு. J. ஆனந்த்**
அண்ணாநகர், சென்னை - 40

இக்கைந்நூலின் உள்ளே...

		பக்கம்
1.	தமிழுக்கு கிறித்துவம் ஆற்றிய தொண்டு	1
2.	மெய்க்கடவுள் யார்? எப்படிப்பட்டவர்?	15
3.	மெய்ச்சமயம்	21
4.	தமிழர் சமயம், தமிழர் வேதம்	41
5.	பிரஜாபதி - வடமொழி வேதங்கள்	49
6.	முக்தி மார்க்கம்	58
7.	வேதாகமம் - வரலாறு - உருவாக்கம் சரித்திரம்	68
8.	உடன்படிக்கை : பழைய will + புதிய will	73
9.	இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு உலக மகா சரித்திரம்	76
10.	குரானில் "YESHUA" ஆண்டவர் “இயேசு கிறிஸ்து”	79
11.	பெயர் வழி நாம காரணம் - Nameology	83
12.	MELCHI ZEDEK - மெல்கிசேதேக் - MELKI ZEDEK	85
13.	வேதாகமத்தில் அண்ணகர்கள் கடவுளின் வாக்குதத்தம்	89
14.	காலங்கள் - கணக்கிடும் முறை - விழாக்கள்	91
15.	சுவிசேஷம் - விசுவாசம் - நம்பிக்கை - உறுதிப்பாடு	93
16.	தெய்வம் கண்டேன் - தெய்வமாகக் கண்டேன் - தெய்வத்தையே கண்டேன்!	96
17.	தமிழ் வேதாகம உருவாக்கம்	98
18.	யோகம்	100
19.	புதிய ஏற்பாடு - விளக்க குறிப்புகள்	111

முன்னுரை

மனிதன் சிந்திக்கத் துவங்கி, மனதில் கேள்வி உருவான காலந்தொட்டு கேட்கப்பட்டு வரும் ஒரு வினா "யார் அந்த பிரஜாபதி". மனிதன் ஆரம்ப காலத்தில் இயற்கையின் வினோதத்தையும், அதிசயங்களையும், ஆச்சரியத்தையும் படைப்பின் கடவுளாக எண்ணி வழிபட்டான். ஏன் இப்போதும், வழிபடுகிறான். தேவர்களுக்கும், தெய்வங்களுக்கும் பல பரிமாணங்களைக் கொண்ட அற்புதங்களுக்கும் அப்பால் தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தா, முழுமுதலோன் இருக்கிறார் என்பதை மனிதன் உணராமல் இல்லை!

காணக் கிடைக்காத, காண முடியாத அல்பாவை, ஓமேகாவை சான்றோர், ஞானிகள், முனிவர்கள், தீர்க்கர்கள், அந்த முழுமுதலோனை ஒரு பெயருக்குள் அடக்க இயலாத நிலையில், அவரின் துவக்கத்தை, முடிவை, செயலை, நடைமுறைகளைக் கொண்டு இப்படிப்பட்டவர் தான் "பிரஜாபதி" என நமக்கு காட்டி சென்றனர். அவ்வகை வழி காட்டுதலுக்கு உரிய பலகருத்துக்களை, திரு. தாஸ் சேகரித்து கொடுக்க, முனைவர் செல்வி D. ராஜசீலி அதற்கு வலு சேர்க்க, இறை உந்துதலால் இவ்வகை கருத்துக்களுக்கு வடிவம் அமைக்க முனைநதேன்.

இதுவே முடிவு அல்ல. இறைதேடலுக்கு ஒத்த கருத்துடைய அரிய பல பாடல்கள் உள்ளன. அவை அனைத்தையும் சேர்ப்பின் பாமரருக்கு, கிராம ஊழியர்களுக்கு, பாரமாக அமையும் என்பதால் அர்த்தம் உள்ள சில பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து அளித்துள்ளேன்.

நாடாள முற்பட்ட ஆங்கிலேயர்கள் நம்நாடு, பலபகுதிகளாக பல ஆளுகையின் கீழ் இருந்த நிலையில் பிரித்தாளும் சூழ்ச்சியில் நாட்டை ஆண்டனர். அவர்கள் அறிந்தோ அறியாமலோ இந்தியா என்ற நாட்டை ஒருமைபடுத்தி ஆளுமை செய்தனர். ஆங்கிலேயர்களால் நாடு, கல்வி மருத்துவம், அறிவுவிருத்தி, செய்தி, போக்குவரத்து, என பலதுறைகளில் வளர்ச்சி கண்டது. இவை அனைத்திற்கும் மேலாக, நாம் நினைத்து பார்க்காத உண்மையான பரம் பொருளை, படைப்பின் ஆதாரத்தையும் நமக்கு அறுதியிட்டு காண்பித்தனர்.

ஆங்கிலேயர்கள்தான் பரம் பொருளை நமக்கு காட்டினார்களா? என்றால், முக்காலம் உணர்ந்த சித்தர்கள் உள்ளடக்கி பல மூதாதையர்கள் பரமனை சித்தரித்து காட்டினர். சித்தரித்த உருவத்தை ஒன்றாக்கி காண அவை அனத்தும் ஆங்கிலேயர் நமக்கு காண்பித்த "பிரஜாபதி" தான் சித்தர்கள் கண்ட பரம் பொருள் என உணரும் போது, கண்முன் கண்ட காட்சியை அடுத்தவன் உணர்த்தினால்தான் நாம் உணரும் நிலையில் உள்ள அறியாமையை எண்ணி, மேலும் மாயை என்ற பூடகத்திலிருந்து நம்மை விடுவிக்க இச்சிறு கையேடு உறுதுணையாக இருக்கும் என கருதினேன். சித்தர் பாடல்கள் ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே அவர்களை இக்கையேட்டினை சீர்படுத்த கருத்தாய்

கேட்டு பெற்றேன் இப்பணியனைத்திற்கும் உறுதுணையாக உள்ள எனது அருமை துணைவியார் திருமதி ரோடா அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இடம் பெற்ற பாடல்கள், மந்திர சொற்கள் அறிஞர்களால் மற்றும் முக்காலம் உணர்ந்த முனிவர்களால் வடிவமைக்கப்பட்டதன் உட்பொருள், அவர்கள் ஆராதித்த, வணங்கிய சக்தியின் கருத்தே, அவர்கள் வாயிலாக வெளிபட்டது. சுருங்க கூறினால் நாம் மற்றும் ஞானிகள், மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஆகியோர் கருத்தையே இக்கைநூல் தாங்கி வருகிறது. பழைய ஏற்பாடு இயேசு பிரான் பிறப்பிற்கு 4000 ஆண்டுகள் முன் உள்ள பகுதியை உள்ளடக்கி அவற்றில் இயேசு பிரான் பிறப்பை முன் அறிவித்து அவரது தெய்வீகத்தினை இயேசு பிரான் பிறந்த காலத்திற்கு 50 ஆண்டுகள் பின்னிட்டு உள்ளடக்கிய புதிய ஏற்பாடு ஆகியவை; தமிழ் வழிபாடுகள், மற்றும் சமஸ்கிருத சுலோகங்களுடன் ஒத்து போவது ஒரு தெய்வீக ஒற்றுமையே! இவ்வகை ஒற்றுமையை அனைவரும் அறிய கொண்டு சேர்ப்பதே இறைவன் எனக்கு இட்ட கட்டளையாக ஏற்று **பரம்பொருள்: “சத்து சித்து ஆனந்தத்திற்கு”** இக்கைநூலைச் சமர்ப்பிக்கிறேன்.

தமிழ் மொழியாம் செம்மொழியில், மெய்யெழுத்துகளுக்கு மேற்புள்ளியிட்டு, வார்த்தைக்கு இடைவெளிவிட்டு, வாக்கியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து இன்றைய உரைநடை தமிழை கொண்டு வந்தவர்கள் ஐரோப்பிய கிறித்துவ சமய அறிஞர்கள் என்ற உண்மையினையும், அரிய நூலாம் ‘திருக்குறளை’ உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டியதுமல்லாமல் இலக்கிய, இலக்கண சமய நூல்களை ஐரோப்பிய மொழிகளுக்கு மொழி பெயர்த்தனர் என்ற செய்தியினையும், திராவிட மொழிகளுக்கு இடையே ஒப்பிலக்கணத்தை வகுத்து, மொழிக் குடும்பங்களில் மூத்த மொழி தமிழ் என அறுதியிட்டு கூறியவர்கள் ஐரோப்பிய கிறித்துவ சமய தொண்டர்கள் என்ற உண்மையை சேர்த்துள்ளேன்.

தமிழர் சமயம், தமிழர்வேதம் பகுதியில் செம்மொழி கண்டவர்கள் தங்கள் அறிவால் பெற்ற முடிவை ‘சைவசித்தாந்தம்’ என்ற வழிபாட்டு நெறி, வாழ்கைமுறை இவற்றுடன் தத்துவ கொள்கை சேர்த்து ‘சைவ சமயமாக’ ‘சிவவழிபாட்டு நெறி’ கண்டனர் என்பதையும் ‘சைவ சித்தாந்த’ தத்துவத்தை முதலில் கூறிய திருமூலர், “ஒன்றெனக் கண்டேனம் ஈசன் ஒருவனை” (1775) என தன் முடிவையும், திருவள்ளுவர் ஈசனை ‘ஆதிபகவன்’ என கூறி தங்கள் இறை தேடல் பணியினை முடித்துக் கொண்டனர்.

வடமொழி வேதங்களில் ‘பிரஜாபதி’ யார் என்ற கேள்விக்கு விடை எழுதி முழுமுதலோனை அறுதியிட்டு இறுதியாக காட்டியுள்ளனர். இவ்வகை உண்மைகளை இறைப்பணியாற்றும் ஊழியர்களுக்கு கொண்டு சேர்க்கவே இந்த விரிவாக்கம்.

இந்துமதம், தோற்றம், வரலாறு சார்ந்த உண்மைகளை சான்றோர்கள் வாயிலாக அறிய வழிகண்டேன். அலைபாயும் அறிவு சார்ந்த மக்களின் மெய்வழி தேடலில் யோக வழியும், இறைவனை அடைய குறுக்குவழி காட்டும் யோகிகள், குருக்கள் குறித்த தெளிவுரையையும் எடுத்துரைத்துள்ளேன். வாழ வழிகண்ட மனிதன் தன் திட்டங்கள் அனைத்தும் இம்மைக்கு வழி!! ஆனால் மறுமைக்கு வழிகாண முயலவே இல்லை!!! சுயநலமே விஞ்சும் பூலோக வாழ்வு குறித்தும் பகுத்தறிவாளர்கள் பாதி ஆற்றை கடந்த நிலையில் மெய்வழி கண்ட பிராஹ்மணர்கள் சன்மார்க்க வழியை தம்மக்கள் அரிய எடுத்த முயற்சியினை வெளிச்சம் போட்டு காட்ட முனைந்துள்ளேன். கிறித்துவ மக்களுக்கு திருமறைசார்ந்த நூலகம் பல இல்லாத குறையை ஓரளவு பூர்த்தி செய்ய பல அரிய செய்திகளை திரட்டி தந்துள்ளேன். கிராம புற ஊழியர்கள் ஊழிய தேவையை கருத்தில் கொண்டு இக்கை நூலுக்கு இறுதி வடிவம் கொடுத்துள்ளேன்.

இந்நூலை புத்தக தலைப்புக்கு ஏற்ப ஆய்வு கட்டுரைகளையும் சேர்த்து 'யார் அந்த பிரஜாபதி?' என்ற கேள்விக்கு விடை காண வலு சேர்க்கும் விதமாக அமைத்துள்ளேன். பாமர மக்கள், படித்தும், தெரியாதவர்கள், அறிந்தும், அறியாதவர்கள் சிந்திக்க வலுவிழந்தவர்கள் சிந்திக்க தூண்டும் விதமாக ஆதாரங்களை கொடுத்துள்ளேன். என் பணி இத்துடன் முடிவு பெருகிறது. இந்நூலின் உட்கருத்தை சேர்க்க வேண்டியவர்களிடம் சேர்ப்பது இறைவன் பொறுப்பு.

நன்றி

ஆசிரியர்
Dr. B. விஜயன், B.V.Sc.,
48/27, வெங்கடேசா காலனி,
இரத்தின விநாயகர் தெரு,
பொள்ளாச்சி - 642001.
கைபேசி எண்: 9965524030

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. - ரோமர் 15:13

1. தமிழுக்கு கிறித்துவம் ஆற்றியத் தொண்டு

முன்னுரை முத்துக்கள்

- "மொழிகளில் மூத்த மொழியும், முதல் மொழியும் தமிழ் மொழியே" என்ற குரலை ஓங்கி ஒலித்த முதல் மனிதர் அயர்லாந்தின் கிறித்துவத் தொண்டரும், தமிழ்த் தொண்டருமாகிய டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களாகும்.

- அச்சுக் கலைத் தொழிலை 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டுவந்து, தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமை ஐரோப்பியக் கிறித்துவ சமயத் தொண்டர்களைச் சார்ந்ததாகும்.

- பண்டிதர்களிடையே இருந்த செய்யுள் நடைச் செந்தமிழை, பாமரர்கள் மத்தியில், உரைநடைத் தமிழாய் உலவவிட்டப் பெருமை ஐரோப்பிய கிறித்துவ சமயத் தொண்டர்களையே சார்ந்ததாகும்.

- உரைநடைத் தமிழில், முதன் முதலாய் இலக்கண நூல் இயற்றிய பெருமை, ஐரோப்பியக் கிறித்துவ சமயத் தொண்டர்களைச் சார்ந்ததாகும்.

- கிறித்துவ சமயத் தொண்டர்கள், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் முதன் முதலாய் அகராதி உண்டாக்கிய பெருமை ஐரோப்பியர்களுக்கே உரியதாகும்.

- உரை நடைத் தமிழ் இலக்கணத் தமிழ் அகராதிகள் ஆகியவற்றைப் புத்தகங்கள் வழியாய் வெளிக் கொணர்ந்த ஐரோப்பிய கிறித்துவ சமயத் தொண்டர்களில், டாக்டர் கால்டுவெல் என்ற கிறித்துவரே, திராவிட மொழிகளுக்கிடையில் ஒப்பிலக்கணம் கண்ட பெருமைக்குரியவர் ஆவார்.

- தமிழ், உரைநடைத் தமிழாய் மாறியபோது, வடமொழிக் கலப்பின் காரணமாக ஏற்பட்ட மணிப்பிரவாள நடைப் பாதிப்பிலிருந்து தமிழை மீட்டு, 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நல்ல தமிழில் பரிசுத்த வேதாகமத்தைக் (ஹென்றி பவர் ஐயரின் வெளியீடு) கொண்டு வந்து, இன்றைய உரைநடைத் தமிழுக்கு முன்னோடி உரை நடைத் தமிழைக் கண்ட பெருமை, ஐரோப்பியக் கிறித்துவ சமய நெறியினருக்கே உரியது.

- உரைநடைத் தமிழ் முதன்முதலாய் பத்திரிகை இதழை வெளியிட்ட பெருமை கிறித்துவ சமய நெறியாளருக்கே உரியது.

- திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியச் செல்வங்களை மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்த்து, தமிழ் இலக்கியச் சிறப்பை

உலகத்திற்கு உணர்த்திய பெருமை ஐரோப்பிய கிறித்துவர்களுக்கே உரியது.

- தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் மட்டுமின்றி, திருவாசகம் போன்ற சமய நூல்கள் பலவற்றையும், ஆங்கிலத்திலும், பிற ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்த்தவர்கள் ஐரோப்பிய கிறித்தவர்களே.

- தமிழ் மொழிக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும், இடையில் இலக்கிய, இலக்கண, ஆன்மீக சமய உறவுகளை ஏற்படுத்தித் தந்தவர்கள் ஐரோப்பிய கிறித்துவத் தமிழ்த் தொண்டர்களே.

திராவிட மொழிகளுக்கிடையே ஒப்பிலக்கணத்தைக் கண்ட டாக்டர் இராபர்ட் கால்டுவெல் (1814 - 1891) அவர்கள் "மானிட இனங்களின் முதல் மொழியும், மொழிக் குடும்பங்களின் மூத்த மொழியும் உலக மொழிகளில் தொன்மையான மொழியாக தமிழே இருந்திட வேண்டும்" என்ற கருத்தினை தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்துள்ளார்கள்.

இக்கருத்தினை தேவநேயப் **பாவாணர்** அவர்களும் மற்றும் பல தமிழறிஞர்களும் ஆதரித்துள்ளனர்.

தமிழகம் வந்து தமிழ்த் தொண்டாற்றியோர் பின்வருமாறு :

தத்துவ போதக சுவாமி என்ற இராபார்ட்-டி-நோபில், அருளானந்த சுவாமி என்ற ஜான்-டி-பிரிட்டோ, வீரமாமுனிவர் என்ற கான்ஸ்டைன்டின் ஜோசப் பெஸ்கி, சவேரியார் என்ற செயின்ட் ஸேவியர், ஆன்றிக் பாதிரியார், ஜான் கோன்சல்வாஸ், ஜோடே-டி-ஃபாரியா மற்றும் பலர்.

சீர்திருத்த (புரொடஸ்டன்ட்) திருச்சபையின் சார்பில் தமிழகம் வந்து தமிழ்த் தொண்டாற்றியோர் பின்வருமாறு :

ஸீகன் பால்கு ஐயர் என்ற பர்தலோம்யூ சீகன் பால்க், பெஞ்சமின் சூல்சே, எல்லிஸ் துரை என்ற ஃப்ராங்கில் ஒயிட் எல்லிஸ், இரோனியுஸ் ஐயர் என்ற சார்லஸ் தியோப்பிலஸ் எட்வார்ட் ரென்டஸ், போப் ஐயர் என்ற ஜி.யு.போப். கால்ட்வெல் ஐயர் என்ற இராபர்ட் கால்டுவெல், பெர்ஸிவல் ஐயர் என்ற பேட்ற் பெர்சிவல், வில்லியம் டெய்லர் ஐயர். பவுரீசையர் என்ற ஜொஹான் ஃபிலிப் ஃபெப்ரீசியஸ், கிளார்க் ஐயர், ராட்லர் ஐயர், வின்ஸ்கோ ஐயர், த்ரூ ஐயர், ஃப்ரெட்ரிக் ஷ்வார்ட்ஸ், பால்டே, ஏரியல், கிரால், பூலர் யோவான் மார்டக், சீமிட், மோரிஸ், வில்சன். பீம்ஸ் மற்றும் பலர்.

தமிழ் இலக்கிய வரலாறும், தமிழ் நாட்டின் சமூக வரலாறும் இவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் ஆகும்.

தத்துவ போதக சுவாமி என்ற இராபார்ட்-டி-நோபில் (Robert-de-Nobil) (1577 - 1656)

இத்தாலி நாட்டிலிருந்து கி.பி. 1606-ல் தமிழகத்திற்கு வந்த இராபர்ட்-டி-நோபில் என்ற இயேசுவின் சபைப் பாதிரியார் ஓர் அந்தண ஆச்சாரியரைப் போல் வாழ்ந்தவர். தமிழ் உரைநடையை முதன் முதலாக உருவாக்கத் தொடங்கியவர் இவர் என்று கூறப்படுகிறது. **ஞான உபதேச காண்டம், மந்திரமாலை, ஆத்ம நிர்ணயம், தூஷண திக்காரம், சத்திய வேத இலட்சணம், சகுண நிவாரணம், பரம சூட்சும அபிப்ராயம், கடவுனிருணயம், புனர் ஜென்ம ஆட்சேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, இயேசுநாதர் சரித்திரம், தவசுச் சதம், ஞான தீபிகை, நீதிச் சொல், அநித்திய நித்திய வித்தியாசம், பிரபஞ்ச விரோத வித்தியாசம், தமிழ் போர்ச்சுகீச அகராதி** ஆகியவை அவர் எழுதியவைகளாகும். இவர் 42 ஆண்டுகள் தமிழ் நாட்டில் சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றியவர்.

வீரமா முனிவர் என்ற கான்ஸ்டைன்டின் ஜோஸப் பெஸ்கி (Constantine Joseph Beschi) (1680 - 1742)

இத்தாலியிலிருந்து 1700-ல் தமிழகம் வந்தடைந்த கான்ஸ்டைன்டின் ஜோஸப் பெஸ்கி என்ற கத்தோலிக்கப் பாதிரியார், வீரமாமுனிவர் என்ற பெயரில் கிறித்துவ மதத் தொண்டும், அளவற்ற தமிழ் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர் ஆவார். தேம்பாவணி என்ற காப்பியத்தின் மூலம் தேன்மொழியாம் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் இவர். **திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகமறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை, தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், லூத்தேர் இனத்தியல்பு** ஆகியவை இவருடைய படைப்புகள் ஆகும். தொன்னூல் விளக்கம் என்பது தமிழ் இலக்கண நூலாகும். தமிழில் முதன் முதலாக அகராதி எழுதியவர் இவரே. இந்த அகராதியின் பெயர் 'சதுரகராதி', மேலும் தமிழ் எழுத்துக்களில் முதன் முதலாகத் திருத்தங்களை உண்டாக்கியவரும் இவரே.

சீகன்பால்கு என்ற பத்தலோமேயுஸ் சீகன்பால்கு (Boatholomeus Ziegan Balg) (1682 - 1719)

ஜெர்மன் நாட்டிலிருந்து தமிழகம் வந்த பத்தலோமேயுஸ் சீகன்பால்கு, தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியில் தங்கினார். தமிழைச் சிறப்பாகக்

கற்றுத் தேர்ந்து, 1708 முதல் கிறித்துவ வேதாகமத்தின் பிற்பகுதியாகிய புதிய ஏற்பாட்டை மொழி மாற்றம் செய்யத் தொடங்கி 1711-ல் முடித்தார். தான் எழுதிய புதிய ஏற்பாட்டை அச்சேற்றுவதற்காக தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் தொடங்கினார். இதற்காக ஜெர்மனியிலிருந்து அச்சு இயந்திரத்தை கப்பல் மூலம் கொண்டு வந்தார். தன்னுடையப் புத்தகத் தயாரிப்புக்குரிய காகிதங்களை அருகில் உள்ள இடத்தில் அவரே தயாரித்தார். அந்த ஊரின் பெயர் "கடுதாசிப் பட்டறை" என வழங்கலாயிற்று. (கடுதாசி என்பது காகிதத்தின் பழைய பெயர்). இவர் மொழி மாற்றம் செய்த வேதாகமப் பகுதியாகிய புதிய ஏற்பாடே தமிழகத்தில் வெளியிடப்பட்ட முதல் கிறித்துவ வேதமாகும். வேதம் தொடர்பான வேறு புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிட்டார். தமிழகத்தில் அச்சேற்றப்பட்ட முதல் புத்தகங்கள் சீகன்பால்கு ஐயரின் புத்தகங்களே. புதிய ஏற்பாடு தவிர பழைய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பையும் அவர் தொடங்கியிருந்தார். தான் கற்றிருந்த தமிழை உரைநடையாக எழுதத் தொடங்கி, அதனை வேதாகம மொழி மாற்றத்திற்காகப் பயன்படுத்திய முதல் ஐரோப்பியர் சீகன் பால்கு ஐயரே.

பெஞ்சமின் சூல்சே

சீகன் பால்கு தொடங்கிய பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்பை பெஞ்சமின் சூல்சே என்பவர் தொடர்ந்து செய்து, 1728-இல் முழு வேதாகமத்தையும் வெளியிட்டார். இதுவே தமிழ் மொழியில் வெளிவந்த முழுமையான முதல் வேதாகமம். (இவர்கள் முதன்முதலாக உருவாக்கிய புதிய உரைநடைத் தமிழில் மெய்யெழுத்துகளுக்கு மேற்புள்ளிகள் இடும் வழக்கமும், வார்த்தைகளுக்கிடையே இடைவெளி விடும் வழக்கமும் இல்லை).

ஜோகன் பிலிப்பு ஃப்ரீசியுஸ் (Johan Philip Fabricius) (1710 - 1791)

ஜோகன் பிலிப்பு ஃப்ரீசியுஸ் என்ற ஜெர்மானியர் 1740-ல் தமிழகம் வந்து கிறித்துவ சமய நெறி பரப்புவதற்காக தமிழ் கற்றார். அவர் கற்ற தமிழ், அவரை தமிழ்த் தொண்டராக மாற்றியது. அவர் தமிழ் இலக்கண நூலும், தமிழ் - ஆங்கில அகராதியும், ஆங்கிலத் - தமிழ் அகாரதியும் இயற்றினார். ஜெர்மன் மொழி பக்திப் பாடல்கள் மொழி மாற்றம் செய்து **ஞானப்பாட்டு** என்ற பெயரில் வெளியிட்டார். சீகன் பால்கின் புதிய ஏற்பாடு மொழி பெயர்ப்பில் பல திருத்தங்களைச் செய்து 1752-ல் வெளியிட்டதுடன் வேதாகம ஒத்த வாக்கிய குறிப்புகளையும் வெளியிட்டார்.

சார்லஸ் தியோபிலஸ் எட்வர்ட் இரேனியுஸ் (Charles Theophilus Edward Rhenius) (1790 - 1838)

ஜெர்மன் நாட்டிலிருந்து 1814-இல் தமிழகம் வந்து சேர்ந்த சார்லஸ் தியோபிலஸ் எட்வர்ட் இரேனியுஸ் என்ற கிறிஸ்துவ சமயப் பணியாளர்

திருத்தப்பட்ட வேதாகமத்தையும், வேத விளக்க கைப்பிரதிகளையும், பக்தி நூல்களையும், கல்வி நூல்களையும் திருநெல்வேலியில் அச்சேற்றி வெளியிட்டார். இரேனியுஸின் புதிய ஏற்பாட்டு புத்தகமே வேதாகம சங்கத்தால் முதன்முதலில் வெளியிட்ட வேதப் புத்தகமாகும். இவர் பழைய ஏற்பாட்டு வேதாகமத்திற்கும் புதிய மொழி மாற்றத்தைச் செய்தார். இவர் ஆற்றிய சமூகத் தொண்டுகள் அளப்பறியது. மிகச் சிறந்த தமிழறிஞர்களிடத்தில் கல்வி கற்றுத் தமிழ் புலமை பெற்றவர். அவர் எழுதிய (1820-ல்) தமிழ் உரைநடையே இன்றையத் திருத்தமானத் தமிழ் உரைநடைக்கு ஆதாரமாக உள்ளது.

பீட்டர் பெர்சிவல் (Peter Percival) (1926)

தமிழகம் என்பது ஈழத் தமிழகத்தையும் உள்ளடக்கியதாகக் கருதப்பட்ட 'சுதந்திர இந்தியாவுக்கு' முற்பட்ட காலங்களில், ஈழத்திலிருந்துகொண்டு தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவ சமயப் பணியாளரின் எண்ணிக்கை அதிகமாகும். அவர்களில் பீட்டர் பெர்சிவல் என்ற ஐரோப்பியர் முக்கியமானவர். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். வேதாகமத்திற்கு மொழிபெயர்ப்பு செய்வதற்காகவே உரைநடைத் தமிழைக் கண்ட சீகன் பால்கு, ஃபப்ரீ, சியஸ், இரேனியஸ் ஆகியோரைத் தொடர்ந்து, குறைகள் களைந்து நிறைவு செய்யும் வகையில் வேதாகமப் புதிய மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்காக ஐவர் குழு ஒன்று தனதுப் பணியைச் செய்தது. இக்குழுவில் முக்கிய பங்கு வகித்தவர் பீட்டர் பெர்சிவல் ஆவார். இவர் சமய நூல்கள் சிலவற்றை எழுதியுள்ளார். தமிழ்ப் பழமொழிகள் திரட்டு ஒன்றினை வெளியிட்டார். ஆங்கிலத் - தமிழ் அகராதி ஒன்றும் வெளியிட்டார். 1855ல் சென்னையிலிருந்து 'தினவர்த்தமானி' என்ற வார இதழை வெளியிட்டார். தமிழில் பத்திரிகை வெளியிட்ட முதல் ஐரோப்பிய கிறித்துவர் இவரெனக் கூறலாம்.

ஹென்றி பவர் (Henry Bower) (1813 - 1885)

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரும், சென்னையில் பணி புரிந்தவருமாகிய போர் வீரர் ஒருவரின் மகனாக சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் பிறந்த ஹென்றி பவர் என்பவர் தனது மேற்படிப்பை இங்கிலாந்தில் படித்து முடித்து சென்னை திரும்பி போதகராகப் பணியாற்றினார். இவர் ஆங்கிலம் மட்டுமின்றி, இலத்தீன், கிரேக்கம், இந்துஸ்தானி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தவர்.

நன்னூலையும், பகவத் கீதையும் மொழி மாற்றம் செய்தார். ஐவர் குழு வெளியிட்ட வேதாகமத்திற்கு திருத்தங்களைச் செய்து, புதிய வேதாகமத்தை 1867-ல் வெளியிட்டார். அவர் வெளியிட்ட தமிழ்

வேதாகமமே இன்றளவும் தமிழக கிறித்துவர்களின் கரங்களில் உள்ளது.

ஷுல்ஸ் ஐயர்

செர்மனியிலிருந்து தமிழகம் வந்து தரங்கம்பாடியில் தங்கியிருந்த ஷுல்ஸ் ஐயர் 'பரதீஸ் தோட்டம்' என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்து 1749ல் அச்சேற்றினார். 'உண்மைக் கிறித்துவம்' என்ற நூலை 'ஞானக் கண்ணாடி' என்ற பெயரில் வெளியிட்டார்.

எல்லிஸ் துரை (Francies Whyte Ellis) (1819)

எல்லிஸ் துரை இங்கிலாந்திலிருந்து தமிழகம் வந்தவர். தமிழும் வடமொழியும் கற்றவர். வீரமாமுனிவரின் நூல்களைப் பதிப்பிக்கக் காரணமாக இருந்தவர். திருக்குறளின் முதல் பதிமூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதினார். இராமச்சந்திரக் கவிராயரைப் புகழ்ந்து இவர் பாடிய ஒரு பாடல் தனிப்பாடல் திரட்டில் இணைக்கப்பட்டுள்ளது. சீட்டுக்கவி இராமச்சந்திரக் கவிராயரின் நல்ல நண்பராக விளங்கினார். கிறித்துவ சமயப் பணியாளராக தமிழகம் வராமல், பிரித்தானிய அரசின் ஆட்சி நிர்வாகத்துறையின் பணியாளராக வந்து, கலெக்டராகப் பதவி வகித்த எல்லிஸ் துரை அவர்கள் தமிழுக்குத் தொண்டாற்றி தமிழனாகவே முகவை மண்ணில் நித்திரை செய்கிறார்.

ராட்லர் ஐயர் (Rev. J.P. Rottler)

ஃப்ரான்ஸ் தேசத்திலிருந்து 1776-இல் தரங்கம்பாடி வந்தவர் ராட்லர் ஐயர். இவர் எழுதிய தமிழ் - ஆங்கில அகராதி அக்காலத்தில் மிகவும் பிரபலமானது.

கால்டுவெல் ஐயர் (Rev. Robert Caldwell) (1814 - 1891)

அயர்லாந்து நாட்டவரான டாக்டர் இராபர்ட் கால்டுவெல் 1838-ல் சென்னைக்கு வந்து தமிழையும், தமிழகத்தையும் நேசித்த காரணத்தால் தன்னைத் தமிழராகவே மாற்றிக் கொண்டார். தமிழையும், திராவிட மொழிகளையும் முழுமையாகக் கற்றுத் தேர்ந்து மிகச் சிறந்த மொழியியல் ஆராய்ச்சியாளராக விளங்கினார். தமிழகத்தில் நாற்பதாண்டு கால சமயப் பணியை தொடர்ந்து 1877-ல் திருநெல்வேலி பிஷப்பாக பதவி உயர்வு பெற்றார். அவர் ஆற்றிய சமயப் பணிகளைவிட தமிழ்ப்பணியே அவரைப் பெருமைப்படுத்திய பணியாகும். திராவிட மொழிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' தமிழ் மொழியியல் துறைக்கு ஒரு கருவூலம் ஆகும். **நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம், ஞானஸ்நானம், நற்கருணை, வேத அகராதி,**

பரதகண்ட புராணம், ஞானக்கோயில் ஆகியவை அவரது படைப்புகள் ஆகும். திராவிட மொழிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்தறிந்த கால்டுவெல் அவர்கள், தமிழ்மொழி திராவிட மொழிகளின் முன்னோடியான மூத்த முதல் மொழி என்பதைக் கண்டறிந்தார். இத்தகைய சிறப்புடையத் தமிழை உலக மொழிக் குடும்பங்களுடன் ஒப்பு நோக்கிய அவர், "உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாக தமிழே இருந்திட வேண்டும்" என்ற தனது ஆய்வுக் கருத்தினை அறிவித்து, உலகில் உள்ள மொழியியல் அறிஞர்களின் கவனத்தை தமிழ் மீது திருப்பினார். கிறித்துவ சமயத் தொண்டாற்றித் தமிழகம் வந்த ஐரோப்பியக் கிறித்துவர், கீர்த்திமிகு தமிழுக்கு கிரீடம் சூட்டி மகிழ்ந்தார். உலகம் வியந்து நோக்கும் உயர் தனிச் செம்மொழியாம் செந்தமிழை, உலகுக்கு அன்றைய நாளில் (1870 – 1890) அடையாளம் காண்பித்தவர் அயர்லாந்திலிருந்து வந்த ஐரோப்பிய கிறித்தவரே.

போப் ஐயர் (Rev. G.U. Pope) (1820 - 1903)

இங்கிலாந்து நாட்டிலிருந்து சமயத் தொண்டாற்ற 1839-இல் தமிழகம் வந்த போப் ஐயர் அவர்கள் திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 43 ஆண்டுகள் சமயப் பணியாற்றுகையில் தமிழை முறையாகக் கற்றுப் புலமையில் தேறினார். தான் கற்ற தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்தார். இவைகளில் திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகியவை முக்கியமானவைகள் ஆகும். தமிழ்ச் செய்யுள் பலவற்றைத் தொகுத்து **'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்'** என்ற பெயரில் வெளியிட்டார். அவர் தனது நாடு திரும்பிய பின்னர், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றினார். தான் இறந்தபிறகு தனது கல்லறையில் தனது பெயருக்குக் கீழ் தமிழ் மாணவன் என்று எழுதும்படி கேட்டுக் கொண்டார்.

எல்.பி. லார்சன் (Dr.L.P. Larsan) (1862 - 1940)

டென்மார்க்கில் பிறந்து டேனிஷ் மிஷன் சங்கத்தின் வழியாய் ஊழியம் செய்திட சென்னை வந்தடைந்தவர் டாக்டர் எல்.பி. லார்சன். இவர் தமிழ் மட்டுமின்றி பன்மொழி கற்றுப் பாண்டித்யம் பெற்றவர். பெங்களூர் கிறித்துவ இறையியல் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியவர். இவர் ஆற்றியத் தமிழ்ப் பணிகள் குறிப்பிடத்தக்கவைகள் ஆகும்.

தெய்லர் ஐயர் (Rev. W. Taylor)

தமிழில் சிறு நூல்களை எழுதி வெளியிட்டவர். **வேதத்தாட்சி** என்னும் நூலையும், ஆங்கிலேயர்கள் தமிழ் கற்பதற்குரிய நூலையும் எழுதி 1861-ல் வெளியிட்டார். **வெற்றி வேற்கையை** ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

கிளார்க் ஐயர் (Rev. W. Clark)

இவர் தமிழில் சில நூல்களை எழுதி வெளியிட்டார். **தீர்க்க தரிசன வியாக்கியானம், போதா ஒழுக்கம்** மற்றும் சில நூல்களை 1865-ல் பாளையங்கோட்டையிலிருந்து வெளியிட்டார்.

உவின்ஸ்லோ ஐயர் (Rev. Dr. Winslow)

ஈழத்திலும், சென்னையிலும் சமயப் பணியாற்றியவர். 1823 முதல் 1840 வரையில் தமிழில் கிறித்தவ சிறு பிரசுரங்களை எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய **உவின்ஸ்லோ அகராதி** அந்நாட்களில் வரவேற்புடையதாக இருந்தது.

த்ரு ஐயர் (Rev. W.H. Drew)

இராமானுசக் கவிராயரிடத்தில் தமிழ் கற்று, தமிழ் நூல்கள் எழுதியவர் இவர். திருக்குறளின் சில அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

பதினாறாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழுக்கு தொண்டாற்றிய ஐரோப்பிய கிறித்துவர்களில் ஒரு சிலரை மட்டுமே இதுவரை கண்டோம். பட்டியலில் இணைக்கப்படாத இன்னும் பலருண்டு, குறிப்பாக வால்த் ஐயர் (1729 - 1741), சுவார்ச் ஐயர் (1706 - 1798) அருளானந்தர் என்ற ஜான்-டி-பிரிட்டோ, ஃபிரஞ்ச் பிஷப் சார்ஜன்ட் ஜூலியன் உவின்சன், வாக்கர் ஐயர், கிரால் ஆகியோர் முக்கியமானவர்கள்.

கல்வெட்டு ஆய்வுத்துறை மற்றும் அகழ்வாய்வுத் துறை

கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களை (Inscriptions) முதன்முதலில் தேடிக் கண்டுபிடித்து தொகுத்து ஆராய்ந்தறிந்து விளக்கி கூறியவர்கள் ஐரோப்பிய கிறித்துவர்களில் **பூலர், வில்லியம் டெய்லர்** ஆகியோர் முக்கியமானவர்கள். அகழ்வாய்வுத் துறையிலும் பிரித்தானிய அரசின் உதவியுடன் அவர்கள் ஆற்றியப் பணி அளவிடற்கரியது.

ஏட்டுச் சுவடிகளைக் கண்டறிதல்

எல்லிஸ் துரையும், ஏரியல் என்பவரும் ஏட்டுச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைத் தொகுத்தளித்தனர்.

நாட்டுப் பாடல்கள்

நாட்டுப்பாடல்களை சால்லஸ் ஈக்கோவர் என்பவர் தேடி சேகரித்து தொகுத்தளித்துள்ளார்.

ஐரோப்பியர் அல்லாத தமிழ்க் கிறித்துவர்கள் ஆற்றியத் தொண்டு

அந்தோணிக் குட்டி அண்ணாவியார்

இவர் திருநெல்வேலி மாவட்டத்தவர். வீராமாமுனிவர் காலத்தவர். சிறந்த தமிழ்ப்புலவர். இயேசுவைக் குறித்து பலப்பாடல்களை இயற்றியுள்ளார்.

அரிகிருஷ்ணப் பிள்ளை என்ற H.A. கிருஷ்ணப்பிள்ளை (1827 - 1900)

நெல்லை மாவட்டம் கரையிருப்பு என்ற ஊரைச் சேர்ந்தவர். தமிழாசிரியராகப் பணியாற்றியவர். புகழ்மிக்க **இரட்சண்ய யாத்ரீகம்** இவர் இயற்றியதேயாகும். 5 பருவங்களும், 4000 பாக்களும் கொண்ட இக்காவியத்தை இயற்றியதன் காரணமாக இவர் **கிறித்துவக் கம்பர்** என்று போற்றப்படுகிறார்.

இன்பகவி

நெல்லை மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். எட்டயபுரம் சமஸ்தானத்திலும், தஞ்சை சரபோஜி மன்னர் சமஸ்தானத்திலும் கவி பாடி புகழ் பெற்றவர். **குறவஞ்சி நாடகம்** இயற்றியவர். 1835 வரை வாழ்ந்தவர்.

கனகசபைப் புலவர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கவிராயர். **தனிக்கவிகளும், அழகர்சாமி பாடல், திருவாக்குப் புராணம்** முதலிய நூல்களும் இயற்றியுள்ளார்.

குமாரகுல சிங்க முதலியார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் நியாயசபை துவிபாஷியாகவும், அதிகாரியாகவும் இருந்தவர். **தனிக்கவிகளும், பதிவிரதை விலாசம்** முதலிய நூல்களை எழுதியவர்.

சதாசிவம் பிள்ளை (ஆர்னால்ட்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இவர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர். உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். **மெய் வேதாசாரம், திருச்சதகம், நன்னெறிமாலை, நன்னெறி கொத்து, சத்போதாசாரம், இல்லறநொண்டி, வெல்லையந்தாதி, நன்னெறி கதாசங்கிரகம், பாவலர் சாத்திர தீபகம், உலக சரித்திரம், வான சாஸ்திரம்** ஆகியவை இவர் எழுதிய நூல்களாகும்.

சற்குணம் உவின்பிரேட் ஐயர் (1810 – 1879)

திருநெல்வேலி மாவட்டம் வாழைபடி முதலூர் என்ற நாசரேத்தூரில் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், இலத்தின், கிரீக்கு, எபிரேய மொழிகளைக்

கற்றவர். **'பனியன்ஸ் ஹோலிவார்'** என்னும் ஆங்கில நூலை **திருப்போராடல்** என்னும் பெயரில் மொழி பெயர்ந்தவர். **தாவீதரசன் அம்மானை, உதிரமகத்துவம், இரத்தினாவளி நாடகக் கதை** முதலிய நூல்களை இயற்றியவர்.

சாமுவேல் பவுல் ஐயர் (1844 – 1900)

நற்போதகம் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். ராவ்சாகிப் என்ற பட்டம் பெற்றவர். **பரதேசியின் மோட்சப் பிரயாணம்** முதலிய பல நூல்களை மொழி பெயர்த்தவர்.

சிதம்பரம் பிள்ளை

யாழ்ப்பாணம் சங்குவேலியைச் சேர்ந்தவர். ஆங்கில தர்க்க இயல் விதிகளை தமிழில் பாட்டும் உரையுமாக மொழி பெயர்த்து **நியாய இலக்கணம்** என்ற பெயரிலும், **தமிழ் வியாகரணம்** என்னும் நூலையும் வெளியிட்டார்.

நயனப்ப முதலியார் (1779 – 1845)

புதுச்சேரியைச் சேர்ந்த இவர், தமிழாசிரியராகப் பணியாற்றியவர் **சிற்றம்பலக் கோவை, தஞ்சைவாணன் கோவை, ஒருதுறைக் கோவை, நாலடியார், திவாகரம் சூடாமணி நிகண்டு** முதலியவற்றை அச்சிட்டு வெளியிட்டவர்.

பிலிப்-டி-மெல்லோ (1723 – 1790)

இலங்கை கொழும்பில் வசித்து வந்த கேட்வாசல் முதலியார் என்ற சைமன்-டி-மெல்லோ என்பவரின் புதல்வர். உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். பல மொழிகளைக் கற்றறிந்தவர். கிறித்துவ ஊழியம் செய்து மதகுருவாக உயர்ந்தவர். **சத்தியத்தின் செயம்** என்ற நூலையும் **மருதப்பக் குறவஞ்சி** என்ற நூலையும் இயற்றியவர்.

முத்துசாமிப் பிள்ளை

இவர் புதுச்சேரியில் பிறந்த கவிராயர். பல மொழிகளையும் கற்றவர். எல்லிஸ் துரையின் தமிழ்ப்பணிக்கு துணையாக இருந்தவர். **வீரமா முனிவரின் சரித்திரத்தை** தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டவர். **திக்காரம்** என்ற நூலை எழுதியவர்.

வித்துவான் சாமிநாதப் பிள்ளை

புதுச்சேரியில் பிறந்த இவர். வாலிப வயதிலேயே பல நூல்களை இயற்றியவர். **நசரைக் கலம்பாகம், சாமிநாதன் பிள்ளைத் தமிழ், ஞானாதிக்காரயர் காப்பியம்** ஆகியவை முக்கியமானவை. இவர் எல்லிஸ் துரையின் தமிழாசிரியராக இருந்தவர்.

வேதநாயகம் பிள்ளை

மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்று அழைக்கப்படும் இவர் நீதிபதியாக தஞ்சை மாவட்டத்தில் பணியாற்றியவர். தமிழில் தேர்ச்சி மிக்கவர். **சர்வசமய சமரசக் கீர்த்தனை, நீதி நூல், பெண்மதிமாலை, பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம்** ஆகியவை இவரால் எழுதப்பட்டவை.

வேதநாயக சாஸ்திரியார்

1779-இல் பிறந்து தஞ்சையில் வாழ்ந்தவர். கவி பாடுவதில் வல்லவர். **பேரின்பக்காதல், இயேசுவின் பேரில் பதங்கள், ஜெபமாலை, பெத்லகேம் குறவஞ்சி, ஞானவுலா** ஆகியவை இவர் இயற்றியவர்.

அருமை நாயகம் என்ற சட்டாம் பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியைச் சேர்ந்த அருமைநாயகம் என்பவர் மிகச்சிறந்த வேத ஆராய்ச்சியாளர். நாசரெத் பிரகாசபுரம் அருகிலுள்ள ஒய்யாங் குடியைச் சேர்ந்தவர். இவர் பதினாறு மொழிகளில் புலமைமிக்கவர். இவர் 8000 புத்தகங்களுக்கு மேல் சேகரித்து தனது இல்லத்தை நூலகமாக்கிக் கொண்டவர்.

எட்வர்ட் துரைசாமி தாமஸ் (1888 – 1952)

பிரகாசபுரம் அருமை நாயகம் சட்டாம் பிள்ளையின் மூலம் தேவன் திருச்சபையின் போக்கில் ஒரு திசைத் திருப்பத்தை ஏற்படுத்தினார்.

இ. சாமுவேல் பிள்ளை

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர் எனக் கருதப்படும் சாமுவேல் பிள்ளை, **தொல்காப்பிய நன்னூல்** என்ற இலக்கண நூலை 1858-ல் வெளியிட்டார். இந்நூல் தொல்காப்பியமும் நன்னூலும் தமக்குள் கொண்டுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை குறித்து ஆய்வதாகும்.

ஆபிரகாம் பண்டிதர் (1859)

தஞ்சை மாநகரத்தின் ஒரு வீதி இப்பொழுதும் ஆபிரகாம் பண்டிதரின் பெயரைக் கூறிக் கொண்டிருக்கிறது. தனது வாழ்நாள் முழுவதையும் மருத்துவத்திற்காகவும், கிறித்துவின் மீதான பக்திப் பாடல்களுக்காகவும், இசை ஆராய்ச்சிக்காவும் செலவிட்டவர் ஆபிரகாம் பண்டிதர். இவருடைய **கருணாமிருத சாகரம்** என்ற இசை ஆராய்ச்சி நூல், 1345 பக்கங்களைக் கொண்ட இரு தொகுதிகளாகும். சுருதிகள், இராகங்கள், பழந்தமிழ்ப் பண் முதல் கருநாடக இராகம் வரையிலான ஒற்றுமை, வேற்றுமை குறித்து இந்நூல் ஆய்வு செய்கிறது.

கிறிஸ்தவ அச்சகங்கள்

ஒவ்வொரு நாட்டிலும் அச்சுக்கலை அறிமுகமான பின்னர்தான் மாபெரும் இலக்கிய மறுமலர்ச்சியும், மொழி வளர்ச்சியும் நடைபெற்றது. தமிழ்நாடும், தமிழ்மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆரம்பத்தில் சமயப் பிரச்சாரத்திற்காக தொடங்கப்பட்ட அச்சுக்கலை காலப் போக்கில் பல்வேறு சமுதாய மாற்றங்களுக்கும் இலக்கிய மறுமலர்ச்சிக்கும் துணை நின்றிருப்பதை அச்சுக்கலை வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது. சிலுவைப் போர் காலத்தில் எகிப்தில் நுழைந்த அச்சுக்கலையால் குரானின் செய்யுட்களும் தோத்திரப் பாடல்களும் அச்சடிக்கப்பட்டன.

இன்றைய அச்சுக்கலையின் தந்தை எனப் புகழப்படும் JOHN GUTENBERG தனித்தனி எழுத்துக்களைக் கொண்டு அச்சிடும் முறையை 1440இல் கண்டுபிடித்து முதன்முதலில் தோற்கடுதாசியில் (Parchment) விவிலிய நூல் (Bible) அச்சிட்டார். அருட்தொண்டர் சீகன்பால்கு காலத்தில் அவர் நம் மொழியாம் தமிழைக் கற்று காகிதம் செய்து, ஜெர்மனி நாட்டு அச்சு எழுத்துகள் பெற்று தரங்கம்பாடியில் விவிலியம் அச்சடித்தார். அதனைத் தொடர்ந்து பிற தோத்திர புத்தகங்களும் அச்சடிக்க முற்பட்டார். 1454இல் சமய உரிமைகள் பற்றிய சில அறிக்கைகள் (Letters of Indulgence) அச்சடிக்கப்பட்டன. 1455இல் புகழ் பெற்ற இலத்தீன் வேதாகமம் (Vulgate Bible) அச்சடிக்கப்பட்டது. கிறித்தவர்கள் நடத்திய சில அச்சகங்கள் பின்வருமாறு:

1. எஸ்.பி.கே. பிரஸ்
2. அமெரிக்கன் இலங்கை மிஷன் பிரஸ்
3. யாழ்பாணத்து சி.எம்.எஸ். பிரஸ்
4. ஆர்.சி. அச்சகம்
5. சி.எம்.எஸ்.அச்சகம்
6. கெஜட்டு பிரஸ்
7. ரிப்பன் பிரஸ்
8. லெனாக்ஸ் அச்சகம்

இவ்வச்சகங்கள் மூலம் கிறிஸ்துவின் வாழ்க்கை, கிறிஸ்துவ சாட்சிகள், முறையான இறையியல், இயேசுவின் போதனை, வேத பாடம், வியாக்கியானங்கள், இந்து மற்றும் கிறிஸ்தவம், இந்தியாவின் பிரச்சனை, இந்திய வரலாறும், சிந்தனையும், துண்டுச் செய்திகள் போன்ற செய்திகளை எல்லாம் அச்சுக்கலை வழி உலகத்துக்கு வெளியிட்டனர்.

இலக்கிய இலக்கண நூல்கள்

ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள், தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் கற்று, தமிழ் மொழியின் இனிமையை உணர்ந்தனர். தமிழை மனதாரப்போற்றினர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த பழங்கால இலக்கியங்களை அச்சு நூல்களாக வெளியிட்டனர்.

அவர்கள் அச்சிட்ட சில நூல்களின் பெயர்கள் இவை:

1. பஞ்ச தந்திரக்கதை
2. கதாமஞ்சரி
3. மிருதி சந்திரிகை
4. தமிழ் ஹரிச்சுவடி
5. வால்மீகி இராமாயணம்
6. நீதி நெறி விளக்கம்
7. இலக்கண வினா-விடை
8. பரமார்த்த குருகதை
9. எல்லீஸ் குறள்
10. செந்தமிழ் இலக்கணம்
11. ஒரு பத்திரத் திரட்டு
12. தேம்பாவணிக் கீர்த்தனைகள்
13. தமிழ் விளக்கம்
14. இலக்கணப் பஞ்சகம்
15. நன்னூல் ஆங்கில விளக்கம்
16. இலக்கணச் சுருக்கம்
17. Rudiments of Tamil Grammar
18. தமிழ் இலக்கண தீபிகை
19. தமிழ் இலக்கண சிந்தாமணி
20. Grammatica Tamulica

பத்திரிகைகள்

பாமரர்களுக்கும், படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கிறிஸ்துவர்களின் வருகைக்குப் பின்பே ஏற்பட்டது. தமிழ்மொழியை வேகமாக படிக்கவும், அமைதியாக வாசிக்கவும் கற்றுக் கொண்டனர். ஓய்வு நேரங்களில் சோம்பித்திரியாமல் படிப்பதற்கும், சிந்திப்பதற்கும் பத்திரிகைகள் உதவி செய்தன. சில பத்திரிகைகளில் தமிழும், ஆங்கிலமும் அச்சிடப்பட்டதால், தமிழுக்குரிய ஆங்கில வார்த்தைகளைப் படிக்க முடிந்தது. கிறிஸ்தவர்கள் வெளியிட்ட பத்திரிக்கைகள் பற்றி ஒரு தொகுப்பு இது :

1. மாசத் தினச் சரிதை (1812)
2. தமிழ் மாகசின் (1831)
3. பால தீபிகை (1840)
4. Missionary Gleance (1840)
5. நற்போதகம்
6. சுவிசேஷபிரபாவ விளக்கம் (1840)
7. ஜனசிநேகன் (1841)
8. உதய தாரகை (1841)
9. The Aurora (1842)
10. திராவிட தீபிகை (1874)
11. நேசத் தோழன் (1849)
12. பாலியர் நேசன் (1850)

13. மிஷன் பள்ளி மாகசின் (1851)
14. Tamil Quarterly Repository (1854)
15. தினவர்த்தமானி (1855)
16. District Gazette (1856)
17. தர்மப்பள்ளி போதகம் (1859)
18. தேசோபகாரி (1861)
19. The Lamp of Truth (1861)
20. அருணோதயம் (1863)
21. கற்பக விருட்சகம் (1864)
22. சத்திய வேதக் கொடி (1882)
23. போர்ச் சதகம் (1885)
24. வேத விளக்கம் (1890)

இவ்வகை நூல்கள் வழி பத்திரிகை உலகைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்த கிறிஸ்தவர்கள் தமிழ் பத்திரிகை உலகின் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர்.

இவ்வாறாக, கிறித்தவப் பெருமக்கள் நம் தமிழ்மொழியையும் தமிழ்நாட்டையும் மேம்படுத்த வல்ல பல்வேறு பங்களிப்புகளை வழங்கியுள்ள போதிலும், அவர்களது முக்கிய பணி, உருவ வழிபாட்டிலும் பிற மூடநம்பிக்கைகளிலும் மூழ்கிக்கிடந்த மக்களுக்கு மெய்யான கடவுளை இனம் காட்டி, அவர் வழியாகக்கிட்டும் மீட்பை அனுபவிக்கச் செய்து, அவரைச்சரியான முறையில் வழிபாடு செய்யும் மார்க்கத்தை உணர்த்துதலே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆகவே, அவர்கள் போதித்த அந்த மெய்க்கடவுளைப் பற்றிய மேன்மையான செய்திகளையும், அந்தமெய்க்கடவுள் பற்றிய உண்மைகள் நமது தமிழ் இலக்கியங்களிலும் நம்நாட்டு மறைநூல்கள் எனக்கருதப்படுபவைகளிலும் எவ்வாறு பொதிந்து கிடக்கின்றன என்பதையும் சற்றே ஆய்ந்தறிய முற்படுவோம்.

நாம் வணங்கும் இறைவனைப் புற அடையாளங்களால் அறிவதைவிட அவரது குணங்களால் அதாவது அவர் உலகில் செயல்பட்ட விதம், வாழ்வு, ஆற்றிய தொண்டு மூலம் அறிவது மேலானது. இந்திய நாட்டில் எந்த மதத்தையும் யாரும் தழுவ உரிமை உண்டு என்றாலும் இறைவனின் தன்மையறிந்து அவனை நாடுவது பயன் தரும். யாம் தொகுத்துள்ள செய்திகள் யார் இறைவன் என்று வெளிச்சம் போட முற்படவில்லை. மாறாக இறைவனின் தன்மைகளை பல்வேறான நூல்களின் சாட்சிகளோடு தருகின்றன. அவ்வாறே சித்தர்கள், தீர்க்கர்கள், ஞானிகள், அறிஞர்கள் அறிந்து, தாங்கள் அறிந்த உண்மைகளை பிறர் அறிய, பாடல்கள் வாயிலாக தந்தவைகளை இந்நூலில் தொகுத்துள்ளோம்.

2. மெய்க்கடவுள் யார்? எப்படிப்பட்டவர்?

இந்துசமய மறை நூல்கள் என்று சொல்லப்படும் நூல்களில் கடவுளைப் பற்றி எழுதிவைக்கப்பட்டுள்ள முக்கிய செய்திகளில் பொருள் இல்லாமல் இல்லை. ஆனால் அந்தக் கருத்தை, பொருளைப்புரிந்து கொள்ளாமல் அல்லது புரிந்து கொள்ள முயலாமல் இருக்கும் போது தான் அவை பயனற்று போகின்றன.

கடவுள் ஒருவர் உண்டு என்று எல்லாருமே ஒத்துக் கொள்கிறோம். அந்த ஒருவர் யார்? அவரின் தன்மை என்ன?

கடவுளுடைய தன்மை

அவர் பரிசுத்தமானவர், சர்வ வல்லவர், அன்புள்ளவர், வானத்தையும் பூமியையும் படைத்தவர். இந்து மக்களின் முக்கிய வேதங்கள் நான்கு, அவைகளின் முதல் இரண்டு வேதங்கள் கடவுளின் தன்மையைப் பற்றி மிக தெளிவாக அர்த்தத்தோடு சமஸ்கிருத மொழியில் கீழ்க்கண்டவாறு எழுதி இருக்கிறது.

ரிக் வேதம், புருஷ சூக்தம்

விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொள்ள வேண்டும்.

சாமவேதம்

சிருஷ்டி கர்த்தாவும் ஜகத் ரட்சகருமான பிரஜாபதி என்ற மூல புருஷர் தம்மைத் தாமே பலியிட்டார் என்றெல்லாம் மேற்கூறிய வேதங்களில் எழுதி இருக்கிறது. ஆகவே கடவுளே பூலோகத்துக்கு வந்து தன்னையே பலி செலுத்தினால்தான், மனுஷர்களின் பாவம் நிவர்த்தியாகும் என்று இந்து வேதங்களும் கூறுகிறது.

நான்கு வேதங்களிலும் சிவன், விஷ்ணுவைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மனிதனின் பாவங்களைப்போக்க பலிப்பொருளாக ஒப்புக்கொடுக்கப்படும் 'பிரஜாபதி' பற்றி ஏராளமான சுலோகங்கள் உள்ளன.

இது மிகவும் சரியானதும் ஒத்துக் கொள்ளக் கூடியதாகும். இது சரியென்றால் பாவநிவாரண பலியாக அவதரிக்க வேண்டிய தெய்வம் வந்து விட்டாரா? அப்படி என்றால் அவர் யார்? அந்த தெய்வத்தின் தகுதி யாது? தயவு செய்து இந்த கேள்வியை அதைப் படிக்கும் நீங்களே கேட்டுப் பாருங்கள். விடை காணுங்கள்.

ரிக் வேதம் (புருஷசூக்தம் பகுதியில்)

உலக மக்களின் உய்விற்காக பலியாக அவதரிக்க வேண்டிய பிரஜாபதியின் (அல்லது பலி செலுத்த என்ற குறிக்கப்பட்ட ஆட்டின்) 9 வித லட்சணங்கள் யாருக்குப் பொருந்துகிறது என்று ஆராய்ந்து பாருங்கள்.

பலி செலுத்தப்பட வேண்டிய ஆட்டின் லட்சணங்கள்; இந்த ஒன்பது லட்சணங்கள் இருந்தால் தான் அந்த பலியானது மனுஷனின் பாவத்தை நிவர்த்தி செய்ய முடியும்.

இந்த குறிக்கப்பட்ட லட்சணங்களோடு இயேசு கிறிஸ்துவை ஒப்பிட்டுப்பாருங்கள்:

1. பலி மிருகம் பழுதற்றது.	1. இயேசு பாவமில்லாதவர்
2. பலி மிருகம் தலையில் பலுசு செடியை சுற்ற வேண்டும்.	2. இயேசு தலையில் முள்முடி சுற்றப்பட்டது.
3. பலி மிருகம் சப்தமின்றி துன்ப வேதனையைச் சகிக்க வேண்டும்.	3. இயேசு அடிக்கப்படும் ஆட்டுக் குட்டியை போன்று வாய் பேசாது மௌனமாய் இருந்தார்.
4. பலி மிருகத்தின் உடலில் இருந்து ரத்தம் வழியும்.	4. இயேசுவின் கைகளிலும் கால்களிலும் ஆணி அடிக்கப்பட்டு இரத்தம் பீறிட்டது.
5. பலி மிருகம் பலி தூணோடு கட்டப்பட வேண்டும்	5. இயேசு சிலுவை மரத்தில் வைத்து ஆணியால் அடிக்கப்பட்டார்.
6. பலி மிருகத்தின் எலும்பை முறிக்கக் கூடாது.	6. இயேசுவின் கால் முறிக்கப்படவில்லை.
7. பலி மிருகம் தன் உயிரினைத் தானே விடும்.	7. இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் சத்தமாய் பிதாவை கூப்பிட்டு ஆவியை ஒப்புக் கொடுத்தார்.
8. பலி மிருகம் திரும்ப உயிரோடு எழுப்பப் பட வேண்டும்.	8. இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார்.
9. பலியினாலேயே பாவங்கள் மன்னிக்கப்பட பலி மிருகம் தன்னையே பலியாகத் தரும்.	9. இயேசுவை ஏற்று கொண்டவர்கள் இயேசு தனக்காக மரித்ததை நினைவு கூறும்படியாக பரிசுத்த இராபோஜன பந்தியில் அதைக் கைக்கொள்ளுகிறார்கள்.

சாமவேதம் - தாண்டிய மகாபிரமாணம் 2 ஆவது காண்டம் 7 ஆவது அதிகாரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது:

'சகஞ்ஞ பிரஜா சிருஷ்டுவ புரோவச்சா

'பிரஜாபதி' 'அதினா பிரஷ்டி விஷ்துப மேடிஓ

இஸ்பிக்கா மதுக்!'

'சர்வத்தையும் படைத்தவர் மனுக்குலத்தை மீட்க தாமே பலியானார்'என்பது இதன் பொருள்.

'ப்ரஜாபதிர் தேவப் யஹய் ஆத்யினம் யக்ஞம் இருத்வா ப்ராயசித்?'

மக்களுக்காக இறைவன் தம்மையே பலியாக்கி பாவநிவாரணம் செய்வார் என்பது இதன் பொருள். இதை (பைபிள்) இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசிகள் வாயிலாக ஏசாயா 53:5இல் முன்னுரைத்துள்ளது.

இப்படி இந்து வேதங்களின் எழுத்துப்படி குறிக்கப்பட்ட தெய்வ பலியின் லட்சணங்கள் இயேசுவைத் தவிர வேறு யாருக்குப் பொருந்தும்? நீங்களே யோசியுங்கள்.

பூர்வகால ரிஷிகள் ஆரண்யகங்களின் இருந்து தியானித்த ஜெபம்.

அஸத்தோமா ஸத் கமய
தமஸோமா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோமா அம்ருதம் கமய

தெளிவுரை:

சத்யமில்லாததிலிருந்து சத்தியத்திற்குள் வழி நடத்தும். இருளிலிருந்து வெளிச்சத்திற்குள் வழி நடத்தும். மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வழி நடத்தும்.

நானே வழி! நானே சத்யம்!! நானே ஜீவன்!!!

- இயேசு கிறிஸ்து யோவான்-14:6

இவ்வாறாக, மனிதரின் பாவங்களைப்போக்கத் தன்னைப் பலியாகக் கொடுப்பவனைப்பற்றி நான்கு வேதங்களிலும் பேசப்பட்டுள்ளது.

தமிழ்ச்சித்தர்களின் விளக்கங்கள்

இந்திய வேதங்கள் மட்டுமல்ல, அவற்றினும் அதிகமாகவும் தெளிவாகவும், நமது தமிழிலக்கியங்கள் மெய்க் கடவுளின் தன்மைகள் பற்றிப்பேசுகின்றன. குறிப்பாக, தமிழ்இலக்கிய உலகிலும் சமய உலகிலும் எவ்வகைக் கட்டுக்கும் அடங்காத புரட்சியாளர்களாக –

சிந்தனையாளர்களாக விளங்கிய தமிழ்ச் சித்தர்களின் பாடல்களில் இடம்பெறும் செய்திகள் நமக்கு வியப்பூட்டுவனவாகவும் தெளிவு தருவனவாகவும் உள்ளன. அவர்களில் முக்கியமான சிலரது பாடல்களைப் பார்ப்போம்.

திருமூலர் பாடல்

சித்தமார்க்கத்தின் மூலவராகக் கருதப்படும் திருமூலர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' (திருமந்திரம்) என முழங்கி, பல தெய்வ-சிறு தெய்வ வணக்கத்தை மறுக்கிறார்.

இறைவன் வாழும் ஆலயம் நமது உடல். இந்த உடலை நாம் கெடுத்துக்கொண்டால் இறைவனைத் தரிசிக்கும் பாக்கியத்தை இழந்துவிடுவோம் என்ற கருத்தை, **'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'** என்று பேசுகிறார். நம் ஆதிப்பெற்றோர் ஆதாம்-ஏவாள் செய்த பாவமும் இதுதானே?

மேலும் இறைவனை வணங்கச் சிறந்தவழி, நடமாடும் கோயில்களாக உள்ள நம்முடன் வாழ் ஏழைஎளியோர்க்குச் செய்யும் தொண்டே எனப் பின்வரும் பாடலில் வெளிப்படுத்துகிறார்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே.

தெளிவுரை:

அரண்மனை போன்ற பெரிய கோயிலில் உள்ள இறைவனின் மிகப்பெரிய உருவமாக (விஷ்வரூபம்) மனதில் எண்ணியவாறு வரைந்து அதனைக் கண்டு அச்சப்பட்டு ஏதேனும் ஒன்றைக் கொடுத்து திருப்தியாக்கி அதனால் நன்மை அடையலாம் என்றால் அதனால் எந்தப்பயனும் இல்லை.

மத்தேயு : 25:40 "மிகவும் சிறியவராகிய இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்"

அகத்தியர் அருளுரை

மேலும், இறைவன் பரமகுருவாக இவ்வுலகிற்கு வந்து, இறைவனை உணர்த்தி, மனித குலத்துக்கு மீட்பு வழங்கியதை, அகத்திய சித்தர், தமது 'அகஸ்திய ஞானம்' என்ற நூலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அகஸ்திய ஞானம் 30ல் 23-வது பாட்டு

வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி
மானிலத்தை யொரு நொடியில் வகுத்தே மண்ணில்

குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்திற் றானுதித்துக் குருவாய் வந்து
கனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சன்யாசி போலிருந்து தவத்தை காட்டி
அன்பான சித்தர்களை யிருத்திப் போட்டு
அகண்ட தலஞ் சென்ற வரை யண்டு வாயே

இப்பாடலின்படி உலகத்தைப் படைத்த தெய்வம் மனுஷரையும் படைத்த பின், அந்த மனுஷர்களின் மத்தியில் மனுஷனாக பிறந்து மனைவிகள் என்று யாரும் இல்லாமல் சந்நியாசி போல, கலியாணம் செய்யாமல் ஜீவித்து, தனக்கு சீஷர்களை ஏற்படுத்தி, அவர்களிடம் உலகமெல்லாம் தான் வந்த விவரத்தை அறிவிக்கக் கூறி, சீஷர்களை விட்டு மேலோகம் சென்ற அவரையே சேவிக்க வேண்டும் என்று அறிவிக்கும்படி இந்த மாமுனிவர் கூறுகிறார். இவர் கூற்றுப்படி பார்த்தால் ஆண்டவர் இயேசு தான் உண்மையான தெய்வம் என்பது அறியப்படுகிறது.

கொங்கண மகரிஷி கூற்று

மேலும், கொங்கண மகரிஷி எனும் மற்றொரு சித்தர் கூறுவதைப் பார்ப்போம்.

கடவுளுக்கு பெண்டேது? பிள்ளையேது?
காம குண லீலை முதலானதேது?
கடவுளுக்கு பகடி சீட்டு தாயமேது?
காடுகளில் வேட்டை கட்குத் திரிவதேது?
கடவுளுக்குக் காமிகளின் தொழிலே யில்லை
காருண்யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம்.

விளக்கம் :

கடவுளுக்கு (எல்லாம் கடந்த இறைவனுக்கு) மனைவி என்ற ஒன்று உண்டோ? இல்லை.

(காமம்) காதல் குணம் கொண்ட தாம்பத்திய விளையாட்டுகள் ஒன்று உண்டோ? இல்லை. மனிதர்களுடைய விளையாட்டுகளாகிய கேலி செய்தல், சீட்டாட்டம், தாய ஆட்டம் போன்ற விளையாட்டுகளை கடவுள் விளையாடுவது உண்டோ? இல்லை. களியாட்டங்கள் இறைவனுக்கு இல்லை.

காடுகளில் மனிதர்களைப் போல் வேட்டையாடி விளையாடும் காட்டு வாழ்க்கை தான் மண்ணுலகை ஆளும் இறைவனுக்கு உண்டோ? இல்லை.

கடவுளுக்கு உலகபற்றுமிக்க காமுகர்களின் தொழிலாகிய பெண் உறவு கொள்ளும் தொழில் இறைவனுக்கு உண்டோ? இல்லை.

இறைவனின் வேலை தான் என்ன? கருணை உணர்வாகிய காருண்யத்தால் மக்களை அரவணைத்து நடத்திச் செல்லும் பாரமான தொழில் உண்டு. மானிடப் பிறப்பில் உள்ள இழிகுணங்கள் இறைவனுக்கு இல்லை.

பிறசித்தர்கள், சித்தாந்தங்கள் தரும் விளக்கங்கள்

இவ்வாறே பட்டிணத்தார் எனும் சித்தரும் உருவ வழிபாட்டை மறுத்துப் பேசுகிறார்.

'சிறந்தபொம்மைகள் பற்பலபடங்கள்

சிந்தையிற்கனவிலும் மதியேன்' என்கிறார் அவர்.

'வள்ளலார்' எனப்போற்றப்பட்ட இராமலிங்க அடிகளார், 'ஒளிவழிபாடு' பற்றிக் கூறுகிறார். இறைவனை 'அருட்பெருஞ்ஜோதி' என அழைத்தார். 'நானே மெய்யான ஒளி' என இயேசு பெருமான் அறிக்கையிட்டதை இங்கே ஒப்பிட்டுப் பார்ப்போமாக! மேலும், சிவஞான போதம், திருவுந்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களிலும் இப்படிப்பட்ட கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

சிலுவையும் அதன் மேலான அர்த்தங்களும்

சிலுவை நினைக்கப்படுவதற்குப் பல காரணங்கள் இருப்பது போல, சிலுவையின் வடிவங்களும் பலவாக இருக்கின்றன என்பதை நாம் அறிதல் வேண்டும். இயேசு அறையப்பட்ட சிலுவை இலத்தீன் சிலுவை என்று அழைக்கப்படும் சிலுவை. அதுதான் இன்று அதிகப் புழகத்தில் இருக்கும் சிலுவை.

ஆனால் ஏனைய பல சிலுவை வடிவங்கள் ஆழமான அர்த்தக்ளோடு இருக்கின்றன. அவைகளையும் ஈண்டு காண்போம்.

The Latin Cross : The most commonly used form of cross.

இலத்தீன் சிலுவை : பொதுவாகப் பயன்படுத்தும் சிலுவை அமைப்பு.

The Calvary Cross : Sometimes called the Graded Cross. The three steps, from the top down, stand for Faith, Hope, Love.

கல்வாரி சிலுவை : சில வேளைகளில் கல்வாரி சிலுவை என்றழைக்கப்படும் மூன்று படிகள் உள்ளன. மேலிருந்து கீழாக முறையே பற்றுறுதி, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

3. மெய்ச்சமயம்

மெய்யான இறைவனைப் பற்றி மட்டுமல்ல, அந்த மெய்யான இறைவனை வழிபடும் மார்க்கமான மெய்ச்சமயம் எது என உய்த்தறியவும் நமது முன்னோர் நமக்கு வழிகாட்டியுள்ளனர்.

ஆரியர்கள் கற்பித்த சமயத்தைப் பற்றி தமிழ்ச் சமுதாயத்தைச் சார்ந்த சித்தர்களும், சமயச் சான்றோர்களும் கூறுவனவற்றைக் கண்டால் நமது சித்தம் தெளிந்து மெய்வழி எது? முக்தி மார்க்கம் எது? என நாம் ஆராய்ந்து அறியலாம். சில சான்றுகள் பின்வருமாறு;

ஔவையார்

கூவியழையுங்கோ கூப்பிட்டுச் சொல்லுங்கோ
ஆவியுள்ள நாளெல்லாம் ஆர்ப்பரித்து பாவிகாள்
கல்லோ தொழுகிறீர் "கர்த்தா" ஒருவரை
யல்லோ தொழுவதடுக்கும்?

தெளிவுரை:

கூவி அழையுங்கள், கூப்பிட்டுச் சொல்லுங்கள், ஆவியுள்ள உயிர் உள்ள நாளெல்லாம் பாடி, கத்தி பாவிகளே கல்லைத் தொழுகிறீர்கள். சிருஷ்டி கர்த்தர் ஒருவரையே தொழுங்கள் என்று ஔவையார் கருத்து.

குதம்பைச் சித்தர்

வேதியர் காட்டிய வீணான வேதத்தைச்
சோதித்துத் தள்ளேடி குதம்பாய்
சோதித்துத் தள்ளேடி

தேவருஞ்சித்தருந் தேடு முதல்வர்
மூவருமாவாரேடி குதம்பாய்
மூவருமாவாரேடி

மெய்த்தேவன் ஒன்றென்று
வேண்டாத பன்மதம்
பொய்த் தேவைப் போற்றுமடி குதம்பாய்
பொய்த் தேவைப் போற்றும்படி

தெளிவுரை:

வேதியர் அதாவது வேதம் ஓதக்கூடியவர்கள் காட்டிய வீணான வேதத்தை ஆராய்ந்து தள்ள வேண்டும். தேவர், சித்தர் தேடும் முதல்வர் மூவரும் ஆவாரே.

இந்த மெய்த்தேவனாகிய ஒருவரை வெளிப்படுத்தாத பல மதங்கள், பொய்யான தேவர்களை வணங்குகின்றன.

குதம்பைச் சித்தர் II

கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
புல்லறிவாகுமேடி குதம்பாய்
புல்லறிவாகுமேடி
காசி ராமேஸ்வரங் கால்நோகச் சென்றாலும்
ஈசனைக் காணுவையோ குதம்பாய் - ஈசனைக்
காணுவையோ.

தெளிவுரை:

கல், செம்பு, மரக்கட்டை வழிபட்டால் இறைவனை காண முடியுமா? அல்லது காசி, ராமேஸ்வரம் கால் நடையாக நடந்து சென்றாலும் ஈசனைக் காணுவாயா, இல்லை. நிச்சயமாகக் காணமுடியாது.

திருமூலர்

மலையரசன் சிவன் பிரமா விஷ்ணுதானும்
மாசில்லா நாதருட வழியுங்காணார்
நிலைபெருக மோட்சவழி காணாததாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே

தெளிவுரை:

இமயமலையின் அரசனாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு என்று சொல்லப்படுகின்ற மூவரும் குற்றமற்ற இறைவனின் வழியைக் காணாது திகைப்பர். இவர்கள் மூவரும் நிலைப்பெற்ற மோட்ச வழியை காணாததாலே இவர்கள் மூவரும் நீதியற்ற மனிதர்கள் என்று காட்டினோமே.

சங்கராச்சாரியார்

எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ்செய்தாலுஞ்
சொல்லரிய பேரின்பந் தோன்றுமோசொல்
பித்தர்களே! கல்லுகளை விலைக்கு வாங்கிப்
பிரானென்றே சீலையிலே முடித்துக்கொண்டு
செத்தபின்பு கயிலாயஞ்சேர்வோமென்றால்
சேர்வதில்லை, எரிநரகஞ் சேர்வீர்தானே.

தெளிவுரை:

கல்லை எப்படித்தான் வழிப்பட்டாலும் மதி கெட்டவர்களே உங்களுக்கு மோட்சம் உண்டா? தூய்மையுடன் தலைமுழுகித் தவம் செய்தாலும், சொல்லரிய பேரின்பம் தோன்றுமா? சொல் பித்தர்களே. கல்லுகளை விலைக்கு வாங்கி பிரம்மன் என்று சீலையிலே முடித்துக் கொண்டு வேண்டினாலும், இறந்த பின்பு நல்வாழ்வு அல்லது மோட்ச

வாழ்வு அடைவோம் என்றால் அடைவோமா நிச்சயம் இல்லை. எரிகிற அக்னி நெருப்பில் தான் போய் சேர்வோம்.

சிவவாக்கியர்

ஊரிலுள்ள மாந்தர்கள் ஒன்றதாய்க் கூடியே
தேரிலே வடத்தைப்பூட்டி செம்பை வைத்திழுக்கிறார்
ஆரினாலு மறியொண்ணாத ஆதிநாத கர்த்தரைப்
பேரில்லாத மாந்தர் பண்ணும் பரளிபாரும் பாருமே
கறந்தபால்முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர் புகா
உடைந்த சங்கினோசையும் உயிர்களும் உடல்புகா
விழுந்த பூவும் உதிர்ந்த காயு மீண்டுபோய் மரம் புகா
இறந்துபோன மானிடர் இனி பிறப்பதில்லையே!

தெளிவுரை:

ஊரில் உள்ள மனிதர்கள் ஒன்றாய் கூடி நேராக தேரைப் பூட்டி செம்பை வைத்திழுத்தனர். அறிய ஒண்ணாத முதல் தெய்வமான கர்த்தரைப் பெருமை இல்லாத மனிதர் பண்ணும் விளையாட்டைப் பாருங்கள்.

பசுமாட்டில் கறந்தபால் திரும்பவும் அதனுடைய கறந்த காம்பிற்கே செல்லுமா?

கடைந்த வெண்ணெய் திரும்பவும் மோருக்குத் திரும்புமா?

உடைந்த சங்கின் ஓசையும், உயிர்களும் உடல்புகாது.

விழுந்த பூவும், உதிர்ந்த காயும் மீண்டும் மரத்தில் புகாது. அது போலத்தான் இறந்த மனிதன் இனி பிறப்பதில்லை.

மறுபிறப்பு இல்லை என்ற கருத்துப்படி பார்த்தால் இறைவன் உண்மையானவன் என்பது தெளிவாக்கப்படுகிறது.

ஔவையார்

மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் - அவன் மனிதன்
சீலமுடன் உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்றும் அறிந்தார் இல்லை காண்

தெளிவுரை:

திருமாலும் மனிதன் தான், தாமரை மலரில் வீற்றிருக்கும் இறைவனாகக் கூறப்பட்ட பிரம்மனும் மனிதன் தான். ஆலகால விடத்தை உண்டவனாய். சொல்லப்பட்ட கருநீல கண்டம் (கழுத்தை) உடையவனும் 'சிவன்' மனிதன் தான். ஒழுக்க சீலமுடன் உற்றறிந்து உணர்ந்து வாழும் மனதிற்கினிய பெரியார்கள் கற்றும் அறிந்தார் இல்லை.

திருமூலர்

கழுதை மாடாடு பன்றி கடூரமாம் பாம்பு பல்லி
பழுதுள்ள மிருகந்தன்னை பராபரமதுவேயென்று
முழுதுமே மதிகளற்ற மூடராம் மனிதர்கூடி
தொழுதிடுந்தெய்வமென்று சொல்லுவதெந்த நீதம்

தெளிவுரை:

கழுதை, மாடு, பன்றி, பாம்பு, பல்லி இவற்றை எல்லாம் தெய்வம் என்று மதி அற்ற மூட மனிதர் வழிபட்டு தெய்வம் என்றால் அடுக்குமா?

உண்மையான உயிருள்ள தெய்வத்தைவிட்டு அஃறிணை, பிற உயிரை வழிபடல் முரண்பட்ட கருத்து ஆகும்.

வால்மீகர்

நில் என்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தனக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாத்திரங்கள் இருமூன்றாக
வயிறு பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பதுபோல் வேதாந்தங்கள்
கட்டினார் அவரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில் நால்சாதி அநேகஞ்சாதி
தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே

தெளிவுரை:

பெரியோர்கள் மொழியிலே நீண்ட உலகத்தில் நான்கு வேதம். வல்லமையாய் சாத்திரம் இரு மூன்று, புராணங்கள் 18, கல்லுகளைக் கரைப்பது போல் வேதங்களை கட்டினார்கள். மனிதர்கள் அவர் அவர் மொழியிலே, தொன்மையான உலகில் நால்சாதி அநேக சாதியாக தொடுத்தனர் ஏன் என்றால் அவரவர் பிழைக்க.

சிவவாக்கியர்

நட்டுவைத்த தேவரும் நடாது வைத்த தேவரும்
சுட்டுவைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டுவைத்த யிடத்தை விட்டெழுந்திராத தேவரை
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்குமாறு யெங்கனே

தெளிவுரை:

நட்டு, நடாது, சுட்டு, சுடாது, இட்டு, விட்டு என பல தேவர்களை வணங்குவது நியாயமா? அல்லது பொருந்துமா?

பாச்சலூர் மங்கை விருத்தம்

வித்தது மரத்தையீனும் மரமது வித்தையீனும்
பெற்றதாய் பிள்ளையீனும் பிள்ளையுமது வேயீனும்

மற்றொரு பிறப்புண் டென்று மானிடப் பசுக்களெல்லாம்
பற்றி நின்று அலைவதேதோ பாச்சலூர் கிராமத்தாரே!

தெளிவுரை:

(வித்து) விதை மரத்தை உண்டாக்கும். மரம் வித்தை உண்டாக்கும். பெற்ற தாய் பிள்ளை உண்டாக்குவாள், பிள்ளையும் அதைத்தான் ஈனும். இன்னொரு பிறப்பு இல்லை. கல், மண், மரம் எதை நாம் வழிபட்டாலும் உண்மையின் தேவன் கடவுள். சத்தியத்தின் தேவன் கடவுள் என்பது தான் உண்மையான கருத்து ஆகும்.

அகத்தியர்

பிறந்தவர்க்குப் பஞ்சபட்சி குருவால் கண்டு
பிரிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்
அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் தன்னை
அறியாதார் எரிநரகில் அழிந்து போவார்
வெறிபிடித்த சிவன், பெருமாள், பிரம்மா தானும்
மேலான தேவரல்ல, மனிதரப்பா
அறிவடைந்து நமைப்படைத்தோன் தனைத் தேட
அப்பனே புத்தியுள்ளோர்க்கு அறிவித்தேனே

தெளிவுரை:

பஞ்ச பட்சிகள் வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் உலகில் மனிதர் பிறக்கும் போது மேலே காட்டப்பட்ட பஞ்ச பறவைகளின் குரலொலியைக் கொண்டு மனித பிறப்பின் பலன் அறியும் சோதிட முறையைக் கொண்டு பிறப்பு இறப்பினை பகுத்து அறிய முடியாது மனிதர் இச்சோதிடத்தை தவறு என்றும் பொய் என்றும் கூறுவர்.

உண்மையான இறைவனைக் கண்டறிந்தவர்களுக்கு மோட்சம் உண்டு.

இவ்வுலகை படைத்தவனை அறியாதவர்கள் எரிநரகில் வீழ்ந்து அழிந்து போவார்கள். வெறி பிடித்த இறைவன் சிவன், பிரம்மா, பெருமாள் போன்ற இவர்கள் மேலான தேவர்கள் அல்ல. இவ்வுலகில் வாழ்ந்து மடிந்த மனிதர்களே! அறிவு நிறைந்த படைத்தோரைத் தேட அப்பனே மதியுள்ளோர்க்கு அறிவித்தேனே என்றார்.

மேலும், போகர் எனும் சித்தர் பல தெய்வங்களைப் பற்றித்தமது 'சத்தகாண்டம் 7000' எனும் நூலில் கூறியுள்ள கருத்துகள் சில:

போகர் (பாடல் 622)

செப்பிடிலச் சுப்பிரமணியன் என்பார் பாரு
சிறப்பான மனிதரல்லால் வேறொன்றில்லை

ஒப்புடன் நீ நினைத்து சுப்பிரமணியன்
ஓகோ, கோ; நாதாந்தக் கடவுளாச்சு
எப்படியும் நாதாந்தக் கடவுளுக்கு
எழிலான அவதார புருஷனென்றும்
இப்படியே கோடானுகோடி நாமம்
எழிலான சாஸ்திரங்கள் சொல்லலாச்சே!

தெளிவுரை:

விலையேறப்பட்ட செப்பு உலோகத்தினால் செய்யப்பட்ட சுப்பிரமணியன் என்பார் பாருங்கள். இவர் சிறப்பான மனிதர் அல்லால் வேறொன்றில்லை ஒப்பிட்டு பார்க்க அறியவன்.

நீ அறிந்து நினைத்த சுப்பிரமணியன் ஓகோ என்று ஓசையெழுப்பி உரைத்தாலும் இவன் இறைவன் அல்லன் மனிதனே.

இனிய நாதமுடையவன் அழகான எழில்மிக்கவன் அவதார புருஷன் என்று கோடான கோடி திருப்பெயர் இட்டு எழிலான சாஸ்திரங்கள் உரைத்தாலும் இவை அனைத்தும் புகழ்பெற்ற மனிதனாம்.

போகர் ஏழாயிரம் 6ஆம் காண்டம் (கணபதி) பாடல் - 507

அதிதமாங் கணபதியுமென்ற நாமம்
அவனிதனில் மனிதரல்லால் வேறொன்றல்ல
துதியுமுள்ள கடவுளாயிருப்பாரானால்
தொல்லுலகில் உயிரோடே யிருக்காரோதான்
பதிதமுள்ள பாடல்களில் சுவாமியென்றும்
பாடினார் வெகுகோடி மாந்தரப்பா
நிதிதமுள்ள கணபதியின் தேகந்தானு
நிலையாத அநித்திய மென்னவாச்சே?

தெளிவுரை:

மிக அதிகமாக 'கணபதி' என்ற பெயர் இந்த உலகினில் மனிதரல்லால் வேறொன்றல்ல; வணங்கத்தக்க கடவுளாயிருப்பானால் இவ்வுலகில் உயிருடன் இருக்கிறாரா? இல்லையே!!

வெகுகோடி மாந்தர்கள் பக்தியுள்ள பாடல்களில் சுவாமி என்று பாடினால் பயன் என்ன? இல்லையே. நிதமும் வாழ்கின்ற கணபதியின் தோற்றம், தேகம் உடையன் நிலையான அநித்தியன், என்று கூறினால் அவன் எங்கே?

போகர் சத்தகாண்டம் (பாடல் 601)
(அனுமார்)

உரைத்தாரே முன்னோர்சொல் நூற்களெல்லாம்
உத்தமர்கள் பாடிவிட்டார் அனுமாரைத்தான்

நிரைத்தாரே தேவனென்றும் கர்த்தனென்றும்
நிலையான இதிகாச புராணமெல்லாம்

பரைத்தாரே சிரஞ்சீவிப் பட்டமென்றும்
பாருலகில் வரம் பெற்ற ஆஞ்சனென்றும்
உரைத்தாரே மிருகமென்ற கூட்டந்தன்னை
வலுவான மிருகமென்று வசனித்தாரே.

தெளிவுரை:

முன்னோர் பலர் அனுமாரை உரைத்தனர், எண்ணற்றவர் தம் நூல்களில் அனுமாரை வைத்துப்பாடினர். அனுமனை தேவனென்றும், கர்த்தனென்றும் இதிகாச புராணங்கள் கொண்டு கூறினர்.

இவ்வுலகில் அழியாத சிரஞ்சீவி, வலிமை பெற்றவன் என்றும் கூறுகின்றனர்.

பலவரம் பெற்ற ஆஞ்சநேயன் என்று உரைத்தவர்களும் உண்டு.

இறுதியில் (இவர்கள்) அவனை வலுவான மிருகம் என்று சொல்லப்படும் (வானரங்கள்) குரங்குகளின் கூட்டென்றும் கூறினார்களே.

தொகுப்புரை:

சுப்பிரமணியன், கணபதி, அனுமார் என்று சொல்லப் படுபவர்களெல்லாம் தேவர்களல்ல. மனிதரே, இவர்களுக்குத் தெய்வப்பட்டம் கட்டி பல பொய்யான கதைகளைக் கட்டிவிட்டார்கள் என்கிறார் போக சித்தர்.

இதுவரை தமிழ்ச்சித்தர்களும் ஞானிகளும் மெய்யான கடவுளை வழிபடும் மெய்ச்சமயம் எது என்பது பற்றி எடுத்துரைத்த பல்வேறு கருத்துகளைச் சிந்தித்தோம். உலகத்தில் பலவித வழிபாடுகள் உள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றை அறிஞர்கள் இவ்வாறு அழைப்பர்.

FETISH WORSHIP	-	கல்லை வணங்குதல்
TOTEMISM	-	விலங்குகளை வணங்குதல்
SHAMANISM	-	மனிதர்களை வணங்குதல்
IDOL WORSHIP	-	சிலைகளை வணங்குதல்
NATURE WORSHIP	-	இயற்கையை வணங்குதல்
HERO WORSHIP	-	வீரர்களை வணங்குதல்
ANCESTRAL WORSHIP	-	முன்னோர்களை வணங்குதல்
SPIRIT WORSHIP	-	ஆவிகளை வணங்குதல்

இத்தகைய வழிபாடுகளைப் பெரும்பான்மையான மக்கள் கடைப்பிடித்தும், இவற்றின் வழியாக மக்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்ற நிச்சயம் பெறுகிறார்களா? இவ்வுலக

வாழ்வுக்குப் பின் மோட்சபாக்கியத்தைப் பெறுவோம் என்ற நம்பிக்கையைப் பெறுகிறார்களா என்று சிந்திக்க வேண்டும்.

விவிலியத்தின் விளக்கம்

பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் 1:20 முதல் 23 முடிய

காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே உலகம் உண்டானது முதற் கொண்டு தெளிவாய் காணப்படும். அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைபடுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும், தங்களை ஞானிகள் என்று சொல்லி அழிவில்லாத தேவனுடைய மகிமையை, அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

மதங்களின் பிறப்பு

இத்தகைய வழிபாடுகளின் அடிப்படையில், பல மதங்கள் உருவாகின்றன. இந்தியாவில் பின்பற்றப்படும் மதங்கள் பற்றிய சில வரலாற்றுச் செய்திகளையும் காண்போம்.

வரலாற்று ஆய்வு

1) இந்தியர்கள் பின்பற்றி வரும் எந்த மதமும் இந்தியாவில் தோன்றியதல்ல. கி.மு. 15ஆம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் மீது படை எடுத்து வெற்றிகண்ட ஆரியர்கள் தங்களது (ஆரிய) இந்து சமயத்தை இந்தியாவில் புகுத்தினர். (கி.மு. 200 கி.பி.250இல் இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் புனையப்பட்டன).

2) ஆறு இனங்களை உள்ளடக்கிய புத்திக்கூர்மையுள்ள, மத்திய ஆசியாவைச்சேர்ந்த நெருப்பை வணங்கும் ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்ததும் மக்களைப்பிளவுபடுத்தி அரசர்களை வசப்படுத்தி புத்தமதக் கோயில்களை மாற்றியும், சிலைவணக்கத்தை ஏற்காத ஏராளமான சித்தர்களைக் 'குகையிடிக் கலகம்' என்ற பெயரில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கொன்றும், கழுவில் ஏற்றியும், மெய்வழி மார்க்கத்தைக் காட்டும் ஏராளமான நூல்களை எரியூட்டியும் மறைத்தும் மாற்றி எழுதியும் மனித சமுதாயத்திற்குக்கேடு விளைவித்துவிட்டனர். இந்தியாவில் பக்தி மார்க்கம் சரிவடைந்து பொய்யான மாறுதல்கள் பல புகுந்தன.

3) 'இந்து' என்பது ஒரு நில பரப்பையே குறிக்கும். சிந்து சமவெளி, இந்து சமவெளி, இந்துஸ்தான், இந்தியா. கி.பி 8ஆம் நூற்றாண்டில்

எழுதப்பட்ட ஒரு நூலிலிருந்து இதைத்தாம் அறிந்ததாக பண்டித ஜவகர்லால் நேரு தமது 'Discovery of India' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பைபிளில் எஸ்தர் என்ற புத்தகத்தில் 'இந்து தேசம்' என இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (எஸ்தர் 8:9)

4) கி.மு. 563இல் நேபாளத்தில் பிறந்த புத்தர் புத்த சமயத்தை உருவாக்கினார்.

5) கி.மு. 4இல் இயேசு கிறிஸ்து இஸ்ரேல் நாட்டில் பெத்லகேமில் அவதரித்தார்.

6) கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரை இஸ்லாம் சமயம் இந்தியாவில் பரவியது.

7) ஆரிய சமயம் பாரசீக நாட்டில் (ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக் பகுதிகளைக் கொண்டது) உருவானது. கிறித்தவமும், இஸ்லாமிய மதமும் மெசப்பத்தோமியா பகுதியில் (ஈரான், ஈராக், இஸ்ரேல்) தோன்றியது.

8) கி.பி. 48-49இல் இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான பரிசுத்த தோமா தச்சனா (பஞ்சாப்)வுக்கு வந்து இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் எனப் போதித்தார். கி.பி. 52இல் பரிசுத்த தோமா சேர நாட்டின் கொடுங்கலூர் துறைமுகத்தில் வந்திறங்கினார். முதல் நூற்றாண்டிலேயே பாலூர், முசிறி, பாரூர், கோகமங்கலம், சாயல், நிராணம், கொல்லம் ஆகிய இடங்களில் சபை நிறுவப்பட்டது என மத ஆராய்ச்சியாளர் டாக்டர் பர்க்குவார் எழுதியுள்ளார்.

9) கி.பி.522இல் கடற்பயணி "காஸ்மோஸ்" என்பவர் தமது "இண்டிகோ ப்ளுயேட்டஸ்" என்ற நூலில் தான் பயணம் செய்த நாட்களில் இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் மிகப் பெருமளவில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 318இல் சேரமான் பெருமான் என்ற கிறிஸ்தவ அரசன் ஆட்சி செய்ததாக 1940இல் கொச்சி அரண்மனையில் கண்டெடுக்கப்பட்ட ஓலைச் சுவடியில் குறிப்பிட்டுள்ளது.

10) கி.பி.1498 மே மாதத்தில் வாஸ்கோடகாமா கேரளா கள்ளிக்கோட்டையில் வந்து இறங்கிய போது 2,00,000 கிறிஸ்தவர்கள் அங்கு வாழ்ந்து வந்ததாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவம் நல்லொழுக்கத்தைப் போதித்து; நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்து; எழுதப் படிக்க கற்றுக் கொடுத்ததால் மக்கள் விடுதலை உணர்வு பெற்று, சுதந்திரம் பெறப் போராடுவர் - எனக் கருதி கி.பி.1813 வரை மிஷனரிகள் இந்தியாவுக்குள் வருவதை கிழக்கிந்தியக் கம்பெனி தடுத்து வந்தது.

கிறிஸ்தவம் ஒரு ஆங்கில மதம், அதைக் கடைபிடித்தால் இந்தியா மீண்டும் ஆங்கிலேயருக்கு அடிமையாகிவிடும். இயேசு கிறிஸ்து ஒரு ஆங்கிலேயர் என்ற கருத்து உண்மைக்குப் புறம்பானது. ஒரு ஜெர்மன் ஓவியர், இயேசு கிறிஸ்து தமது நாட்டவராக இருந்தால் எவ்வாறு இருப்பார் எனக் கற்பனை செய்து வரைந்த ஓவியம் நன்றாக இருந்ததால், அதையே எல்லோரும் படமாகத் தங்கள் இல்லத்தில் வைத்துள்ளனர். உண்மைக் கிறிஸ்தவம் சிலை வணக்கம், பட வணக்கம் இவற்றுக்கு எதிரானது. சிலை வணக்கம் கூடாது என பத்துக் கட்டளையில் கடவுள் தனது தாசனாகிய மோசே என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

கிறிஸ்தவ சமயம் ஆசியாவில் தோன்றி; அங்கிருந்து இங்கிலாந்துக்குச் சென்று அவர்கள் இந்தியாவை ஆண்டபோது அவர்கள் மூலமாக வந்த கிறிஸ்தவ மதம் அனைவரும் பின்பற்ற இயலாத வேறொரு ரூபத்தில் அவர்களது கலாச்சாரம் இணைந்த கலப்பட மதமாக இந்தியாவிற்குள் வந்து கி.பி முதல் நூற்றாண்டில் கடைப்பிடிக்கப்பட்ட "மெய் வழி" மறக்கப்பட்டு ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்றாக அறிமுகப்படுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்து நம்மைப் போன்றவரே. உலகத்தின் மையமான நாட்டில்; ஊரில் அவதரித்தார். அதாவது ஆசிய கண்டத்தில் உள்ள பலஸ்தீன நாட்டில் பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்தார்.

(சுவாமி விவேகானந்தர் அவர் எழுதிய ஞானதீபம் சுடர் 2 பக்கம் 453)

"இயேசுவை மனிதர் என்று சொல்லுகிறவர்கள் தெய்வ நிந்தனை என்ற குற்றம் புரிந்தவர்கள்". (சுவாமி விவேகானந்தர்-ஞானதீபம்-சுடர் 7 பக்கம் 270).

"இயேசுநாதரைப் பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலம் மூடுக்குகளிலும் பிரச்சாரம் செய்யுங்கள்". (சுவாமி விவேகானந்தர் - ஞானதீபம் சுடர் 2 பக்கம் 128, 129)

மகாகவி பாரதியார்

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேச மாமரியா மகதலேனா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்
தேவர் வந்து நமக்குட் புகுந்தே

நாசமின்றி நமை நித்தம் காப்பார்
நம் அகந்தையை நாம் கொன்றுவிட்டால்

தெளிவுரை:

மகாகவி பாரதியார் பாடலின் உட்கருத்தை ஆராய்ந்து பார்த்தோமென்றால் ஈசன் என்பது இங்கு இயேசுவை குறிக்கிறது. சிலுவையில் மாண்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை மாமரியா மகதலேனா நேரிலே இக்காட்சியை பார்த்தாள். ஆதலால் உலக மக்களே கேளுங்கள். இதன் உட்பொருளை அறியுங்கள். தேவன் நமக்குள் வந்து, தீமையின்றி தினமும் காப்பார். எப்போது என்றால் நம் தீய எண்ணத்தை விட்டுவிட்டால் நம்மைக் கண்மணி போல் காப்பார்.

அரபு மொழியில் ஈசா என்பது இயேசுவின் பெயராகும். தமிழில் 'ன்' என்ற ஆண்பால் ஒருமைப் பாட்டு விகுதியைச் சேர்த்து ஈசன் என்பர்.

திரு.வி.கல்யாண சுந்தரனார்

அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனே! போற்றி போற்றி
மன்பதை பாவந்தீர்க்க மரித்தவா! போற்றி போற்றி
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே! போற்றி போற்றி
என்பிழை பொறுக்கும் ஏசுஎந்தையே! போற்றி போற்றி

(கிறிஸ்துவின் அருள்வேட்டல்)

தெளிவுரை:

'தமிழ்த் தென்றல்' எனப் போற்றப்படும் திரு.வி.க அவர்கள் சிறந்த படைப்பாளர். அவருடைய படைப்புக்கள் மிகவும் போற்றப்படுகின்றன. இவருடைய பாடல் வரியில் இயேசுவைப் பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன.

அன்பிற்கு அடையாளமானவனை வணங்கி, மனிதனின் பாவத்தை போக்கப் பிறந்தவனை வணங்கி, மகிழ்வுடன் திரும்பவும் இம்மண்ணுலகில் உயிர்த்தெழுந்தவனை வணங்கி, எல்லா குற்றங்களையும், பாவங்களையும் மன்னிக்கும் தன்மையுள்ள ஏசு தந்தையே உன்னை வணங்குகிறேன் என்ற செய்தி வழி, இயேசுவே அன்பின் கடவுள் என்பது உறுதிப்படுகிறது.

முன்னரே குறிப்பிடப்பட்ட போகசித்தர், நேரடியாகவே இயேசு கிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் பற்றிப் பாடியுள்ளது காண்க;

போகர் சத்த காண்டம் (பாடல் 219)

திண்ணமாய் எகிப்து தேசங் கண்டேன்
திடமுள்ள மாதாவின் தேசம் போனேன்

வண்ணமுடன் யூதாவில் கோடான கோடி
வனந்தனிலே ரிஷிகளப்பா சொல்லொணாது
என்னவே ஏசுவின்தன் மகிமைமெத்த
எடுத்துரைத்தார் சீசர்வர்க்க மனேகம்பேர்கள்
சன்னலுடன் மலையெலாஞ்சுற்றி வந்தேன்
சாங்கமுடன் ஈசாக்கு சமாதியுண்டு
காட்டிவந்தேன் சீனபதி தன்னில் சென்றேன்
கடவுளாம் ஏசுவின்றன் காட்சிகண்டேன்

தெளிவுரை:

இப்பாடலில் போகர் ஏசுவின் காட்சிகளை மிக அழகாக எடுத்துரைக்கிறார். உயர்ந்த எகிப்து தேசத்தை பார்த்தேன். திடமுள்ள மாதாவின் தேசம் போனேன். பல வித நிறங்களுடன் யூதாவில் எண்ணிச் சொல்லமுடியாத முனிவர்களைக் காட்டிலே கண்டேன். சீசர்கள் ஏசுவின் மகிமையை எடுத்துரைத்தனர். அனேக பேர்களுடன் மலைகளைச் சுற்றி வந்தேன். அங்கு அமைதியான ஈசாக்கின் கல்லறை உண்டு. அதையும் பார்த்து வந்தேன். அங்கு கடவுளாகிய ஏசுவின் காட்சி கண்டேன்.

அவர் பாடல் கூற்றுவழி இயேசு உண்மையான தேவன் என்பது விளக்கப்படுகிறது.

போகர் காண்டம் (பாடல் 917)

அழியாது மாண்டவர்களெல்லாருந்தான்
அப்பனுட பதிதனிலே காணலாகும்
அழியாது யாத்மந்தா னெந்த நாளும்
அமரரது பதிதனிலே காணலாகும்
அழியாது மாண்டவர்களொரு காலந்தான்
அப்பனே ஒரு காலமெழுந்திருப்பார்
அழியாது ஒரு காலுமவர் தமக்கு
அப்பனே, நீதியுண்டு, கேள்வியுண்டே.

தெளிவுரை:

இறந்தவர் எல்லாம் மேல் உலகில் காணுவர் அதற்கென்று ஒரு காலம் வரும் எழுந்திருப்பர் என்ற கருத்து வழி இயேசுவின் வருகையின் போது ஆத்மா அத்தனையும் உயிர்த்தெழும் செய்தி இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

சித்தர்களும், இறையருள் பெற்றோரும் எழுதியுள்ள பாடல்களில் ஒரு சிலவற்றைத்தான் நாம் மேலே கண்டவை. இவற்றில் கொள்ளத்தக்கவைகளைக் கொண்டு அல்லவைகளை நீக்கிவிட்டால்

"ஆம்" என்று சொல்லத்தக்கது எது? மெய்யான கடவுள், மனிதகுலத்தின் பாவங்களுக்காகத் தன்னைப் பலியிட்டவராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட தெய்வபலியாக – பரிசுத்தமான கடவுளாக இருக்கக்கூடிய எல்லா தகுதிகளும் இயேசு கிறிஸ்து ஒருவருக்கே உண்டு என்பதல்லவா? அந்த இயேசு பெருமான் விடுக்கும் அன்பழைப்பைக் கேளுங்கள்.

மெய்ப்பொருள் கண்ட சித்தர்கள் எல்லா சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வ சமரச சன்மார்க்கத்தினர். அவர்கள் எழுதிய பாடல்கள் பலவாகும். அவற்றுள் 'அகத்தியர் ஞானம்' என்ற பெயரில் அவர் எழுதியுள்ள முப்பது பாடல்கள் மிகச் சிறப்பானவை. மெய்ப்பொருளை உணர நமக்குத் தெளிவாக வழிகாட்டுபவை. அவற்றுள் சில பாடல்கள் இங்கு தெரிவு செய்யப்பட்டு 'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்' எனும் நூலில் திரு. எஸ். தாயப்பன் அவர்கள் எழுதியுள்ள கருத்துரைகளோடு கீழே தரப்பட்டுள்ளன.

அகத்தியர் பாடல்கள்

1. நாலு வேதங்களின் மயக்கம்

"பாரப்பா பூரணத்தின் மனதையொட்டி
பரப்பிரம நாதமது சிவத்தில் சேர்த்து

தேரப்பா சக்தியையும் சாம்ப லாக்கி,
சிவ சிவா என்ற பொருள் கைக்குள்ளாக்கி,

போரப்பா நால்வேத மயக்க மாக்கி,
பூமியிலே மானிடரை மோசம் போக்கி,

வேரப்பா சித்தரும் பூரணம தாக்கி,
வேடிக்கை போல்கட்டி விடுத்தார்தானே"

கருத்துரை :

தெய்வத்தன்மையோடு இசைந்து போவது போல சிவனுக்கு அமைத்து அவரையே பரப்பிரம்மம் என்பது போல ஆக்கி, சத்தியத்தை சாம்பல் ஆக்கி அழித்துபோட்டதை ஆராய்ந்து அறிந்து கொள். நாலு வேதங்களை வேடிக்கை போல கதை கட்டி எழுதி இந்த பூமியின் மக்களை தந்திரமாய் மயக்கி மோசம் போக்கி விட்டனர்.

2. ஆறு லட்சம் கிரந்தங்களை 30க்குள் அடக்கிக் கொடுத்துள்ளேன்.

"ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு;
ஆறு லட்சம் கிரந்தமதை அருளிச் செய்தேன்;

பேச்சப்பா பூரணத்தின் மூன்று லட்சம்
பேசினேன் ஆயிரத்துள் அடக்கிப் போட்டேன்;

காய்ச்சப்பா ஆயிரத்தை ஐந்நூ றாக்கிக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக்குள்ளே

மூச்சப்பா நூறதுவை ஐம்பதாக்கி
முகித்திட்டேன் முப்பதுக்குள் முக்கியந்தானே!"

கருத்துரை :

நான் ஆறு லட்சம் கிரந்தங்களை முதலில் எழுதினேன். அவைகளை பூரணப்படுத்த ஆராய்ந்த போது அவைகளில் மூன்று லட்சம் வெறும் பேச்சு என உணர்ந்தேன். ஆகவே அந்த மூன்று லட்சத்தை 1000 பாடல்களில் அடக்கிப் போட்டேன். அவைகளையும் ஆழமாய் 500 ஆக ஆக்கினேன். அவைகளையும் நுணுகி ஆராய்ந்து நூறாக்கினேன். நூறையும் ஐம்பதாக்கினேன். முடிவில் முக்கியம் கருதி அவைகளை முப்பது பாடல்களுக்குள் அடக்கிவிட்டேன.

3. பரம் பொருளின் ஆறு குணங்களும், பத்து நெறிகளும்

"கருதினார் இப்படியே சொன்னேன் அப்பா!
கயிலாய இடம் எங்கே? கருவூர் எங்கே?

பருதியடா உலகமது பனியின் வாழ்வு
பராபரனார் ஆறு சாயம் பகர்ந்த சோதி!

ஒருவருமே நிகராத வஸ்து அப்பா!
ஓகோகோ மயங்காதே; ஊன்றிப்பார்த்து,

திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து
தெரிசிப்பாய் நெறி பத்தும் தெரிசிப்பாயே!"

கருத்துரை :

கயிலாயத்தின் இடம் எங்கே இருக்கிறது? கருவூர் எங்கே இருக்கிறது? இந்த பூமியில் மனிதரின் வாழ்வு சூரியனைக் கண்ட பனியைப் போன்றது. பராபரனாகிய கடவுள் ஆறு குணங்களைக் கொண்ட ஜோதி. எப்பொருளுமே அவருக்கு ஒப்பாக முடியாது. ஆகவே மயங்காதே! நன்கு கவனித்து முப்பொருளை அறிந்து உணர்ந்து கொள். பத்து நெறிகளை நீ காண்பாய்.

4. நம்மைப் படைத்தவரை தேட வேண்டும்

"பிறிந்தவர்க்கு பஞ்ச பட்சி குருவால் கண்டு
பிறிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்;

அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் தன்னை
அறியாதார் எரிநரகிலழிந்து போவார்;

வெறி பிடித்த சிவன், பெருமாள், பிரமாதானும்
மேலான தேவரல்ல; மனிதர் அப்பா!

அறிவடைந்து நமை படைத்தோன் தன்னைத் தேட
அப்பனே புத்தியுள்ளோர்க்கு அறிவித்தேனே!"

கருத்துரை :

இறந்தவர்க்கு பஞ்ச பட்சி சாஸ்திரம், குறிகேட்டல் போன்றவற்றை ஒரு குருவினிடத்தில் விசாரித்துக் கேட்டு அறிந்து கொண்டாலும் அதிலுள்ள பொய்யையும் மெய்யையும் வேறுபடுத்தி அறியும் தகுதி இல்லாதவர்களுக்கும் நான் சொல்வது பொய் என்றே படும். தன்னை படைத்த கடவுளை அறிந்தவனுக்கு மோட்சமுண்டு, அப்படி அறியாதவர்கள் எரிநரகத்தில் அழிந்து போவார்கள். சிவன், பெருமாள், பிரம்மா ஆகியோரெல்லாம் மேலான தேவர்கள் அல்லர். அவர்கள் வெறும் மனிதர்கள் அப்பா! நல்லறிவு பெற்று நம்மை படைத்த கடவுளை தேடுகிற புத்தியுள்ளவர்களுக்கு இதனை அறிவித்தேன்.

5. இதினாலெல்லாம் பரலோகம் போக இயலுமா?

"சங்கமதில் பரப்பிரம்மம் ஒன்றைப் போற்றி,
சகல பவம் தீர நன்மைதனையே சாற்றி,

துங்கமுறும் இலிங்கம் என்றும் பூசை செய்து
சுனை கெட்ட மாடப்பா சாம்பல் பூசி

எங்கணும் போய் சிவ சிவ என்று அலைந்து, ஏங்கி
எரிநரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்

பொங்குதிரை கடல் மூழ்கி தீட்டை பெற்றால்
புகழ்கிரியாம் கயிலாயம் போகலாமோ?

கருத்துரை :

பக்தர்கள் கூடி பரப்பிரம்மாகிய மெய் கடவுளையே வணங்குவதாக நம்பிக் கொண்டு, பாவங்களை தொலைக்க தானதர்மங்களைப் போன்ற நன்மைகளைச் செய்து இலிங்கத்தை என்றும் பூசை செய்து திரிவது சுணை கெட்ட மாட்டின் நிலையாகும். சாத்தான் செய்யும் இடர்கள் இவைகள் என்று எண்ணாமல் உடம்பெல்லாம் சாம்பல் பூசி, சிவசிவ என்று எங்கும் கூறிக்கொண்டு அலைந்து திரிந்து, பொங்கும் அலைகளை உடைய கடலில் மூழ்கி தீட்சைப் பெற்று விட்டால் புகழ் மலையாம் கயிலாயம் சென்றடைய இயலுமா? இயலாது என்பதாம்.

6. செய்ய வேண்டாதவைகள்

"போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்;

சாகமுண்டு தலைகீழாய் நிற்க வேண்டாம்;
சத்தலிங்க மலர் எடுத்து சாத்த வேண்டாம்;

தாகமுடன் தீ வளர்த்துக் குதிக்க வேண்டாம்
தாரணியில் பல பேயைத் தொழவும் வேண்டாம்;

ஏகனென்று பிரம்மாவை நாட வேண்டாம்
இந்த நூல் பார்த்து அறிவீர் இன்பமாய்த் தானே."

கருத்துரை :

அந்த நாட்டிற்குப் (பரலோகம்) போவதற்கு தடை ஏதும் உண்டோ? அங்கே போவதற்கு பொய்கையில் முழுகவேண்டாம் இலைக்கறி உண்டு தலைகீழாய் நின்று தவம் செய்ய வேண்டாம். மலர் இட்டு லிங்கத்தை பூஜிக்கவும் வேண்டாம். தீ வளர்த்துக் தீக்குள் இறங்கவும் வேண்டாம். பல தெய்வங்களையும் தொழ வேண்டாம். பிரம்மாவை கடவுள் என்று எண்ணி வணங்கவும் வேண்டாம். இந்த நூலிலுள்ள எல்லா செய்திகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து இன்பமாய் அறிந்து கொள்.

7. நரகத்திற்குரிய சாத்தான் நம்மையும் மயக்கி இழுக்கிறான்.

"அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று,
ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே,

நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று,
நித்தியமும் மானிடரை மோசம் போக்கி,

பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்

நிலையதுவை அறியாமல் போறார் போறார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே."

கருத்துரை :

சாத்தான் தன்னுடைய அகந்தையாலும் மமதையாலும் தன்னை கடவுளுக்கு சரிசமமாய் உயர்த்தினான். அதனால் அவன் தன்னுடைய மேன்மையான நிலை குலைந்து பாதாளக் குழிக்குளே தள்ளப்பட்டான். அவன் தான் கெட்டதுமல்லாமல், மக்களையும் ஒவ்வொரு நாளும் மோசம் போக்கி, பல கலைகளையும் கற்று உணரும் அவர்களின் அறிவினைக் கட்டுக் கதைகளினாலே மயக்கி, நரக பாதாளத்திலே தன்னோடு இழுத்துக்கொள்கிறான். இதை அறியாமல் மக்களும் மோசம் போகின்றனர். அறிவுள்ளவனே! நான் சொல்வது உண்மையான செய்தி. சிந்தித்துப்பார்.

8. நிசமாய் நம்பினவர்க்கு ஈடேற்றமுண்டு

"நிசமான நால்வேதம், ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம்

வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்ற மற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்

குசமசக்குக் குசமசக்கு அப்பா! அப்பா!
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை,

நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு;
நிலை ஞானக் கண்ணொளியு நிற்குந்தானே."

கருத்துரை :

நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், மனிதருடைய மனதை மயக்கும் புராணங்கள், நான்கு மதங்களில் தோன்றிய சாஸ்திரங்கள், இன்னும் தோன்றிய ஏனைய சாஸ்திரங்கள் எல்லாம் பொய்யும் புரட்டும் வீண் மயக்கமும் தான் அப்பா! சுயவேத சாஸ்திரத்தை உண்மையாக நம்பினோர்க்கு ஈடேற்றமுண்டு. அவர்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியும் கிடைக்கும்.

9. கைக் கொள்ள வேண்டிய வேதத்தின் வெளிச்சம்

"கைக் கொள்ள வேணும் என்றால்; இன்னம் வேறெ
கற்பனையும் உண்டு; அதைக் கருத்தில் வைத்தே,

பைக்கொண்ட பிதா மாதாப் பாதம் போற்றி,
பழிமோக நினைவகற்றிப் பாவைமாரைத்

திக்கென்ன நினையாமல் இருட்டைப் போக்கி
சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து

மெய்க் கொண்டே இருந்திடுவாய்; சொல்லிப் போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே."

கருத்துரை :

இன்னும் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகள் நிறைய உண்டு. அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தாய் தந்தையரைப் போற்ற வேண்டும். பழிவாங்குதல், மோக எண்ணங்கள் முதலான பாவங்களை நினைவிலிருந்து நீக்கி இருளை அகற்ற வேண்டும். மோட்சம் வேண்டும் என நாள்தோறும் ஜெபம் செய்தல் வேண்டும். சத்தியத்தை பின்பற்றி வாழ வேண்டும். வேதம் கூறும் வேதாந்தத்தின் வெளிச்சத்தை நான் சொல்லிவிட்டேன்.

10. தீட்சைப் பெற்று கடவுளைத் தேடுங்கள்

"செபத்தை செய்வதற்குச் சீவன் வேணும்;
செபம் செய்ய திருச்சித்தம் தேட வேணும்;

பாவத்தை ஒழிப்பதற்கு கண்ணீர் வேணும்;
பரன்பாதம் அடைவதற்குத் தவசு வேணும்;

அவத்தமாய்ப் பலதானம் பண்ண வேண்டாம்;
ஆறு குளம்தனில் மூழ்கி அலைய வேண்டாம்;

சீவன் பேரில் ஆணைப்படி சொல்லிப்போட்டேன்;
தீட்சை பெற்று சிவபாதம் தேடுவாயே!"

கருத்துரை :

ஜெபத்தை செய்வதற்குச் ஜீவன் வேண்டும், ஜெபத்திலே கடவுளுடைய திருச்சித்தத்தை தேட வேண்டும். பாவத்தை ஒழிப்பதற்கு மனம் வருந்தி கண்ணீர் சிந்த வேண்டும். கடவுளின் திருவடிகளை அடைவதற்கு தவ வாழ்வு வேண்டும். பயனில்லாத தருமங்களை செய்ய வேண்டாம்.

ஆறு குளங்களில் மூழ்க ஊர் ஊராக அலைய வேண்டாம். கடவுளின் பேரிலுள்ள ஆணைப்படி சொல்கிறேன். தீட்சை (திரு முழுக்கு) பெற்று மோட்ச வாழ்வைத் தேடுவாயாக.

11. மெய்ஞ்ஞானப் பாதை அடைய பத்து மொழி

"தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு;
செப்பினதோர் நூல்கள் எல்லாம் சுட்டுப்போடு;

அரிசிப்பாய் ஓர் வழி மெய்ஞான பாதை
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன்

பரிசிப்பாய் பத்துமொழி கையில் கொண்டு
பரப்பிரம்மம் ஒன்றையே நாடிக்கொண்டு,

வரிசிப்பாய் நிலை தவறா மார்க்கம் தேடி
வணங்கு மந்த மறை புகுந்து வாழுவாயே!"

கருத்துரை :

அறிவுள்ளவனே, நான் சொல்வதை நன்றாகக் கேளு, மேலே நான் குறிப்பிட்ட வேண்டாத நூல்களையெல்லாம் எரித்துப் போடு. ஒரே வழியாகிய மெய்ஞானப்பாதையில் பத்து கட்டளைகள் உண்டு. அவற்றைக் கைக்கொண்டு பரப்பிரம்மாவாகிய கடவுளை மாத்திரமே தேடி,

நிலைதவறாத மார்க்கத்தை அடைந்து திருமறையின் உபதேசத்தின்படி நடந்து அவரையே வணங்கு; பின்பற்று.

12. முக்திபரன் அருகிப்பாய்

"கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு

மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகின பின் தேவ பக்தி அதிலேவைத்து

தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய் சகல நன்மை சுரூபிகண்டாய்

முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்திபரன் அருகிப்பாய் முச்சுடராய்த் தானே"

கருத்துரை :

ஆத்துமாவைக் கண்ணீரால் கழுவு. அதை புடமிட்டு மாசு நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்கு வைத்துக் கொண்டு உன் இருதயத்தை ஆனந்தக் கண்ணீரால் மெழுகு. பின்னர் தேவ பக்தியை அதிலே வைத்து தொழுது கொள்வாய். தவம், ஞானம் இவற்றின் தீபம் ஏற்றி சகல நன்மைக்கும் காரணராகிய கடவுளை ஸ்தோத்தரிப்பாய். சிறுகுளத்திலே நீ திரு முழுக்கு பெறுவாயாக. அப்போது நீ பரலோக தேவனுக்கு அருகில் முச்சுடர் உறவுடன் இருப்பாய்.

13. எச்சரிக்கை

"முச்சுடராம் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல;
மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்;

அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல;
அரனும் அல்ல; இலிங்கம் அல்ல; அநாதியான

சச்சிதானந்தனையே வணக்கம் செய்து,
சற்குருவைத் தரிசித்து சரண் பற்றி,

எச்சரிக்கை கொண்டு நட அப்பா! அப்பா!
எண்ணில்லா முத்திவழி எய்துவாயே!"

கருத்துரை :

பிதா, திருமைந்தர், பரிசுத்த ஆவியானவர் ஆகிய முச்சுடரும் ஒருவரே ஆவர். அவர்கள் மும்மூர்த்தி போல வெவ்வேறு ஆனவர்கள் அல்லர் மூவருக்கும் ஆள் உருவம் ஒன்றேயாகும். திரித்துவக் கடவுள். ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. அரனும் அல்லர். இலிங்கம்

அல்லா். அவா் அநாதியானவா். சச்சிதானந்தா். அவரையே வணங்கி சற்குருவைத் தரிசித்து, அவருடைய திருவடிகளில் சரணடைந்து பற்றிக் கொண்டு எச்சரிக்கையுடன் நீ நடப்பாயப்பா. அப்பொழுது எண்ணிக் கூற முடியாத பேரின்ப முக்தி வாழ்வினை நீ அடைவாய்.

"மனம் திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்துள்ளது" **மத்தேயு 4:7**

இயேசு கிறிஸ்துவின் அழைப்பு இது. "மனம் திரும்புதல்" என்பது இப்போது செல்கின்ற பாதையை விட்டு, நேர் எதிரான திசையில் செல்வது. இளவயதிலிருந்து நமக்குப் போதிக்கப்பட்டவை; ஏன் என்று அறியாது நாம் கடைபிடிப்பவை இவையனைத்தையும் விட்டு விலகி இறைவன் நமக்கு அளித்துள்ள சரீரத்தையும் அதனுள் வசிக்கும் ஜீவனையும் ஆத்மாவையும் இறைவன் நமக்களிக்கும் தூய ஆவியோடு இணைந்து வாழும் பரிசுத்த வாழ்வே கிறித்துவ மார்க்கம். இந்த 'பிரஜாபதியாம்' பரிசுத்த தேவகுமாரனாம் இயேசு கிறிஸ்து பெருமானின் அன்பழைப்பை ஏற்று, அவரது பிள்ளைகளாக மாறித்தம்மை அர்ப்பணிப்போருக்கு இம்மையிலும் மறுமையிலும் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட மீட்பின்வழியும் நிலையான மெய்வாழ்வும் உரிமையாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதுவே இக்கைந்நூல் உங்களுக்கு வழங்கும் அறைகூவலான அருட் செய்தியின் சாரமாகும்.

The St. Andrews Cross : Tradition says the apostle Andrew died on this from of cross, requesting that he be crucified on a cross unlike that of his Lord.

தூய அந்திரேயாவின் சிலுவை : தம் ஆண்டவர் அறையப்பட்ட சிலுவை அமைப்பில் தாம் அறையப்பட்டக் கூடாது என்று தூய அந்திரேயா இவ்வடிவ சிலுவையில் தம்மை அறைய ஒப்புக் கொடுத்து மாண்டார் என மரபுரை கூறுகிறது.

The Celtic Cross : Or cross of Iona, dates back to early centuries of the Christian era. It Was said to have been taken from what is now Ireland to the island of Iona by Columba in the 6th century.

செல்திக் சிலுவை : அல்லது 'அயோனா' (**IONA**)வின் சிலுவை எனப்படும் கிறித்துவ ஊழியின் தொடக்க நூற்றாண்டுகளைச் சேர்ந்தது. இப்போது அயர்லாந்து எனப்படும் இடத்திலிருந்து அயோனா எனும் தீவிற்கு ஆறாம் நூற்றாண்டளவில் கொலம்பாவால் எடுத்துச் செல்லப்பட்டது என்பர்.

4. தமிழர் சமயம் - தமிழர் வேதம்

வேதத்தை தமிழர் - வேதம், ஆரிய வேதம், என இரண்டாக பிரித்து தமிழர்கள் வேதம், ஆரிய வேதத்திலிருந்து வேறுபட்டது என அரிய விளக்கத்துடன் திரு யு.சுப்ரமணியன் (முன்னாள் ஆணையாளர் இந்து சமய அறநிலையத்துறை) தனது புத்தகத்தில் விளக்கியுள்ளார்: தமிழரில் அந்தணர், பார்ப்பார், வேதியர் என பாகுபாடு இருந்தது. இவர்கள் பிராமணர் அல்லர். ஆதியில் மக்கள் மரத்தடியில் இறைவனை வழிபட்டார்கள். பின்னர் மண்ணால் உருவம் செய்து கோயிலில் வைத்து வழிபட்டார்கள், பின்னர் சுட்ட மண்ணால் கோவில்கள் உருவாயின. பின் பாறைகளை குடைந்து குடவரை கோவில் உருவானது. பின் கருங்கற்களை சம அளவாக உடைத்து அடுக்கி உயர் நிலை கோவில்கள் அமைத்தனர். தொடக்கத்தில் மரத்தடியில் சிறு கல்லில் ஆரம்பித்து பெரிய திருவுருமாக வளர்ந்து, பூசை கிரியைகளும் துதி பாடல்களும் பெருகி, காண்பதற்கு அரிய வழிபாட்டு முறையாக இன்று காணப்படுகிறது. இவைகள் தமிழ் மக்களுடைய தனி துதி முறை.

கடவுட் கொள்கை சங்க காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. என தொல்காப்பியம், புறம், அகம், ஐங்குறு நூறு, நற்றினை, கலித்தொகை, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, பரிபாடல், பத்துப்பாட்டு போன்ற நூல்களில் காணப்படும் தெய்வம், கடவுள் குறித்த பாடல்களில் மேற்கோள் காணலாம். திருவள்ளுவர் கடவுளை "ஆதி பகவன்" என குறிப்பிடுகிறார். நாம் கடவுளுடனேயே ஒன்றியிருக்கிறோம், வேறாக தனித்து நிற்க வில்லை என்பதுதான் தமிழர் சமயத்தின் சாரம். கி.பி. 6ம் நூாற்றாண்டுக்கு பின் கோவில்களின் கட்டிடம் வளர்ச்சி பெற்றன. தமிழ் நூல்களில் தேவாரம், திருமந்திரம் என்பவற்றில் வரும் வேதம் என்ற சொல் ஆரிய வேதங்களை குறிக்கவில்லை. இவை ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கிய தமிழ் வேதங்களையே குறிக்கிறது.

ஆதியில் சிவநெறியே செந்நெறி என சிவ வழிபாட்டை முதன்மையாக கொண்டு, பின் வடமொழி வேத கோட்பாடுகளை சேர்த்து ஒரு கலப்பு சமயமாக இன்று காட்சியளிக்கிறது. மனிதன் உயிர் நயப்படுவதற்கு மதகோட்பாடு வேண்டும்.

வடமொழி வேதங்களை தொகுத்தவரும், பதினெட்டு வடமொழி புராணங்களை இயற்றியவரும், வியாசர். வால்மீகி, வியாசர் வாழ்ந்த காலத்திலே வடமொழி இராமாயணம்,

மகாபாரதம் தோன்றிய காலத்தில் தமிழகம் சிறப்பான நிலையில் இருந்தது. சங்க காலம் சுமார் கி.மு. 5 ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3 ம் நூற்றாண்டு வரை. கடைச்சங்க இறுதி காலம் கி.பி.250 க்கு முற்பட்டவை. சங்க இலக்கியங்கள் கி.பி.3 ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டவை அல்ல. தொல்காப்பியர் காலத்தில் அதாவது சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர் காலத்தில் சொல்வளம், ஆற்றல், பெற்றிருந்தது தமிழ். கி.மு.4 ம் நூற்றாண்டில் தமிழ் நாடு வளம் பெற்று இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. கி.மு.3 ம் நூற்றாண்டில் பேரரசன் அசோகன் காலத்தில் தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர்கள் தன்னாட்சி நடத்தி வந்தனர்.

"சமை", "சமைத்தல்" போன்ற வார்த்தைகள் பக்குவபடுத்துதலை குறிக்கும் சொற்கள். அதேபோல இறைவனிடத்தில் ஒருமுகப்படுத்தி நல்வழியில் ஈடுபடச் செய்ய பக்குவமாக்கும் நெறிக்கு "சமயம்" அதாவது "சமையம்", "சமயம்",ஆயிற்று. மதம் என்ற சொல் 'மதி' - அறிவு என்ற பகுதியிலிருந்து தோன்றியது. இன்ப துன்பங்களை உணர்ந்து பெற்ற முடிவுகளை அடுத்து கடைபிடிக்கப்படும் நெறி அடக்கியது 'மதம்' - சமயம் அதாவது வாழ்க்கையை செம்மைபடுத்துவது சமயம், மதம் "சித்தாந்தம்" தத்துவத்தை குறிக்கும் சைவ நெறியை சித்தாந்தம் என கூறுவது தமிழ் மரபு.

தொல்காப்பியத்தில் கடவுள், தெய்வம் என இறைவனை குறித்து பல பாடல்கள் உள்ளன. சங்க காலத்தில் சிவன், முருகன், திருமால் வணக்கம் இருந்தது. இருப்பினும் தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் அந்த தெய்வங்கள் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக கடவுள், இறைவன், தெய்வம் ஆகிய சொற்கள் பயன் பட்டது. திருவள்ளுவர் இறைவனை "ஆதி பகவன்" என்றார். அதனை ஒத்து திருமூலர், காரைக்கால் அம்மை, சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், சேக்கிழார், தாயுமானவர் ஆகியோர் இறைவனை 'ஆதி' என அழைக்கின்றனர். உயிரின் இயக்கம்தான் உடலின் இயக்கம். ஒன்று அனைவரும் காணும் தூல உடல், மற்றது கண்ணுக்கு தெரியாத ஆவி உடல். உலகில் உள்ள உயிரினங்கள் இதரனவற்றை இயங்கி வருவதற்கு காரணமான கண்ணுக்கு தெரியாத, ஆனால் உணர்வால் அறிய கூடிய மெய்பொருளை 'சத்தியம்' என்றும் தமிழர் அழைப்பர். இயற்கை வழி சார்ந்த கடவுள் நெறி கண்ட தமிழர், கடவுளுக்கு ஊர்தி வேண்டி எருது, மயில்,சிங்கம் ஆகியவைகளை சேர்த்து வணங்கினர். நம் முன்னோர்கள் தொலைவிலுள்ள ஞாயிறு, திங்கள்,வான் மண்டல அதிசயங்களை வழிபட்டாலும், அருகில் கண்டு தொழவும், சுற்றி வரவும் நம்மைப்போல் தெய்வம் தங்குவதற்கு மரநிழல் , தருக்களை அதாவது மரங்களை மனம் குளிர வழிபட்டனர்.

பின் அதற்கு உருவம் கொடுத்து வணங்கினர். தெய்வம் உறையும் "தறி" "கந்து" என்ற சொல்லிலிருந்து பிறந்த பெயரே 'கந்தன்'.

தமிழர்கள் பழைய காலத்திலிருந்து ஒரு கடவுள் கொள்கை அடிப்படையாக கொண்டுள்ளவர்கள். இதற்கு சான்று

" ஒன்றே குலம் ஒருவனே தேவன் (2104)
ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம் (2962)
ஒன்றென கண்டேனெம் ஈசன் ஒருவனை (1775)
ஆகிய திரு மூல மந்திரங்கள்

அடிப்படை கொள்கை இவ்வாறு இருப்பினும் அவரவர் மனவளர்ச்சிக்கும், ஆன்மீக உணர்நிலைக்கும் புற சூழலுக்கும் ஏற்ப தாம் விரும்பும் தெய்வத்தை பல வடிவங்களில் கண்டு வழிபட தொடங்கினர்.

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய்
நிற்கின்ற அருளுந் தோன்றும்"

"ஒருவர்தாம் பல பேருளர்"- அப்பர்
பல வுருவந் தன்னுருவே யாய பெருமானை"- சுந்தரர்

"ஒருவனுமே பலவாகி நிற்றவா "

"ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" - மாணிக்கவாசகர்

எல்லாம் ஆகிய இறைவனை எவ்வடிவில் கண்டால் என்ன?

பெயரில்லாதவனுக்கு எப்பெயர் இட்டால் என்ன?

எத்தனை பெயரிட்டால் என்ன?

எல்லாம் பொருந்தும் என்பது தமிழ் அருளாளர்களின் முடிவு

இத்தகைய பேருணர்வினால் முன்னோர்கள் பரம் பொருளை ஆணாகவும், பெண்ணாகவும், அம்மையாகவும், அப்பனாகவும், சிவன் என்றும், சக்தி என்றும், முருகன் என்றும், திருமால் என்றும் ஏற்றி தொழலாயினர். தொல்காப்பியர் காலத்திலேயே தமிழர்கள் தெய்வங்களுக்கு உருவம் கொடுத்திருந்தனர்.

வடமொழி வேதங்களில் கோவில்களோ கோவில் வழிபாடோ குறிப்பிட படவில்லை ஆனால் இதே வேதகாலத்தில் தமிழகத்தில் கோவில் வழிபாடு இருந்தது. அதனால் கடவுள் உணர்வு தோன்றவும் வளரவும் கோவில் உதவியது. தமிழர்கள் மரத்தடியில் மலர் சோலையில் "தெய்வ படிமங்களுக்கு" இயற்கை சூழலில் ஆலயம் அமைக்க முற்பட்ட போதும், ஆதி ஆலயங்களாக இருந்த மரங்களை மறந்து விடாமல், மரங்களை "தல விருட்சங்கள்" என அவைகளையும் தொடர்ந்து வழிபட்டனர். இவ்வாறு தமிழினம் வரலாறு அறிவிற்கெட்டிய முதற்காலம் தொட்டே இறைவனை கைப்பொருளாக கண்ணுக்கு இனிய பொருளாக திருக்கோல மேனி அமைத்து வழிபட்டு வருகின்றனர்

தமிழர்கள் ஆதிகாலமாக சைவ சித்தாந்த சமயக் கொள்கையை கடைபிடித்து, மெய்பொருளுக்கு சிவன், சிவம் என பெயரிட்டு அப்பொருளை வணங்கி வருகின்றனர். சிவன், சிவம் என்ற சொல் செம்மை என்ற சொல்லின் அடிப்படை. சிவன் சிவப்பு நிறத்தை குறிக்கும் சொல் மங்கல தன்மையை , நன்மையை சிவம் என்று கூறுவர். எல்லா பண்பு நலன்களும் உள்ளடக்கிய சொல் சிவன், சைவ சமயம், சிவநெறி என வழங்கலாயிற்று. சைவ சமயம் தனி ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது அல்ல. தமிழர்களின் நுண் அறிவிலே மலர்ந்த சிவ வழிபாட்டு நெறி அவர்கள் வாழ்கை முறையோடு ஒன்று பட்டு தத்துவ கொள்கையுடன் சைவ சமயமாக உருபெற்றது.

சைவ சித்தாந்த தத்துவத்தை முதலில் கூறியவர் திருமூலர். அறிவுமயமாய் உள்ளபோது சிவன் என்றும், செயல் மயமாய் உள்ள போது சக்தி என்றும் சிவன் சக்தியோடு பொருந்தி அருளுகிறான் என திருமூலர் கூறுகிறார். திருமாலும், முருகனும் சிவனின் கூறுகள் என கருதப்படுகிறது. முருகன், சிவன் சக்தியின் புதல்வன் என தொன்று தொட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. சமய கோட்பாட்டில் கற்பனையாக தெய்வங்களுக்கிடையே கொடுக்கப்பட்டுள்ள உறவு நிலை என ஆசிரியர் யு.சுப்ரமணியன் விளக்குகிறார்.

இந்த நிலையில் தொடர்ந்து வந்துள்ள ஆரியரின் தாக்கத்தை தமிழர்கள் உறுதியுடன் எதிர்கவில்லை. ஒரளவிற்கு ஏற்று கொள்ளவும் செய்தார்கள்.காலப்போக்கில் தமிழர் தோற்று வித்த தெய்வங்களுடன் ஆரியரின்தெய்வங்களான பிரம்மா,விஷ்ணு,ருத்ரா ஆகியோரும் சேர்ந்து கொண்டனர். இதன் அடிப்படையில் இதிகாசங்கள் ,புராணங்கள் கற்பனை கதைகள் புனையப்பட்டது . பிறகு ஆரிய மதம் அல்லது வேதநெறி தமிழகத்தின் சிவநெறி,திருமால் நெறி ஒன்றோடு ஒன்று தொடர்பு

உடையதாக ஆக்கப்பட்டு உள்ளது. திருமூலர் 'திருமந்திரம்' காலத்தால் முந்தியது. தமிழர் வேதத்தை அறிந்தவர்கள் நான்கு வகை நெறியாளர்கள், 'அந்தணர்' என அழைக்கப்பட்டனர். அந்தணர்களுக்கு வேத அறிவு கேள்வி முலம் கிடைக்க பெற்றதால் அவர்கள் 'கேள்வி அந்தணர்கள்' எனவும் வேள்வி செய்த அந்தணர்கள் 'வேள்வி அந்தணர்கள்' அதனை தொடர்ந்து மறையோர், நாவல் அந்தணர் அறுதொழில் அந்தணர்,ஆறு அறி அந்தணர்கள் என ஆரிய பிராமணத்திற்கு ஒவ்வாத மரபில் வாழ்ந்தனர். வடமொழி வேத சாத்திரங்களை கொண்ட ஆரிய சமூகம் நான்கு வருணங்களாக கொண்டு முதல் வருணம் பிராமணர்கள் என்றும் ,அவர்கள் மற்ற மூன்று வருணங்களுக்கும் ஆன்மீக தலைவர்களாக கருதப்பட்டனர். அந்தணர் என்ற சொல் வழக்கு ஆரியன் மொழியில் இல்லை, வட மொழி சொல் பிராமணர். ஐயன், ஐயர் ஆகிய சொற்கள் மூத்தோர், பெரியோர், தலைவர், தந்தை, தமையன் முதலியவர்களை குறிக்கும். இவை தமிழர்களால் பயன்படுத்தப்பட்டவை, ஆரிய வேதப்படி பிரம்மா, விஷ்ணு, ருத்ரா ஆகியோர்களே கடவுள்கள். தமிழகத்து தொடர்பு ஏற்பட்ட பின் ஆரியரால் ருத்ராவை சிவன் என குறிக்கப்பட்டனர் முறையே படைத்தல்,காத்தல்,அழித்தல் என தொழில் வரையறுக்கப்பட்டது. ஆனால் சைவ சித்தாந்தத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவ்வகை ஐந்து தொழிலும் சைவ சித்தாந்த சிவன் நிகழ்த்துவதாக ஐதீகம். ஆரிய வேத தத்துவத்தை முறையே

ஆதிசங்கரர்	கி.பி 788-கி.பி 820
இராமானுசர்	கி.பி 1017-கி.பி 1137
மாத்வர்	கி.பி 1199-கி.பி 1298

நிலைநாட்டியுள்ளனர். வியாசரால் எழுதப்பட்ட பிரம்ம சூத்திரத்திற்கு இந்த மூவரே தனித்தனியாக உரை எழுதினர். பிரம்ம சூத்திரனிற்று தமிழரின் சைவ சித்தாந்தம் மாறுபட்டுள்ளது யாவரும் ஒத்துக் கொண்ட ஒன்று.

ஆரிய வேதமதத்தில் (இப்போதய Hinduism) குறிப்பிடப்பட்டு வருகிற வேதாந்தம் ஆரிய வேதங்களை சார்ந்துள்ள சமயநெறி. பற்றினை விட்டு சித்தாந்த நெறியில் சென்று முக்தி அடைவது தமிழரின் வேத இலட்சியம். வேதாந்தம் என்ற சொல் தமிழ் வேதத்தின் 'அந்தம்' அல்லது 'முடிவு'. ஆரிய வேதத்திற்கும் தமிழின சமயத்திற்கும் இடையே காலப் போக்கில் அதிக கலப்பு ஏற்பட்டதன் விளைவு இரு சமயத்தினரும் இந்து மதம் என்ற பெயரை பிற்காலத்தில் பெற்ற பொது சமயத்தில் ஆரிய நான்கு வேதங்கள் பற்றிய குறிப்புகள் அதிக அளவில்

பேச்சுவழக்கிலும், தமிழ் நூல்களிலும் வந்தன. சிவனால் அருளியதாக கருதப்பட்ட அறத்திற்கு, நெறிக்கு தமிழர் வேதம் என பெயரிட்டு அழைத்தனர். வடமொழி வேதங்களோடு சிவனை சேர்த்து எந்த இடத்திலும் குறிப்பு இல்லை. நான்கு வடமொழி வேதங்களில் எதையும் சிவன் அருளியதாக அவர்கள் கூறவில்லை. சைவ சமயத்தில் சக்தியும், முருகனும் சிவனின் கூறுகளாக கருதப்படுகின்றனர். இவ்விரண்டிற்கும் தனி கோட்பாடு கிடையாது. சைவ சித்தாந்தம் தமிழ்நாட்டிற்கு, தமிழ் பண்பாட்டிற்கு, உரிய தமிழ்நெறி அதுவே அறநெறி.

இவ்வாறாக தமிழன் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களை, கற்பனைக்கு எட்டாத நிகழ்வுகளை, கண்டான்-பயந்தான்-அதனை வணங்கமுற்பட்டான். அவைகளை உருவகப்படுத்தி, தன் அருகில் இருக்கும் வண்ணம் சிலை வைத்து பின் கோவில்களாக்கி வணங்கினான். அவ்வகை தெய்வத்திற்கு பெயரிட்டான் 'சீவன் ' - உயிர் சீவனை உடையவன் 'சிவன்' சீவனுக்கு உரியவன் 'சிவன்' அதன் பொருள் 'உயிர்', மட்டும் அல்ல சிகப்பு, அழகு என்பதும் பொருள். வணக்கத்துக்கு உரிய கடவுளை தெரிந்தபின், அதற்கு இலக்கணம் வகுத்தான். கருத்துக்களை சுருக்கி சொல்ல பாடல்கள் ஆக்கினான். தான் வணங்கும் தெய்வத்திற்கு தன்னைப்போல் குடும்பம் - உறவு அமைத்தான் - பெயரிட்டான். அதற்கு 'சமய நெறி' என பெயரிட்டான். இவ்வளவிலும் தமிழன், ஒருவனே தேவன் என நெறி வகுத்தான். இறைவன் செயலுக்கு பல பெயர் சூடினான். பெரிய கோவில்கள் எழுப்பினர். வழிபாடு சிறந்து வளர்ந்தது. இந்த கால கட்டத்தில் தமிழ் நாட்டில் ஆரிய வேதம் நுழைந்தது, நான்கு மறை கொண்ட ஆரிய வேதம் தமிழர் வழிபாட்டில் கலந்து 'இந்துத்துவம்' தோன்றியது. தமிழர் ஒருதெய்வ வழிபாட்டில் பற்றுறுதி இழந்தனர். ஆரிய வேத அடிப்படையில் 'இந்துத்துவம்' நிலைபெற்றது. தமிழர் வேதம், சித்தாந்தம்,அறநெறி,சைவநெறி ஆரிய வேதத்துடன் கலந்து 'இந்துத்துவமாக' நிலைப்பட்டது.

இந்துமதம் : காந்தியடிகள், ஈவே.ரா. வாதம் - 1927ம் வருடம் பெங்களூரில் காந்திஅடிகளும் - ஈவே. ராமசாமி (பெரியார்) சந்திப்பு. நூல் : இந்துமதம் - காந்தியாரும் - பெரியாரும். தொகுப்பு : பசு - கவுதமன் : ஈ.வே. ராமசாமி என்கின்ற நான் இருபெரும் தலைவர்கள் வாதத்தின் - சாரம்.

இந்துமதம் ஒரு மதம் அல்ல என்பது திரு. ஈவே.ரா. அவர்களின் வாதம் : இந்த மதத்தை ஒரு பிரிவினர் கற்பித்து மக்களை நம்ப வைத்துள்ளனர் என்றும், மற்ற மதங்களுக்கு

சரித்திர சம்பந்தமான ஆதாரங்கள், ஒப்புக் கொள்ள கூடிய கொள்கைகளும் உண்டு. இதில் 'பைபிள்' வழி வரும் கிறித்துவம், குரான் வழி வரும் இஸ்லாமியமும் இதில் அடங்கும். ஆனால் இந்து மதத்திற்கு எந்த சரித்திரமும், கொள்கையும், ஆதாரங்களும் இல்லை.

காந்தியடிகள் : இந்துமதம் ஒரு மதம் இல்லை என்றும் அதற்கு கொள்கை இல்லை என ஒத்துக் கொண்டார். அந்த காரணத்தால் இந்து மதத்திற்கு ஒரு கொள்கையை உண்டு பண்ணலாம். அதன்மூலம் மக்களை நல்வழிக்கு கொண்டுவரலாம். ஏனெனில் கொள்கை இல்லாத இந்துமதத்திற்கு மட்டும்தான் நாம், கொள்கை உருவாக்க முடியும் மற்ற மதங்களில் (கிறித்துவம், இஸ்லாமியம்) கொள்கை உண்டு. சரித்திரம் உண்டு. ஆதாரங்கள் உள்ளன. எனவே அந்த மதங்களில் மக்களுக்கு வழி காட்டும் கொள்கையை இனி புகுத்த முடியாது, என்பது காந்தியடிகளின் வாதம். இந்துமதம் என்ற இல்லாத மதத்தின் பெயரால் எவரும் மகான்களாகி, குருவாகி எதையும் சொல்லலாம். அதன் அடிப்படையில் இந்து மதத்தில் பல பெரியவர்கள், மகான்கள் பலவற்றை சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் நாமும் மதத்தின் பெயரால் அநேக சீர்திருத்தங்களை இந்த கால மனிதவர்க்கத்திற்கு தேவைக்கு ஏற்றபடி செய்யலாம் என்பது காந்தியடிகள் வாதம். மேலும் காந்தியடிகள் உலகம் எப்போதும் அறிவு சார்ந்தவர்கள் வழியில்தான், அவர்கள் ஆதிக்கத்தில்தான் இருக்கும் என்றும், படித்த இனமக்கள் இந்து மதத்தினை அவர்கள் வழி நடத்துகின்றனர் என்று காந்தியடிகள் வாதிட்டார்.

பெரியார் அவர்கள் : ஓர் இனம் சமுதாயத்தை அவர்கள் அறிவு ஜீவிகளாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு செல்வது மக்களுக்கு கேடானது என வாதிட்டார்.

காந்தியடிகள் : யாவரும் ஒன்று சேர்ந்து மதத்தின் பெயரால் குறைபாடுகளை நீக்கலாம், என அறைகூவல் விடுத்தார். நாட்டின் இரு பெருந்தலைவர்கள், இந்து மதம் என்று, ஒன்று இல்லை என்பதை ஒத்துக்கொண்டு சமுதாய சீர்திருத்தத்திற்கு இல்லாத மதத்தை பயன்படுத்தலாம் என கலந்துரையாடி நமக்கு தெளிவுபடுத்தினர்.

இந்து மதம் சொல் வழக்கத்தில் வந்தது : தமிழ் இனத்தினர் ஏக தெய்வத்தை வழிபட்டனர். ஆரியர்கள் வரவால் இந்துத்துவம் தமிழ் நாட்டில் புகுந்தது. சிதறிக் கிடந்த தமிழ்மக்கள் இந்துத்துவத்தை எதிர்காமல், அதனை வரவேற்றனர். ஏன் என்றால் மதஉணர்வு கொண்ட அமைப்போ மதமோ, ஒருங்கிணைந்த சமய நெறியோ, சமய கோட்பாடோ, சமய ஒழுக்க நெறியோ ஒருங்கிணைந்த செயல்பாடோ அந்த கால கட்டத்தில் இல்லை. 'ஏகன்' 'ஒருவன்' என்ற நம்பிக்கையில் அவரவர்கள் விருப்பத்திற்கு இறைவனை வணங்கி வந்ததால், ஆரியர்கள் வரவு, ஆரியர்கள் தாக்கம் தமிழகத்தில் நிலை பெற்றது.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த பி.வி. ராஜமன்னார் அவர்கள் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பில் (மைக்கேல் Vs வெங்கடேஸ்வரன் வழக்கு) "நாம் அறிந்துள்ள பொருளில் இந்து மதம் என்ற ஒரு மதமே இல்லை. அஃது இந்தியாவில் தோன்றியதன்று. அந்த பெயரை இந்துக்கள் தங்கள் மதத்திற்கு எப்போதும் பயன் படுத்தியதுமில்லை. ஆனால் அச்சொல் பயன்பாட்டில் நிலைத்துவிட்டது. மதம் மற்றும் தத்துவத்தை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையை விவரிப்பதற்கு சவுகரியத்தின் பொருட்டு இந்து மதம் என்னும் சொல் பயன் பாட்டில் வைத்து கொள்ளப் பட்டிருக்கிறது." சந்திரசேகர் சரஸ்வதி சுவாமிகள் தெய்வத்தின் குரல் என்ற நூல் 125, 126 பக்கங்களில் 'இந்து' என்பது நமது பூர்விகபெயரல்ல. வைதீக மதம், சனாதன தர்மம் என்றெல்லாம் சொல்லுகிறோமே, அவைதான் பெயரா என்றால் அதுவும் இல்லை. நமது ஆதார நூல்களை பார்க்கும் போது இந்து மதத்திற்கு எந்த பெயருமே குறிப்பிட படவில்லை என தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

The Anchor Cross : Which was used by the early Christians in the Catacobs. Ancient Egyptian is its origin.

நங்கூரச் சிலுவை : தொடக்க காலத்தில் கிறித்துவரால் வழிபாட்டிடங்களில் பயன்படுத்தப்பட்டது. புராதீன எகிப்து இதன் தொல்விடாமாகும்.

The Greek Cross : With all arms of equal length.

கிரேக்கச் சிலுவை : நான்கு பக்கமும் சம அளவுள்ள சிலுவை.

5. பிரஜாபதி - வடமொழி வேதங்கள்

பிரஜாபதி யார்? அவர் அவதார ரகசியம் என்ன? அவரை அடையாளம் காண்பது எவ்வாறு? என்ற கேள்வி பலராலும் கேட்கப்பட்ட நிலையில் அந்த பிரஜாபதி குறித்த வேத ரகசியங்கள் கி.மு 2000 - 1200 வருட காலங்களில் பரிசுத்த வேதாகமத்தில் மட்டும் அல்லாது புராதன வேதங்களிலும் அவரை குறித்து அறுதியிட்டு, குறிப்புகள் உள்ளன. அதனை வெளிக் கொணர டாக்டர்.ஜோசப் படிஞ்சாரக்கரா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, ஆராய்ச்சி மிகவும் பாராட்டத்தக்கது. தனது ஆய்விற்கு அவர் 309 புத்தக குறிப்புகளை மேற்கோள் காட்டி தனது புத்தகத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். அவரது ஆய்வுக்கு வலு சேர்க்கும் விதமாக அவரது புத்தகத்திற்கு Dr.Sukumar Azhikode (டாக்டர்.சுகுமார் அழிகோடே) அவர்கள் முன்னுரை தந்து "யேசு கிறிஸ்து" தான் அந்த பிரஜாபதி என்று வேதங்கள் கூறுவதாக புத்தக ஆசிரியர் கூற்றை வலியுறுத்தியுள்ளார்.

பாவம் அறியாதவர், மனித பாவத்திற்கு தீர்வாக தன்னையே பலியாக தந்தார் என்று நமது வேதநூல்கள் கூறினால் அது தீர்வாகாது. பிறவேதங்கள் அதனை கூறவேண்டும் என்பது எழுதப்படாத விதி. அதன்படி ஆண்டவர் தாமே 'பிரஜாபதி' என்ற உண்மையை 3000-4000 பழமையான 'ரிக் வேதத்தில்' 'பாவமற்ற ஆட்டு குட்டி மனிதனின் பாவத்திற்கு தன்னை பலியாக ஒப்பு கொடுக்க வேண்டும்' என குறிப்பு உள்ளது. ஆண்டவர் எவ்வளவு அன்பு உள்ளவராக இருந்திருந்தால் தனது அனாதி தீர்மானத்தை தனது பலியை இந்து வேதத்தில் குறித்திருக்க முடியும்.

இந்து வேதங்கள் சமஸ்கிருதத்தில் கி.மு. 2000-1200 ஆண்டுகளில் எழுதப்பட்டது. இதன் மூலம் சமஸ்கிருத ஏடுகளை 'TORONTO' பல்கலைகழகத்து ' ROBERTS' நூலகத்தில் இருந்து பார்த்து தனது நூலில் அதனை விவரிக்கிறார் டாக்டர்.ஜோசப் படிஞ்சாரக்கரா. இந்துக்களுக்கும் இதனை ஏற்றுக் கொள்வது சற்று கடினம். இதனை டாக்டர்.சுகுமார் அழிகோடே போன்ற இந்தியாவின் பிரபல சமஸ்கிருத ஞானி மற்றும் வேதவிற்பன்னர் இதற்கு ஒப்புதல் அளிக்கிறார் என்றால் சாதாரண மக்கள் நாம் எம்மாத்திரம்.

வேதம் என்றால் அறுதியான, இறுதியான அறிவு என பொருள். வேதம் என்ற வார்த்தை நமக்கு புதியது அல்ல. அதன்

அடிப்படையில் வெளிப்பட்டதுதான் பரிசுத்த வேதாகமம், சத்திய வேதபுத்தகம். அந்த வேதத்தின் அடிப்படையே 'பிரஜாபதி' பாவமற்றவர், அப்பழுக்கற்றவர், தம்மையே பலியாக மனிதனின் பாவத்திற்கு நிவர்த்தியாக பலியாகி பரம ராஜ்யத்தில் மனிதனை சேர்த்துக் கொள்ள வழிகண்டார் என மூல சமஸ்கிருத ஏடுகளில் 'பிரஜாபதி' பலியை பற்றித்தான் அதிகமாக சொல்லப் பட்டிருக்கிறது. இதற்கு முன்பாக கோஷி ஆபிரகாம் அவர்கள் 'ஆரிய வேதாந்தத்திலே கிறிஸ்து' என பிரஜாபதி பலியை குறித்து எழுதியுள்ளார். இறுதியாக 'கிறிஸ்து' தான் பலி செலுத்தும் ஆடு, எல்லா மனித உயிர்களுக்காக தம்மை பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று வேதத்திலும், உபநிஷத்துக்களிலும், திருவிவிலியத்திலும் தெளிவாக கூறியுள்ளது. யேசு என்பவர் ஒரு மதம் அல்ல ஆனால் அவரே நித்திய வாழ்விற்கு வழி. 'புருஷசுத்தாவின்' அடிப்படையே பாவமற்றவரின் பலி. இதை குறித்து 'ரிக் வேதம்' 10வது மண்டலம் 90வது அத்தியாயம் 1 முதல் 16 முடிய விளக்கி கூறப்பட்டுள்ளது என டாக்டர்.ஜோசப் படிஞ்சாரக்கரா தனது புத்தகம் 'Christ in Ancient Vedas' தெளிவாக எடுத்துரைத்துள்ளார். பிரஜாபதி தான் முழு முதல் கடவுள். ஆதியும் அந்தமும் அவரே. பழைய ஏற்பாட்டில் ஏசுகிறிஸ்துவின் பிறப்பு மற்றும் அவரது வருகையை குறித்து தீர்க்கர்கள் மூலம் முன் உரைக்கப்பட்டுள்ளது. அதே போல பாவமற்றவரின் பலி செலுத்துதலால்தான் மனிதனின் பாவம் நிவர்த்தியாகும் என்றும் வேதங்கள் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் கூட்டியே கூறப்பட்டுள்ளது.

சமஸ்கிருதம் அதன் நூல்கள் ஒருபெரும் கடல் போன்றது. அதில் 'ரிக் வேதம்' எல்லா வேதங்களுக்கும் முதன்மையானது. உண்மையை கூறினால் வேதத்தில் கூறப்படாத ஒன்று உலகில் இல்லை. உலகில் உள்ள அனைத்து காரியங்களும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. 'வேதங்களும்' 'உபநிஷத்துக்களும்' தான் சமஸ்கிருதத்தில் அதிகப்படியாக உள்ள புத்தகங்கள். இவைகள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் எழுதப்பட்டவைகள். 'உபநிஷத்துக்கள்' ஆன்மாவின் உச்சம். இந்தியாவின் எழுத்துப் படைப்பு வேதத்தில் தான் ஆரம்பமாகிறது. வேதம் என்றால் அறிவு. அதாவது உச்ச அறிவுநிலை, அதாவது கடவுளை அடையும் வழியே, அறிவின் உச்சம்.

<u>வேத படைப்புகள் இரண்டு வகைப்படும்</u>

1. ஸ்ருதி- அதாவது கேட்கப்படுவது (what is heard)
2. ஸ்மிரிட்டி- அதாவது நினைவில் கொள்வது.

வேதங்களை நான்கு வகையாக பிரிக்கலாம்

1. "ரிக்" வேதம்
2. "யஜுர்" வேதம்
3. "சாம" வேதம்
4, "அதர்வ" வேதம்

} ஸ்ருதியின் அடிப்படையில் அமைவது

வேதங்கள் சுமார் 2000 முதல் 1200 கி.மு காலத்தவை.

அதர்வ வேதம் : பெரும்பாலும் வழிமுறைக்கு வரவில்லை வேதத்தின் அடிப்படை தத்துவம் தியாகம். அடுத்த புனிதமான படைப்பு 'பிராமணாஸ்' இது 1200 - 1000 கி.மு. காலங்களில் எழுதப்பட்டது.

'அரண்யகாஸ்' 1000 கி.மு இவை அடுத்த இலக்கிய படைப்புகள்.

'உபநிஷத்துகள்' 1000-700 கி.மு காலத்தவை இவை ஆத்மாவின், அதாவது ஆன்மாவின் உச்ச நிலை.

'வேதங்கள்தான்' மனித சிந்தனைகளின் முழுமுதல். அவைதான் தத்துவத்திற்கும், மதத்திற்கும் 'அச்சு' மற்றும் 'ஆதாரம்'.

வாழ்வின் இறுதிகட்ட முயற்சி, சாவினின்று விடுபட்டு சாவாமையை அடைவது, அதாவது மோட்சம் அடைவது. மனிதனின் முயற்சியின் உச்சம் கடவுளை புகழ்ந்து அவருடன் சதா காலம் வாழ்வதுதான். மனிதன் சாவின் பிடியில் உள்ளவன், எவ்வாறு சாவாமையை அடைய முடியும்? தானாகவே இது சாத்தியம் ஆனது அல்ல. பாவம்தான் சாவிற்கும், சாவாமைக்கும் உள்ள இடற்பாடு. பாவம் மனிதனை கடவுளிடமிருந்து நம்மை பிரித்துவைக்கிறது. பாவத்திலிருந்து மன்னிப்பு பெற்று அழியாமையை அதாவது மோட்சத்தை அடைவதற்கு வேதங்கள் காட்டும் வழிதான் பாவநிவாரணபலி அதாவது தியாகபலி. பாவநிவாரணபலி வழியாக கடவுள் வழிபாட்டில் கடவுளை வழிபட அவரை ஆராதிக்க, மனிதன் முற்பட்டான் முக்தி அடைய ஒரேவழி பலி செலுத்த படவேண்டும். அதே வழியில் 'பிரஜாபதி' பலியையும் சிலுவையில் "யேசு" உயிர் விட்டதையும் ஒப்பிட்டே ஆக வேண்டும்.

வேதங்களில் முக்தி அடைய பலி செலுத்த வேண்டும் என்பதே ஒரேவழி என போதிக்கின்றன. சாவாமை அடைய பலி ஒன்றே வழி என வேதங்கள் கூறுகின்றன. 'க்ஷாப்த பிராமணஸ்'

என்ற நூல் மனிதர்கள் மட்டுமல்லாது தேவர்களும் பலி மூலம் முக்தி அடைவர் என கூறுகிறது. பலி செலுத்துததில் 'பிரஜாபதி' பலி தான் மிகவும் பிரதானமானது. அதாவது கடவுள் தன்னையே பலியாக செலுத்த வேண்டும். வேதங்கள் அடிப்படையில் யார் அந்த 'பிரஜாபதி' தேவாதி தேவனே அந்த 'பிரஜாபதி' என வேதங்கள் அறுதியிட்டு கூறுகிறது. **'பிரஜாபதி' என்றால் பிரஜைகளின் தலைவன் மற்றும் அதிபதி, அவரே அனைத்தையும் படைத்தவர். வழக்கமாக கடவுள் தியாகத்தையும், பலியையும், காணிக்கையையும் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் இங்கு பலி செலுத்தப்பட வேண்டியவர், தன்னையே பலியாக கொடுத்தவர் கடவுள்.**

"தண்டி மகா பிராமணா" என்ற வேதத்தில் எல்லாவற்றையும் படைத்த பரம் பொருள் கடவுள் முன்பாக தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்தார்.

'ரிக் வேதத்தில்' மிக முக்கிய பகுதி 'புருஷ சுக்தா' அவை "பிரஜாபதியின்" தெய்வீக மற்றும் மானுட நியதியை விளக்கும் பகுதி. இதில் விளக்கப்படும் மானுடன் இயற்கைக்கு அப்பாற்பட்ட கடவுள் தன்மையுடையவன். எனவே இப்பகுதி வேதத்தில் 'புருஷ பிரஜாபதி' என வர்ணிக்கப்படுகிறார். எனவே வேதத்தில் இந்த பலி 'புருஷ பிரஜாபதி' பலி என வர்ணிக்கப்படுகிது. இந்த பலிக்காக குறிக்கப்பட்ட நபர் 'மனிதன்' இருந்தாலும் அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட 'மனிதன்' இந்த 'மனிதனின்' தனித்தன்மைகள் 'உபநிஷத்துக்களிலும்', 'புருஷ சுக்தாவிலும்' வர்ணிக்கப்படுகிறது. இந்த 'புருஷர்' எல்லாருக்கும் மேலானவர். எதுவும் இவருக்கு மேலானது இல்லை. யேசு "மனித குமாரன்" என்றும் கடவுளின் குமாரன் என்றும் அழைக்கப்பட்டார். **யோவான் 3:14,16** இதன் அர்த்தம் என்ன என்றால் கடவுளின் குமாரன் என்றால் அவர் கடவுள். அவரே 'பிரஜாபதி' அவரே சகலத்தையும் உருவாக்கியவர். "ஆபிரகாமுக்கு முன்பாகவே நான் இருக்கிறேன்" **யோவான் 8:58,59** அவர் எல்லாவற்றையும் படைத்தவர். அவர் ஆதி முதல் இருப்பவர். எல்லாம் அவர் மூலம் உண்டானது. "அவரை யல்லாமல் ஒன்றும் உருவாகவில்லை" **யோவான் 1:3** அவர் பூமியையும் வானத்தையும் அஸ்திபாரமிட்டார். "அவைகள் அவரது கைகளால் உண்டானது" **எபிரேயர் 1:10** வேதாகமத்தை பொறுத்தவரை "யேசு கிறிஸ்துவே" அனைத்து படைப்பிற்கும் கடவுள்: அவரே உண்மையான பிரஜாபதி". மறுரூப மலையில் அவர் மறுரூபமாகி சீடர்களுக்கு காட்சியளித்த போது வானத்திலிருந்து வந்த சத்தம்

"இவரே எனது குமாரன், அவரை நான் நேசிக்கிறேன். இவரில் நான் அன்பு கூறுகிறேன், அவருக்கு செவி கொடுங்கள்" **மத்தேயு 17:5.** ஆண்டவராகிய யேசு அவரது வருகையினை குறித்து சொல்லும் போதெல்லாம், அவரது பாடுகளை குறித்து சொல்லும் போதும் அவர் உபயோகப்படுத்திய வார்த்தை "மனிதகுமாரன்" **மத்தேயு 20:28**

மனிதகுமாரன் ஊழியம் கொள்ளாமல் ஊழியம் செய்யவே வந்தேன் என்றும் பலருக்காக தனது ஜீவனை கொடுக்கவும் வந்தேன் என்றும் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும். பாடுகளின் காலத்தில் தலைமை குருவிடம் வரும் காலங்களில் "மனிதகுமாரன் பிதாவின் வலதுபக்கம் உட்காருவதையும் மேகங்களின் மத்தியில் வருவதையும் காண்பீர்கள்" என ஆணித்தரமாக கூறுவதை காணலாம் **மத்தேயு 26:24.**

'ரிக் வேதத்தில்' 'புருஷசுக்தம்' தான் மையப்பகுதி 9வது அத்தியாயம் 10வது மண்டலத்தில் பாவமற்றவர் பலியாவதை குறித்தும், சதாவாழும் முழுமுதலோன் பற்றி மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது "புருஷசுக்தாவின்" பகுதிகள் "சாம வேதம்" "யஜ"ர் வேதம்" மற்றும் "அதர்வ வேதத்திலும்" காணலாம்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்த மனிதனைக் குறித்த காட்சி **'எசேக்கியேல்'** தீர்க்கதரிசியின் புத்தகம் **10ம்** அதிகாரத்தில் விளக்கப்படுகிறது. "கடவுள் மனித அவதாரம் எடுத்து மனிதனாக பூமிக்கு வந்தார்". **மத்தேயு 1:22,23** ல் "கன்னி மகனை ஈன்றெடுப்பாள்". அவர் "இம்மானுவேல்" என்றழைக்கப்படுவார். **மத்தேயு 1:20,21** குறித்துள்ள தீர்க்கதரிசனம் அவர் "யேசு" என நாமம் தரிக்கப்படுவார் தனது ஜனங்களை பாவத்திலிருந்து மீட்பார்.

மனிதனால் உற்பவிக்கப்படாதவர்தான் அந்த மனிதகுமாரன், கடவுளின் குமாரன் **லூக்கா 1:35** நான் பரத்திலிருந்து இறங்கிவந்தது எனது சித்தத்தை நிறைவேற்ற அல்ல, எனது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே. எனது பிதாவின் சித்தம் குமாரனை குறித்துப் பார்ப்பவர்களும், அவரில் விசுவாசிப்பவர்களும், சாவாமையை தரிப்பர். அவர்களை கடைசி நாளில் எழுப்புவேன் **யோவான் 11:25** 'புருஷசுக்தாவில்' காணப்படும் 'மனிதன்' முதற்பேரானவர். அவர் காணப்படாத கடவுளின் சாயலை ஒத்தவர். கடவுள் தனது முதற்பேரானவரை உலகிற்கு கொண்டு வந்தபோது கடவுளின் எல்லா தூதர்களும் அவரை வணங்குவதாக **எபிரேயர் 1:6** "யேசு"வே இறந்தவர்களில் முதற்பேரானவர் **வெளிப்படுத்தின விசேஷம் 1:5** "கிறிஸ்து"

மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் இறந்தவர்களின் முதற்பேரானவர். உயிர்பெற்றார். "புருஷ சுக்தாவில்" கடவுளின் மகிமை நான்கில் மூன்று பங்கு பரலோகத்தில் உள்ளது, நான்கில் ஒரு பங்கு மாத்திரம் பூமியில் அவரது மகிமை வெளிப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

'உபநிஷத்துக்களில்' 'ஓம்' என்ற சொல் முழுமையைக் குறிக்கிறது. முழுமையிலிருந்து உருவானது முழுமை. முழுமையை கடவுளில்தான் காணமுடியும். கடவுளும், மனிதகுமாரனும் பிரிக்க முடியாதவர்கள். கடவுள் மனிதகுமாரனிலும், மனிதகுமாரன் கடவுளிலும் இருக்கின்றனர். அதைத்தான் "யேசு" **யோவான் 14:11** "நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறார் என்றார்". **சங்கீதம் 82:6** கூறுகிறது. "நீங்கள் எல்லாரும் கடவுளின் குழந்தைகள்". வேதத்தில் தேவர்கள் என்ற வார்த்தை கடவுளுக்கு குறிக்கப்பட்டுள்ளது. அதாவது "வேத" கூற்றுப்படி அந்த "தேவர்கள்" மனிதர்கள் தான்."தேவர்கள்" என்ற மனிதர்கள் 'புருஷ-பிரஜாபதி'. பலியினால் பிறந்தவர்கள். "ஒருவன் மறுபடியும் பிறந்தாலன்றி கடவுளின் ராஜ்யத்தை காணமுடியாது". **யோவான் 3:3** "கடவுள் உலகை இவ்வளவாய் அன்பு கூர்ந்த படியால் அவரது ஒன்றான குமாரனை உலகிற்கு தந்தார். அவரை நம்புகிறவர்கள் அழிவது இல்லை, அவர்கள் நித்திய வாழ்வை காண்பவர்கள்", **1பேதுரு 1:23** அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான வேதவசனமாகிய அழிவில்லா வித்தினாலே மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டீர்களே. இந்த ஜனங்கள். மறுபடியும் பிறந்தவர்கள், கடவுளின் குழந்தைகளாக அழைக்கப்படுவார்கள் அல்லது தேவர்களாக கருதப்படுவார்கள். **யோவான் 1:12-13** "அவரை ஏற்றுக்கொண்டவர் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது, புருஷ சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்". **1யோவான் 3:1** நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.

அப்படியானால் கடவுளின் குழந்தைகள் கடவுள் (தேவர்கள்) என அழைக்கப்படலாம். வேதத்தில் 'பிரஜாபதி' தன்னையே கடவுள்கள் முன்பாக பலியாக செலுத்தினார் என்ற

வாதம் "யேசு கிறிஸ்து" சிலுவையில் தம்மை ஒப்புக் கொடுத்ததினால் நிறைவேறிற்று. "கதா உபநிஷத்தில்" "மகா புருஷரை" அறிந்தவர்கள் முக்தி அடைவார்கள் என்று கூறப்படுகிறது. "யேசு" அதையே சொன்னார் "நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" **யோவான் 14:6** யோவான் ஸ்நானகன் 'யேசு' தன்னிடம் வரக்கண்டு "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இவர்தான்" என்று முன் உரைத்தார். **யோவான் 1:29** அனேக தூதர்கள் பரலோகத்தில் மகா சத்தமிட்டு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர், வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். **வெளிப்படுத்தின விசேஷம் 5:12** ஆட்டுக்குட்டியானவர் நித்திய நித்தியமாக பரலோகத்தில் இருக்கிறார். தேவனுடைய மகிமையே அதை பிரகாசித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு **வெளிப்படுத்தின விசேஷம் 21:23** உலக தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியுடைய ஜீவபுத்தகத்தில் பேரெழுதப்படாத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள் **வெளிப்படுத்தின விசேஷம் 13:8** சிலுவை பலி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தேறினாலும் பரிசுத்த வேதாகமம் சொல்கிறது "ஆட்டுக்குட்டியானவர் உலக தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசி காலங்களில் வெளிப்பட்டார்" **I பேதுரு 1:20** மனிதனுடைய சரீர தேவைகள் அனைத்தும் கடவுளால் கவனித்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஆத்துமா உலக பிரகாரமானதல்ல. அதன் ஆகாரம் உலகம் தரக்கூடாதது. ஆத்துமா அழிவில்லாதது, பரிசுத்தமானது, அது கடவுளின் அங்கம் மேற்குறித்த காரியங்களை ஒன்று திரட்டும் போது நமக்கு தெரிவது 'பலி' யானது கடவுளின் உள்ளத்தில் உலக தோற்றம் முன் ஆதிமனிதன் உண்டாக்கப்படுவதற்கு முன்பாக உண்டானது. கடவுள் பாவத்திற்கு நிவாரணம் 'பலி' தான் என்பதை மனிதன் உண்டாக்கப்படுவதற்கு முன்பாக உண்டானது. கடவுள் பாவத்திற்கு நிவாரணம் 'பலி'தான் என்பதை மனிதன் உண்டாக்கப் படுவதற்கு முன் தீர்மானித்தார். பரலோகத்தில் மனிதன் பால் கொண்ட அன்பின் நிமித்தம் 'பலி நிவாரணம்' கடவுளால் உண்டாக்கப்பட்டது. அதன்பின் உலகையும் மனிதனையும் உண்டாக்கினார். எனவே கடவுள் தனது மனதில் 'பிரஜாபதி பலி'யை திட்டமிட்டார் என்றே கொள்ள வேண்டும். பலிகளில்

பிரதானமானது 'பிரஜாபதி பலி' ஒன்றுதான். பரிசுத்த வேதாகமத்தில் பிரதான கொள்கை : மீட்பு, ரட்சிப்பு. மனிதனை 'யேசு' தம்மை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்ததின் நிமித்தம் மீட்டுக்கொண்டார். இந்த பலி, மீட்பு, ஆண்டவரிடம் பரலோகத்தில் உதித்தது. முதலாவதாக இந்த பலி பூமியில் மிருக பலியாக பாவ நிவர்த்திக்காக தொடர்ந்தது. இறுதியாக யேசுகிறிஸ்து தம்மையே பலியாக கொடுத்து மனிதனை மீட்டு ரட்சித்தார். "இதுவே இறுதி, வானத்திலும், பூமியிலும், தேவர்கள் எனப்படுபவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன், நமக்கு உண்டு. 'இயேசு கிறிஸ்து' என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாக சகலமும் உண்டாயிருக்கிறது. நாமும் உண்டாயிருக்கிறோம்" **I கொரிந்தியர் 8:5,6** பரிசுத்த வேதாகமத்தின் மைய பொருள் அதாவது ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முடிய சொல்லப்பட்ட செய்தி யேசு கிறிஸ்துவின் தியாக பலியின் மூலமாக உலக மக்களை பாவத்திலிருந்து மீட்பது, இந்த எண்ணம் பிதாவின் முடிவு, பரலோகத்தில் முடிவு செய்யப்பட்ட ஒன்று. இந்த முடிவு பூலோகத்தில் முதல் முறையாக மிருக, பறவை பலிகளாக செயல்படுத்தப்பட்டது. அவ்வகை பலிகள் மூலமாகத்தான் பாவம் மன்னிக்கப்பட முடியும், பாவ மன்னிப்பிற்கு, பாவ நிவாரணத்திற்கு உகந்த பொருட்களாக மிருக ஜீவன்கள், பறவைகள் உபயோகப்படுத்தப்பட்டு மக்கள் அதில் நம்பிக்கை வைத்தனர். இறுதியாக ஆண்டவராகிய "ஏசு கிறிஸ்து" தம்மையே பலியாக கொடுத்து மக்களை பாவத்திலிருந்து மீட்டு ரட்சித்தார்.

இவ்வகையான தியாகம், பலி பண்டைய கால இந்தியர்களுக்கு ஒன்றும் புதிது அல்ல. வேதங்கள் இவ்வகையான வழிகளை 'உபநிஷத்துக்கள்' என்ற வேத இலக்கியங்கள் வாயிலாக விளக்கியுள்ளது.

ஏசாயா தீர்கன் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக "யேசு கிறிஸ்து"வின் வருகையை முன் குறித்தான், யூதர்கள் இன்றும் அவர் வருகையை எதிர் நோக்கி உள்ளனர். ஆனால் அனேக யூதர்கள் "யேசாயா"வின் குருதி காயங்களை "ஏசு"விடம் கண்டுள்ளனர். பூமியின் கிழக்கு பிரதேசத்தவரும் மீட்பர் வருகையை எதிர் நோக்கி இருந்தனர். அவரை அவர்கள் 'நிஸ்கலங்கா புருஷர்' என்று அழைத்தனர். அதன் அர்த்தம் 'பாவமற்ற மனிதன்' அதாவது பாவமற்ற 'மனித குமாரன்' அதனால் தான் ஆண்டவரின் பிறப்பு கிழக்கு தேச சாஸ்திரிகளுக்கு முதலில் நட்சத்திரம் வழியாக அறிவிக்கப்பட்டது. தானியேல் புத்தகத்தில்

சுமார் 600 கி.மு ஆண்டுகளில் மேசியா, முன் குறிக்கப்பட்டவர், பலியாக்கப்படுவார் என குறித்தார் **தானியேல் 9:26**

<u>'பிரமணா'</u> ஏடுகளில் பாவநிவாரண பலி குறித்து "பிரஜாபதி"யை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு யாகத்திலும் உச்சரிக்கப்படும் வார்த்தை "ஸ்வாகா" 'SVAHA' 'ஸ்வாகா' என்றால், தான், தனது, தன்னை என்று பொருள். 'ஆ கா' 'AHA' என்றால் தியாகம் என்று பொருள். 'AHA' 'ஆகா' என்றால் செல்லப்பட்டது என பொருள். அதாவது இந்த தியாகம் சுயவெறுப்பு, சுயபலி, அதாவது தனது பெருமையை தன்னை தியாகம் செய்யாமல் ஒருவன் ஆண்டவர் சன்னதியில் தியாகபலி செலுத்த முடியாது.

'பிராமண' இலக்கியத்தில் தியாகத்திற்கான பொருட்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. உணவு, உணவுபொருட்கள், தனது வாரிசுகள், கால்நடை, வருட ஆதாயம், வெற்றி, சுபிட்சம், புகழ், மேட்டிமை, பாதுகாப்பான வாழ்க்கை, நீண்ட ஆயுள், எல்லாவிதமான ஆசைகள் என தியாகத்திற்கானவைகள் பட்டியலிடப்பட்டுள்ளது. ஆதியிலே மனிதர்கள் பலியின் உண்மையான அர்த்தத்தை புரியாமல் இருந்து, அதனை நடப்பித்து வந்தார்கள். ஆண்டவர் ஒரு காலகட்டத்தில் "உங்கள் பலிகளின் திறன் எனக்கு என்னத்துக்கு" என்று கர்த்தர் சொல்கிறார். ரத்தத்தின் மேல் எனக்கு பிரியமில்லை **ஏசாயா 1:11** "சதபாத பிராமணா" வில் "அக்கினி ஹோத்ரா" பகுதியில் பலி செலுத்துபவர்கள் பாவநிவாரணம் பெறுவர் என்று சொல்லப்பட்டுள்ளது. 'பிராமணா' இலக்கியம் பிரதானமாக சடங்குகளை குறித்து சொல்லப்படுகிறது. அதுவே ஆன்மீகத்திற்கு வழிகாட்டியாக விளக்கப்படுகிறது.

<u>**இறுதியான பலி :**</u> அதாவது நம் யேசு கிறஸ்து தாமே பலியாக ஒப்பு கொடுத்த பின் விலங்கு, பறவை பலி தேவையானது இல்லை. எல்லா பாவங்களின் சார்பாக நமக்காக தம்மையே பலியாக ஆண்டவர் ஒப்புக்கொடுத்தார். அதனால் ஆதிகாலங்களில் பலி, பீடத்தில் அன்றாடம் செலுத்தப்படுவது போல இனி செலுத்தப்பட தேவைஇல்லை. மிருக பலி அனைத்தும் நிழலாட்டமாக நமது ஆண்டவரின் உயிர் தியாகத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட ஒன்று.



<u>**The Cross of Triumph :**</u> Symbolic of the triumph of the Gospel throughout the eath.

வெற்றியின் சிலுவை : உலகமெங்கும் நற்செய்தி அடையும் வெற்றியைக் குறிக்கும்.

6. முக்தி மார்க்கம்

இந்து புராண புத்தகங்களின்படி 'முக்தி' என்பது மனிதனின் இறுதி நிலை. அதாவது சாகாமையை அடையும் நிலை ரட்சிப்பின் வாயிலாக மனிதன் அடைய நினைக்கும் நிலை. 'முக்தி' என்ற வார்த்தை சமஸ்கிருத மொழியாகிய "முக்" என்ற வார்த்தையிலிருந்து வந்தது. அதன் அர்த்தம் விடுதலையாதல், சுயாதீனம். இந்த வார்த்தையிலிருந்து தான் "மோக்சா" என்ற வார்த்தை பிறந்தது, 'மோட்சம்' என்பது சாகாமை. வேதங்களும், உபநிஷத்துகளும் இறுதியாக சாகாமையை அடைய வேண்டும் என்றால் அதற்கு பாவமற்றவர் தம்மை தாமே பலியாக கொடுத்து மனிதனை மீட்டுக்கொள்ள வேண்டும். நம்மை பாவத்திலிருந்து மீட்டு சாகாமையை கொடுக்க பாவமற்றவர் தம்மையே பலியாக கொடுத்து நம்மை மீட்க வேண்டும்.

சமஸ்கிருத மொழியில் இருந்து பிறந்த வார்த்தை தான் 'யோகா' அதன் பொருள் ஒன்றோடு ஒன்று சேர்ப்பது, பிணைப்பது, இணைப்பது. அதாவது 'யோகா' என்றால் இணையம், ஆழ்நிலை, ஒருமித்த தியானம், மனதை ஒருநிலை படுத்துதல் யோகத்தின் தனிச்சிறப்பு. இதுவே யோகத்தின் சாராம்சம் ஒருநிலை படுத்துதல் எதனை மையமாக கொண்டு செயல்படவேண்டும், ஒருநிலை படுத்தும் பொருள் இறைவன். இவை வேதத்திலும், உபநிஷத்துக்களிலும் வரையறுக்கப்பட்டுள்ளது.

1. 'ஸ்வரனா' என்றால் குரு வாயிலாக தெரிந்துகொள்வது.
2. 'மனனா' கேட்டதை தொடர்ந்து நினைத்து கொண்டிருப்பது.
3. 'நிதித்தியாசனா' கடவுளை குறித்து தொடர்ந்து தியானித்து அவற்றில் நிலைத்து நிற்பது.

ஆசனம் - பிரணாயம் - யோகம்

கடந்த சில வருடங்களாக யோகாசனம் அதிகமாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு, அதனை போதிக்க, பல குருமார்கள், பல புத்தகங்கள் என குறிப்பாக மேல் தட்டு மக்கள், மத்தியதரமக்கள் மத்தியில் பிரபலமாகி உள்ளது. அதனை கடை பிடிக்க, எப்போதும் கடைபிடிக்கும், இறைவன் பெயரை முன்னிருத்தி இறைவாக்கு, இறைவன் காட்டிய வழி, இறை செயல், இறைவன் நடத்தி காட்டிய பதங்கள் (Posture) என இறைவன் பெயர் மூலம் பிரபலமாகி, அதுவே இறைவனை அடையும் வழி என

போதிக்கும் நிலைக்கு இன்றய சமுதாயம் வந்துள்ளது. யோகாசனம் என்ற பயிற்சியினை யோகம், ஆசனம், பிரணாயம் என 3 வகையாக முன்னோர்கள் தங்கள் அனுபவம் வாயிலாக பிரித்தனர். சுமார் 1200 B.C.யில் யோக சூத்திரம் "பதஞ்சலி"யால் உருவாக்கப்பட்டதாக சொல்வார்கள். அவரது தத்துவம், சரீர செயல்பாடுகள் மூலம் ஏற்படும் விளைவுகளால் மறுபிறப்பு என்ற நிலையிலிருந்து ஆத்துமா விடுதலை அடையமுடியும். சாகாமையை ஆத்துமா அடைய முடியும். 'கர்ம' விளைவுகளிலிருந்து விடுதலை அடைவதும் 'கர்ம' வினைகளே பல பிறவிகளுக்கு அடி கோலுவதுமாகும். இதுவே தற்கால யோகாசன குருமார்கள் போதிக்கும் வழி. அதற்கு பல பெயர்களில் பயிற்சி நடத்தப்படுகிறது. பல வகையான யோக முறைகளாலும், பயிற்சிகள் புத்த குருமார்களாலும், கிழக்கத்திய நாடுகளிலும் பின்பற்றபடுகிறது.

<u>**யோகத்தின் வழியாக நாம் அறிவது :**</u> மனிதன் யோக பயிற்சியால் தேக ஆரோக்கியத்தை மேப்படுத்தலாம். கவலை மறந்து மகிழ்ச்சிக்கு வழிவகுக்கலாம். நம் மனதை நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம்.

<u>**யோகத்தின் முதல் பயிற்சி : ஆசனம் :**</u> பலவகை ஆசனங்கள் வாயிலாக உடல் உறுப்புகளை (உள் உறுப்பு மற்றும் வெளி உறுப்புகள்) ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ளலாம்.

<u>**இரண்டாம் பயிற்சி : பிரணாயம் :**</u> பல கால நிலைகளில் ஆசன நிலையில் மூச்சு பயிற்சி செய்வதன் மூலம் உடலின் ரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், மூச்சு சம்பந்தமான குறைபாடுகளுக்கு நல்ல தீர்வு காணலாம்.

<u>**மூன்றாம் பயிற்சி : யோகம் :**</u> மனதை ஒருநிலைப்படுத்தி தியான நிலையில் இஷ்ட தெய்வத்தை வழிபடுவது. பொதுவாக மனதை ஒருநிலைப்படுத்த ஒரு பொருளின் மீது புத்தியை நிறுத்தி மனதை ஒருமுகப்படுத்துவது. இதனை நடைமுறைபடுத்த பெரும்பாலும் தீச்சுடரை பயன்படுத்துவர். அதாவது சுடரில் மனதை வைத்து, தீபத்தை மையமாகக்கொண்டு மனதை ஒரு நிலைபடுத்துதல். அதன் மூலம் நமது மனக் கவலைகளை மறக்க முடியும். அதனை தொடர்ந்து செய்வதால் மனம் வெற்றிடமாக மாறும். அதனை தொடர்ந்து வெற்றிடமான மனநிலையில், நாம் விரும்பும் அடுத்த நிலைக்கு செல்ல முடியும் என்பது பயிற்சி வழி.

யோகாசனம் என்பது மத சார்பற்ற (Secular) தேக ஆரோக்கியத்துக்கான பயிற்சி முறை. அதனை ஒரு மதத்தின் பெயரால் பயிற்றுவிப்பது சுய நலமிகள் வியாபார தந்திரம். உடல் பயிற்சி முறைகள் எந்த மதத்திற்கும் சொந்தமானது அல்ல. பயிற்சியின் போது கடவுள்கள் பெயரை உச்சரிப்பதும், கடவுள் வழிநடக்க யோக பயிற்சியினை பயன்படுத்துவதும் வியாபார உத்திகள். யோக பயிற்சியினை தொடர்ந்து செய்யும் போது யோகத்தின் பயிற்சி காரணமாக விரைந்து 'நிர்வாண' நிலையினை ஒருவன் அடையமுடியும். 'நிர்வாண' நிலையை ஒருவன் அடைவதன் மூலம் மனிதன் உலக கவலைகளை மறந்து ஏகாந்த நிலையில் சஞ்சரிக்க முடியும், இவை அனைத்தும் மனிதன் கவலை மறந்து ஆரோக்கிய வாழ்விற்கு வழியே தவிர அதுவே மனிதனின் உயரிய முடிவாகிய கடவுளை அடையும் வழிக்கு, அதாவது முக்தி அடைய, சாவாமையை அடைய, மோட்சம் அடைய வழி உண்டாக்குமா? என்றால் இல்லை என்றுதான் உறுதியாக சொல்ல முடியும். யோகாசன வழியில் இறைவனை அடைவது சாத்தியம் என்றால் தற்போது பள்ளிகளில், கல்லூரிகளில், தொழிற் கூடங்களில், நிறுவனங்களில் நடத்தப்படும் யோக பயிற்சி வாயிலாக கற்று தேர்ந்து 'முக்தி' அடைய முடியும். 'முக்தி' அடைய சாகாமையை அடைய, கடவுளை சென்று அடைய இது ஒரு குறுக்கு வழியாக அமையாதா? ஆறு அறிவு படைத்த மனிதன் இன்று பல விஞ்ஞான சாதனைகளை படைத்து வருகிறான். உலகம் தோன்றிய நாளிலிருந்து இன்று வரை மனிதர்களின் கண்டுபிடிப்புகளால் நாம் எல்லாவித வசதிகளையும் அனுபவித்து வருகிறோம். எதனால் எனில், மனிதன் சிந்திக்கிறான், தெளிவு பெறுகிறான். தேடலில் புதியவைகளை காண்கிறான், கண்டு பிடிக்கிறான்.

தேடல்களில் கடவுள் இல்லை. மனிதன் தேடினது கடவுளை அல்ல. தனது வாழ்கை மேம்பாட்டிற்கு, வசதிக்கு தேடலை தொடர்கிறான். யார் கடவுள் என்று மனிதன் சிந்திக்கவில்லை! தேடவில்லை! தேட முற்படவும் இல்லை? யார் கடவுள்? யார் பிரபஞ்சத்தை உருவாக்கினவர்? யார் பிரபஞ்சத்தை ஆளுகை செய்கிறவர்? யார் பிரஜாபதியாக தகுதி உள்ளவர்? யார் பிரஜாபதி? என்ற தேடல் மனிதனிடம் இல்லை. மனிதன் தேடல் முழுமையும் பொருளாதார தேடல், பொருள் குவிக்க வழி வகை தேடும் தேடல். பொருளீட்ட வழி தேடல் என்ற குறுகிய, சுயநல தேடலாக முடிவு பெறுகிறது.

கடவுள் தனக்கு கொடுத்துள்ள அறிவை இறைவனை தேட பயன்படுத்தினால் இறைவனை காண முடியும். மனிதன் தனது அறிவினை இறைவனை தேட பயன்படுத்தினால் குறுக்கு வழி இறை தேடல் எது? என கண்டு பிடிக்க முடியும். மனிதன் மோசம் போகாமல் இருக்க தனது அறிவு ஆற்றலைக் கொண்டு இறைவனை தேடி, கண்டு, வழிபட முனைய வேண்டும். அது ஒன்றே பிரஜாபதியை காணும் வழி. அதுவே மெய்வழி. இறை வழிபாடு என எடுத்துக்கொண்டால் சுலபமான வழியாக முதாதயர்கள் வழிபாடு, முந்தய தலைமுறை வழிபாடு, ஸ்தல வழிபாடு, இஷ்ட தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, பிரபல தெய்வ வழிபாடு, சக்தி வாய்ந்த தெய்வங்களை தேடி சென்று வழிபடுவது, என தனது ஆழ்ந்த அறிவினை பயன் படுத்தாமல் இயந்திரம் போல் செயல்படுவது, சடங்குகளில் ஈடுபடுவது என சுலப வழிகளை கடைப்பிடிக்கிறான். உருவ வழிபாடு, விக்கிரக வழிபாடு, சிலை வழிபாடு என தனது சிந்தனா சக்தியினை பிரயோகிக்காமல் சுலப வழிகளை கண்டு திருப்தி அடைகிறான். இதனால் அவனுக்கும், அவனை சார்ந்தவர்களுக்கும் ஒரு பயனும் இல்லை. உண்மையான தெய்வத்தை அடைய யோசிக்க வேண்டும், உரிய நபர்களை நாடி, அறிவை வளர்க்க வேண்டும். உண்மை தெய்வத்தை கண்டறிந்து அவரை அடைய முயற்சித்தால் தான் 'முக்தி' அடைய முடியும். இதற்கு எந்த குறுக்கு வழியும் இல்லை. இது வரை மாற்று வழி கண்டவரும் இல்லை. மெய்வழி காண சிந்தியுங்கள். விரதம் இருந்தாலும், பதினெட்டு படி கடந்தாலும் "தத்துவ மசி" (நீயே அது) கண்டாலும் இறைவனை காண முடியுமா? நிச்சயமாக இல்லை! இல்லவே இல்லை! மற்றும் சற்று விரிவாக சொல்ல போனால் இந்திய அரசு சுகாதாரத் துறையின் ஒரு பிரிவாக, அலோபதி வைத்தியத்துக்கு மாறாக AYUSH என்ற பகுதியினை மக்கள் நலனுக்காக இனம் கண்டுள்ளது. AYUSH மூலம் இறைவனை அடைய முடியுமா? அதாவது ஆயுர்வேதம். யோகம் மற்றும் இயற்கை வைத்தியம், யுனானி, சித்தா, ஹோமியோபதி அத்துடன் நில்லாது பிரகிருத்தி பரிக்ஷா (Prakrithi Pariksha) மற்றும் நாடி பரிக்ஷா (Nadi Pariksha) என்ற சிகிட்சை முறைகளை தற்போது பிரபலமாக உள்ள 'அலோபதி' முறையுடன் மக்கள் நல்வாழ்விற்கு முறைபடுத்தி உள்ளனர். இதன் மூலம் யோகாசனமும் இயற்கை வைத்தியமும் தேக நலனுக்கு, ஆரோக்கியத்திற்கு விஞ்ஞான ரீதியாக வரையறுக்கப்பட்ட சிகிட்சை முறை என மத்திய அரசு வகைபடுத்தியுள்ளது. அனைத்து சிகிட்சை முறைகளும் இறைவன் நமக்கு கொடுத்த வரபிரசாதம். ஒரு வைத்திய

முறைமூலம் இறைவனை அடையலாம் என்பது ஏமாற்று வழி! சிந்தித்தால் யார் இறைவன் அல்ல என உணரலாம்! மேலும் தேடினால் இறைவனை கண்டடையலாம்.

மெற்குரியும் - பாஷாணமும் - தீர்வா?

சமீப காலத்தில் யோகமுறைக்கு கோவில் அமைத்து அதன் உள் அமர்ந்து தியானம் செய்தால் நன்மை பயக்கும் என்று கூறுபவர்கள், யோக கோவிலில் 'மெர்குரி' உள் அடக்கிய சிலை வடிவமைத்து அதற்கு பூஜை, ஜெபம், ஆராதனை எதுவும் தேவை இல்லை என்றும் ஜெபம் செய்யாமல் அந்த சிலையின் பலன், அதனை சுற்றி உள்ளவர்களுக்கு கிடைக்கும் என்றும் சொல்லி, அந்த மனித வடிவமைப்பிற்கு பூஜை செய்கின்றனர். அந்த சிலைமூலம் கணக்கிலடங்கா நன்மைகள் மனித உயிருக்கு கிடைக்கும் என்ற பிரசாரம். அவர்கள் பிரசாரத்தை வரிக்குவரி ஆராய்ந்தால் முன்னுக்கு பின் முறண்பாடு! அப்படி ஒரு அபூர்வ பொருள் வடிவமைக்க முடியுமானால் அதனை சிறு உருண்டைகளாக மக்களுக்கு கொடுத்து அவரவர் வீடுகளில் வைத்து மக்கள் பயனடைய அனுமதிக்கலாமே! அதை போலவே பல பாஷாணங்களை ஒருங்கிணைத்து உருவம் கொடுத்து அதன்மூலம் அனேக நோய்க்கு அது குணமாகும் என்றால், அதனை சிறு துண்டுகளாக செய்து வேண்டுபவருக்கு கொடுத்து மக்கள் பயனடைய செய்யலாமே? அதற்கு கோவில் எதற்கு? தெய்வ சாயம் ஏன் பூச வேண்டும்? சிந்தனையே விடை கொடுக்கும்.

பகுத்து அறிந்தவர்கள் - கோட்டைவிட்டனர் :

நமது சமுதாயத்தில் பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோரை நாம் நினைத்தே ஆக வேண்டும். அவர்கள் பகுத்தறிவைக் கொண்டு இறைவனை கண்டடைய முனைந்து அவர்கள் முன்னோர்கள் வழிபடும், மற்றும் அவர்கள் வழிபட்ட தெய்வங்கள் யாவும் கல்லாகவும், உலோகமாகவும், இருக்கக் கண்டு, அறிவு தெளிந்து அம்முறைமையை பின்பற்ற மறுத்தனர். மனிதனின் படைப்பு எவ்வாறு மனிதனை காக்க முடியும் என்ற முடிவை கண்ட சீர்திருத்தவாதிகள் தாங்கள் வணங்கியதெய்வங்கள் அடிப்படையில், (இறைவனை) மறுதலித்தனர். மனித படைப்புகள் தெய்வங்கள் ஆகா என கண்டு அத்துடன் தங்கள் பகுத்தறிவை, பகுத்தறிவு சிந்தனையை முடித்துக் கொண்டனர்! உண்மை கடவுளை, படைப்பின் கர்த்தாவை காண, தங்கள் பகுத்தறிவை செலவிடவில்லை. மனித படைப்புகள் தெய்வம் ஆகா என்றால் உலக இயக்கம், தோற்றம், பிரபஞ்ச சஞ்சாரம், அற்றாட நிகழ்வு, செயல்பாடு, அழிவு, மாற்றம், இயற்கை செயல்பாடு இவை

அனைத்தும் எவ்வாறு ஒரே சீராக உலக தோற்றம் முதல் இயங்குகிறது. அதனை ஆழுகை செய்பவர் யார்? இயக்குபவர் யார்? வான சேனைகள் இயக்கம் எவ்வாறு மாறுபடாமல் உள்ளது? இதற்கு காரண கர்த்தா யார்? என்ற கேள்வியினை கேட்பதும் இல்லை! கேட்க நினைப்பதும் இல்லை! ஏன்? எனில் சிந்தித்தால், விடை தங்கள் கொள்கைக்கு முறண்பாடாக அமையும், தங்கள் வழி சீர்குலையும் என்பதால், இவை அனைத்தும் இயற்கை வழி என முடித்து, தங்களையும் ஏமாற்றி, பாமரனையும் ஏமாற்றும் நிலை!! மீண்டும் மீண்டும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இன்றய சூழிலில் நீங்கள் எதையும் நம்ப வேண்டாம்? முதலில் சிந்தியுங்கள். கேள்வி எழுப்புங்கள்? இறைவன் யார் என்று கேளுங்கள்? இந்த கேள்வியினை தொடர்ந்து கேளுங்கள். பின் உங்கள் பகுத்தறிவிற்கு ஒவ்வாதவற்றை விட்டு விலகுங்கள். விக்கிர வழிபாடு நீங்கி மெய்வழிதானாக தெரியும்.

மனநிலையை கடவுள் பால் ஒருநிலை படுத்துதல் 'யோகா'. ஒருநிலை படுத்துவதை பல நிலைகளாக வரையறுத்து மனிதனின் கவலைகளுக்கு தீர்வு காண்பதாக பயிற்சி அளிக்கின்றனர். இவ்வாறு மனிதனின் அனைத்து தேவைகளை சந்திப்பதுதான் வேதங்கள். இந்து சமஸ்கிருத வேதங்கள் சுமார் 3000-4000 ஆண்டுகள் பழமையானவை. ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் ஆகிய பழைய வேதங்கள் உலகில் உள்ள அனைத்தை குறித்தும் விளக்கி உள்ளது. அதில் பிரதானமானது 'பிரஜாபதி' பலி, பாவநிவாரணம், பாவநிவாரண பலி முக்தி, மோட்சம், ரட்சிப்பு, அதனை அடைவதற்கான வழிகள். ஆனால் எந்த வேதத்திலும், உபநிஷத்துக்களிலும் தற்போது வணங்கப்படும் தெய்வங்கள், தேவதைகள், கடவுள்கள் குறித்து எந்த ஒரு குறிப்பும் இல்லை. அப்படியானால் தோற்றுவிக்கப்பட்ட தெய்வங்கள், கடவுள்கள், தேவதைகள் அனைத்தும் மனிதனால் பிற்காலத்தில், மனிதனின் ஒழுக்க நெறிக்காக மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டவை. கதைகள், காவியங்கள், இலக்கியங்களால் தோற்றுவிக்கப்பட்ட கடவுள்களுக்கும் ஆதிகால வேதங்களுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. வேதங்கள் முக்தி வழியை காட்டுபவை. பாவத்திலிருந்து விடுபட வழிகாட்டுபவை. யார் 'பிரஜாபதி'? எப்படிபட்டவர் 'பிரஜாபதி' யாக தகுதி படைத்தவர்? என்பதை மனிதர்களுக்கு காட்டி வழிநடத்தும் அரிய பொக்கிஷங்கள்.

வாழ்க்கை வளம் பெற வகுத்த திட்டம் :

மனிதன் வாழ்நாளில் முதல் 22 வருடங்களில் 16 வருடபடிப்பை முடித்து நல்ல வேலைக்கு தன்னை தயார்

செய்கிறான். தனது 30 வயதில் வேலையில் நிலையாகிறான். 30 வருட போராட்டம் விளைவு, 30 வருடங்கள் நல்ல வருமானம் கிடைக்க அதன் மூலம் தனது வாழ்க்கை, வசதிகள், பிற்கால சந்ததி வசதி பெற பொருள் ஈட்டுகிறான். 60 வயதுக்கு பின் ஓய்வு. இது தான் இன்றைய மனிதன் வாழ்க்கை வரைவு திட்டம். அதன்பின் இருக்கும்; வர இருக்கும் மறுமைக்கான வாழ்வை சிந்தித்தானா? என்றால் இல்லை!! 30 வருடங்கள் பொருள் ஈட்ட 16 வருடம் படிப்பவன், 30 வருடம் தன்னை ஸ்திரப்படுத்த முயல்பவன், ஆண்டவருடன் வாழ இருக்கும் நித்திய வாழ்விற்கு திட்டம் வைத்துள்ளானா? நித்திய வாழ்வு, சதா பரம்பொருளுடன், ஐக்கியம், அழிவில்லா நித்தியம் ஆகிய பரலோக வாழ்க்கைக்கு திட்டம் தீட்டினானா? மனிதனின் திட்டம் முழுமையும் அனித்தியமானதற்காக திட்டம் இடுதல். குறுகிய கால திட்டம், நீண்ட காலதிட்டம் என்று பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் தான்.

தனது 30 வயதுக்குப்பின் நித்தியத்திற்கு திட்டம் தீட்டாதவன் அதனை இழந்து போவான். முதலில் பரம்பொருளை இனம் காண வேண்டும்! பரம்பொருளை அடைய வழி காண வேண்டும். தற்கால யோகிகள். மகரிஷிகள் இதனை உணர்ந்த காரணத்தால் மக்களை உருவ வழிபாட்டிலிருந்து திசைதிருப்பி தியானம், யோகம் அதாவது மனக்கட்டுப்பாடு, உடல் கட்டுப்பாடு என ஆக்கபூர்வமான பணிகளை கற்றுத்தருகின்றனர். இதன் மூலம் மனிதன் இறைவனை அதாவது 'ஏகனை', முழுமுதலோனை தியானிக்கமுடியும். அவ்வளவு சிரமப்பட்டு முழுமுதலோனை கண்டுகொள்ள பிரயாசப்படும் போது தனது 6வது அறிவை பயன்படுத்தி யார் அந்த முதல்வன்? என்பவரை இனம் காண்பது விவேகம். அதுவே நேர்வழி. சுலப வழி.

எனவே இக்கைநூலில் உண்மை கடவுள் யார்?, எப்படிபட்டவர் கடவுளாக இருக்க முடியும்? யார் கடவுள் ஸ்தானத்தில் இருக்க வாய்ப்பில்லை? கடவுளை ஆராதிக்கும் முறை, ஆதி வேதங்களும், திருமறையும், பறைசாற்றுவது எவை? என்பதை சுருங்க தெளிவுபடுத்த முனைந்துள்ளேன். இதில் என்னுடைய பங்கு, நூல்களை ஆராய்ந்து ஏற்புடைய குறிப்புகளை தொகுத்து கிராம ஊழியர்களுக்கு உதவும் வகையில் எழுதியுள்ளேன். ஊழியர்கள் மேலும் தெளிவு பெற பரிசுத்த வேதாகமம் ஒன்றே பிரதான நூல். அதன் வழி போதிக்க, அவ்வழி நடக்க அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

HAVING MADE A SELF-SACRIFICE PRAJAPATHI OFFERED HIMSELF FOR THE GODS

ஆராதனை ஸ்லோகங்கள் - THANDYAMAHA BRAHAMMANA

The Mantra starts with "Om" which has 16 implicit attributes of God and disseminated word form "A-U-M" (pronunciation : A - and, U - woo and M - him). A means Creator, U means Savior and M means protector or sustainer as 3 attributes. This means that God the Creator is the Savior and the Protector.

13 other attributes :

Ardh = The substance

Nadh = The voice

Bindh = The seed

Kale = The power

Kaladeeth = The giver of power

Shanthi = The peace

Shantiadeeth = The giver of peace

Unman (Woonmani) = Who resides in us

Manonmani = Who resides in our mind

Puri = Who ascends and descends

Madhyamai = The mediator

Patchyanti = The impartial

Parai = who declares

This means that there is only one God who has all the attributes.

ஸ்ரீ என்பது மரியாதைக்குரிய சொல். நமஹ என்றால் போற்றி என்று பொருள்.

1. ஓம் ஸ்ரீ ப்ரம்ம புத்ராய நமஹ
   (ப்ரம்மா என்றால் சிருஷ்டி கர்த்தா - Creator)
   - சிருஷ்டி கர்த்தாவின் புத்திரர் என்ற நாமத்தை உடையவரே

2. ஓம் ஸ்ரீ ஸிபிலிஷ்டாய நமஹ
   - தன்னுடைய மாம்சத்தில் உலகத்தில் வந்தவரே

3. ஓம் ஸ்ரீ ம்ருத்யும் ஜெயாய நமஹ
   (ம்ருத்யு என்றால் மரணம்)
   - மரணத்தை வெற்றி கொண்ட நாமத்தை உடையவரே

4. ஓம் ஸ்ரீ பவித்ர தேவாய நமஹ
- பரிசுத்த தேவன் என்ற பெயரை உடையவரே

5. ஓம் ஸ்ரீ அக்னீஷ்வராய நமஹ
- பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறவரே

7. ஓம் ஸ்ரீ மஹாதேவாய நமஹ
- எல்லா தேவர்களுக்கும் மேலான தேவன் (தேவாதி தேவன்) என்ற நாமத்தை உடையவரே

8. ஓம் ஸ்ரீ ஸர்வ லோகாதிபாய நமஹ
- எல்லா (சர்வ) உலகங்களையும் உண்டாக்கின அதிபதியானவரே

9. ஓம் ஸ்ரீ அபிஷிக்த தேவாய நமஹ
(அபிஷேகிக்கப்பட்டவர் என்று பொருள்)
- அபிஷேகிக்கப்பட்டவர் என்ற நாமத்தை உடையவரே

10. ஓம் ஸ்ரீ நீதி தேவாய நமஹ
- நீதியின் தேவன் (நீதிபரர்) என்ற பெயரை உடையவரே

ASOTHAMA SATH GAMAYA : LEAD ME TO TRUTH FROM UN TRUTH

யக்ஞேன யக்ஞமய ஜந்த தேவா:(ஹ)
தானி தர்மானி ப்ரதமானி - ஆஸன்
தேஹ நாகம் மஹிமான்:(ஹ) ஸசந்தே
யத்ர பூர்வே ஸாத்யா:(ஹ) ஸந்திதேவா

ஓம் ஷாந்தி! ஷாந்தி! ஷாந்தி(ஹி)!

இது ரிக் வேதத்தில் புருஷ சுக்தத்தில் உள்ள ஒரு ஸ்லோகம்.

தேவர்கள் பலியை கொண்டு, பலியினாலே, பலியை செலுத்தினார்கள் என்று அதற்கு பொருள். அதாவது பலி என்பவர் கடவுள். கடவுள்தான் பலியாக வேண்டும். அதற்காக உலகத்திலே மாமிச சரீரத்தோடு வந்து இந்த பலியை செலுத்துவதின் மூலமாக பூர்வகாலம் முதற்கொண்டு இதில்தான் மோட்சகதியை பெற்றார்கள். இதன் மூலமாகத்தான் இரட்சிப்படைந்தார்கள். (ஜீவன் கொண்டு ஜீவனைவிட்டு, ஜீவனை பெறுகிற தேவன். இயேசு தாமாகவே தம் ஜீவனை ஒப்புக் கொடுத்தார். அவரே நமக்காக பலியானார். யாராலும் அவர் உயிரை பறிக்க முடியாது.)

குறிப்பு : பிறாமணர்களாக பிறந்து, வளர்ந்து, ஆண்டவரை அறிந்து, ரட்சிப்பிற்கு உட்பட்டு, தாங்கள் பெற்ற பேரின்பத்தை, இரட்சிப்பை தன் மக்களுக்கு அறிவிக்க, அவர்களை வழிநடத்த ஆரம்பிக்கப்பட்டது தான் C.B.S.S. Trust. தற்போது உலகளவில் சுமார் 350 உறுப்பினர்கள் கொண்டுள்ள அமைப்பு. அவர்கள் ஆராதனையில் சமஸ்கிருத மொழி சுலோகங்களை நடைமுறைபடுத்துவது மாத்திரம் அல்லாது ஆண்டவரை ஏற்றுக் கொண்ட காரணத்தால் வரும் பிரச்சனைகள், திருமண காரியங்கள் ஆகியவற்றில் அக்கரை கொண்டு செயல்படுகின்றனர். அவர்களுக்காக ஜெபிப்போம்.

The Eastern Cross : The upper horizontal arm represents the place of the inscription over the head of the crucified Jesus. The lower slanting arm represents his footrest, since the Eastern Church believes Jesus was crucified with side by side not as usually pictured by the Western Church.

கிழக்கத்திய சிலுவை : மேலிருக்கும் குறுக்குக்கோடு இயேசு அறையப்பட்டபோது எழுதப்பட்ட வாசகத்தைக் குறிக்கும் கீழேயிருக்கும் சாய்ந்த கோடு, கால்வைக்குமிடத்தைக் குறிக்கும். கிழக்கத்தியத் திருச்சபை இயேசு ஒரு காலின்மேல் மற்ற காலை வைத்து அறையப்பட்டார் என்பதை ஒப்பாது, பக்கவாட்டில் வைத்தே அறையப்பட்டார் என்பதையே ஒப்பும். மேற்கத்திய் திருச்சபைதான் காலின்மேல் கால்வைத்து அறையப்பட்டார் எனக்கூறும்.

The TAU Cross : So called because of resemblance to the Greek letter (T) This is the original form of cross.

டவ் சிலுவை : இது கிரேக்க எழுத்தான (T) போன்றிருப்பதால் இப்பெயர் பெற்றது. இவ்வடிவமே சிலுவையின் மூலவடிவமாகும்.

The Jerusalem or Crusaders Cross : Usually has four small crosses between the arm, the five crosses symbolizing the five wounds of our Lord. Worn by Godfrey de Bouillon, first ruler of Jerusalem after the liberation from the Muslims.

எருசலேம் அல்லது போர்விரரின் சிலுவை : பொதுவாக நான்கு சிறு சிலுவைகள் மைய சிலுவைக்கு இடை இடையே இருக்கும். ஐந்து சிலுவைகள் ஆண்டவரின் ஐங்காயங்களைக் குறிக்கும். இசுலாமியரிடமிருந்து முதன்முதலில் எருசலேமைக் கைப்பற்றி ஆண்ட காட்பிரேடி புயுல்லான். (**Goldfrey De Bouilon**) அவர்கள் இதை அணிந்திருந்தார்.

7. வேதாகமம் - வரலாறு - உருவாக்கம் சரித்திரம்

மனிதன் இரட்சிப்பு அடைய வழிகாட்டி வேதாகமம். வேதாகமம் என்பது ஆண்டவரின் அடியார்களின் வெளிப்பாடு. ஆண்டவர் தன் அடியார்கள் மூலமாக மக்களுக்கு ரட்சிப்புக்கான வழியை காட்டி, மனிதன் தோன்றிய காலம் தொட்டு நடந்த சரித்திர நிகழ்வுகள், ஆண்டவர் தெரிந்து கொண்ட ஜனம், தெரிந்து கொண்ட தீர்க்கர்கள், வம்ச வரலாறு, சரித்திர நிகழ்வுகள், நல்லவை, கெட்டவை, நான்கு ஆகமங்கள் வாயிலாகவும், தீர்க்கதரிசனம் வாயிலாகவும், அப்போஸ்தலர்கள் வாயிலாகவும், உலக மகா சரித்திரமாம் வேதாகமம் உருவாக்கப்பட்டது.

வேதாகமத்தில் எழுத்தர்கள் 44 நபர்கள் மட்டும் இடம் பெறுகின்றனர். வேதாகமம் வேலை 1600 வருடங்கள் நடந்தது. வித்தியாசமான இடங்களில் பலகால கட்டங்களில் எழுதியவர்கள் வாழ்ந்தனர். ஆனால் எழுத்து நடைமுறையில் மாற்றம் தெரியவில்லை.

ஆதாம் வாழ்ந்த காலம் கி.மு. 4000.

முதலாம் பிரளயம் கி.மு. 2400.

ஆபிரகாமை ஆண்டவர் தன் நண்பனாக கி.மு.2000ல் தெரிந்து கொண்டார்.

மோசேயின் காலம் கி.மு. 1400.

கி.மு. 933ல் இஸ்ரவேல், யூதா என்ற நாடுகள் உதயமாயிற்று.

இஸ்ரவேல் தங்கள் சுதந்திரத்தை இழந்தது கி.மு. 721.

யூதா தங்கள் சுதந்திரத்தை இழந்தது கி.மு. 606.

எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டது கி.மு. 586.

எருசலேம் தேவாலயம் திரும்ப கட்டத் தொடங்கியது கி.மு. 520 எஸ்றா தீர்க்கதரிசி எருசலேமிற்கு வந்தது கி.மு. 457. நெகேமியா தீர்க்கதரிசி எருசலேம் மதில்களை கட்டத் தொடங்கி புதிய ஏற்பாட்டிற்கும், பழய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட காலம் சுமார் 400 வருடங்கள்.

இந்த இடை வெளியில் 'பெர்சிய', கிரேக்க வல்லரசுகளை 'மக்கபேயர்' அரசாண்டார்கள். இறுதியாக ரோம வல்லரசு கி.மு.63ல் துவங்கியது. கர்த்தர் பிறந்த காலம் ரோம பேரரசு ஆண்ட காலம்.

வேதாகமம் மொழி பெயர்ப்பு :

பழைய ஏற்பாடு நெடுங்காலமாக யூதர்களுடைய வேதமாக இருந்தது. கடவுளின் வெளிப்பாடு தங்களுக்கு மட்டுமே, என அவர்கள் எண்ணியதால், மொழி மாற்றத்திற்கோ கொள்கையை

பரப்பவோ அவர்கள் முயற்சிக்கவில்லை. ஏனெனில் தாங்கள் கடவுளின் பிள்ளைகள் என்ற எண்ணம். கி.மு.285-247ல் எகிப்து தேச அரசர் 'பிலடெல்பஸ்' **எபிரேய மொழியில் இருந்த பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க விரும்பினார்.** அதனை நிறைவேற்ற 72 யூத அறிஞர்களை நியமித்தார். அந்த யூத அறிஞர்கள் பழைய ஏற்பாட்டை 72 நாட்களில் மொழி பெயர்த்தனர். எனவே அந்த கிரேக்க பழைய ஏற்பாட்டிற்கு **'செப்து வகிந்தா'** என பெயர் சூட்டினர். அந்த பெயருக்கு 72 என்பது பொருள். கி.பி. 2ம் நூற்றாண்டில் கிறிஸ்துவுக்கு முன் உள்ள புத்தகம் எல்லாம் பழைய ஏற்பாடு என்றும், கிறிஸ்துவுக்கு பின் உள்ள புத்தகங்கள் எல்லாம் புதிய ஏற்பாடு என்றும் வரையறுக்கப்பட்டது. கி.பி. 130 வரை நான்கு சுவிசேஷங்களும் பவுலின் 13 நிருபங்களும் மட்டுமே புதிய ஏற்பாடு என வரையறுக்கப்பட்டது.

கி.பி. 404ல் ஜெரோம் என்ற பக்தன் வேதத்தை 'லத்தின்' மொழியில் மொழி பெயர்த்தார். கி.பி.521ல் மார்டின் லுத்தர் காவலில் இருக்கும் போது புதிய ஏற்பாட்டை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். பிற்பாடு முழு வேதாகமத்தையும் மொழி பெயர்த்தார். கி.பி.1538ல் இங்கிலாந்தில் 'டிண்டேல்' 'காவடேல்' ஆங்கிலத்தில் வேதத்தை மொழி பெயர்த்தனர். கி.பி.1611 ஆண்டில் Authorised Version இங்கிலாந்தில் வெளிவந்தது. 1804ல் ஆண்டு மார்ச் 7ம் தேதி இங்கிலாந்தில் வேதாகம சங்கம் கூடி 1955க்குள் 808 உலக மொழிகளில் வேதாகமம் மொழி பெயர்க்க தீர்மானிக்கப்பட்டது.

வேதாகமம் - சரித்திரம் புத்தகம்

வேதாகமம் 66 புத்தகங்கள் அடங்கியது. அவற்றில் 39 புத்தகம் பழைய ஏற்பாடு. யூதர்கள் 12 தீர்க்கதரிசிகள் புத்தகம் என்று, 'ஓசாயா' முதல் 'மலாக்கி' வரை உள்ள தீர்க்கதரிசன புத்தகங்களை ஒரே புத்தகமாக பயன்படுத்துகின்றனர். பழய ஏற்பாட்டு நூல்கள் பெரும்பாலும் எபிரேய மொழியிலும் சில 'Aramaic' மொழியிலும் காணப்படுகிறது. பழைய ஏற்பாடு நூல்கள் வரலாறும், புதிய ஏற்பாடு நூல்கள் வரலாறும் ஒரே மாதிரியாக உள்ளன. அதாவது இரண்டு பகுதிகளும் வாய் மொழியாக சொல்லப்பட்டு, பிரசிங்கப்பட்டு, போதிக்கப்பட்ட பகுதிகள். **'குமரான்' குகை கண்டுபிடிப்பு** வாயிலாக பழய ஏற்பாட்டு பகுதியின் நம்பகத்தன்மை 2000 வருடத்துக்கு முந்தய பிரதிகளும் 1947ம் வருட உபயோகத்திலிருந்த பகுதியின் நிலைப்பாடும் ஒத்துப்போவது பழைய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையை உறுதிபடுத்துகிறது.

பழைய ஏற்பாட்டின் வழியை பின்பற்றி, உருவானதுதான் புதிய ஏற்பாடு, சுவிசேஷம். ஆண்டவரின் சீடர்கள் அப்போஸ்தலர்கள், வாய் மொழியாக அறிவித்ததும், சொன்னதும் பிரசங்கித்ததும், உறுதிபடுத்தினதும் ஆதாரமாக கொள்ளப்பட்டது. சுமார் 50 A.D.(கி.பி.)ல் ஒன்றுக்கு மேற்பட்ட, ஆண்டவராகிய ஏசுகிறிஸ்துவின் சுவிசேஷ செய்திகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது.

ஆண்டவரின் சுவிசேஷத்தை முறைபடுத்த கொள்கைகள் **'CANON'** (an established Law of Christian Church). உருவாக்கப்பட்டது. அந்த கொள்கையை அணைத்து திருச்சபைகளும் ஏற்றுக் கொண்டன.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகள் :

1. நம்பகத்தன்மை 2. தீர்க்கதரிசன ஆதாரம் 3. Was it dynamic 4. Was it received 5. சேகரிக்கப்பட்டது, படிக்கப்படுவதும் உபயோகத்தில் உள்ளது என அணைத்து அம்சங்களும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் பழைய ஏற்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், அதே கொள்கை அடிப்படையில் புதிய ஏற்பாடு மறு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ரோமன் கத்தோலிக்க சபை 1546 ஏப்ரல் மாதம் 8ம் தேதி வரை பழைய ஏற்பாடு அங்கிகாரத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. Protestant சபைகள் non Canonical பகுதியான Apocryphal பகுதியினை ஏற்றுக் கொள்ளவில்லை. இதன்பின்பு தான் 19ம் நூற்றாண்டில் ஒருங்கிணைந்த வேதாகமம், திருவிவிலியம் புழக்கத்திற்கு வந்தது. வேதாகமம் உருவாக அடிப்படையாக அமைந்த 5 கொள்கைகளுக்கு ஆதாரம், லூக்கா எழுதின சுவிசேஷம் 1:2-4. **ஆரம்பம் முதல் கண்ணாரக் கண்டு வசனத்தை போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்து நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களில் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது நலம்.** என தேயோப்பிலுக்கு எழுதுகிறார்.

யாத்திரையாகமம் பகுதியில் கர்த்தர் மோசேயை நோக்கி, என 100க்கு மேற்பட்ட இடங்களில் வருவதால், ஆண்டவர் கூறியதை மோசே குறித்து வைத்துள்ளார் என தெரிகிறது.

யாத்திரையாகமம் 17:14 கர்த்தர் மோசேயை நோக்கி இதை நினைவுகூறும் பொருட்டு நீ ஒரு புத்தகத்தில் எழுதி யோசுவாவின் செவிகள் கேட்க வாசி. அந்த காலத்தில் எகிப்து தேசத்தில் புழக்கத்தில் இருந்த "பாப்பைரஸ்" என்ற நாணல் தயாரிப்பு காகிதம் இருந்தது. இன்றும் எகிப்துக்கு சுற்றுலா செல்பவர்கள் அந்த காகித தயாரிப்பு முறையை பார்த்து செல்கின்றனர். அந்த காலத்தில் வேதத்தை தெளிவாக, ஆழமாக, முழுமையாக அறிந்த மனிதர்கள் வரிசையில் முன்னிலை வகிப்பவர் எஸ்ரா. இவரை புதிய ஏற்பாடு காலத்தில் பவுல் அப்போஸ்தலுனுக்கு ஒப்பிடலாம். இவர்களுக்கு ஒத்த வேத பண்டிதர் 4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், எபிரேய மொழியில் முழு வேதாகமத்தை (Vulgate) மொழிபெயர்தவரும் உலகில் வேதாகமத்திற்கு அதிகபட்ச விளக்கம் கொடுத்தவரான **Jerome - ஜெரோம் என்ற வேத பண்டிதர்.**

நாளாகமம், எஸ்ரா, நெகேமியா, எஸ்தர் போன்ற சரித்திர புத்தகங்களை எஸ்ராதான் எழுதினார் என நம்பப்படுகிறது. எசேக்கியேல், தானியேல் என்ற தீர்க்கதரிசிகள் புத்தகங்களை எஸ்ரா தான் மறு ஆய்வு செய்தார் என

நம்பப்படுகிறது. 'எஸ்ரா' யூதருடைய சங்கத்திற்கு Jewish Synagogueக்கு தலைவராக இருந்தவர். இவர் பாபிலோனில் வாழ்ந்த யூத ஆசாரியன். எஸ்ரா வாழ்ந்த காலம் கி.மு. 457. இதே கி.மு. 5ம் நூற்றாண்டில் தான் இந்தியாவில் புத்தரும், சீனாவில் கன்ஃபூசியசும், கிரேக்க நாட்டில் சாக்ரடீசும் (470 – 399) வாழ்ந்து வந்தார்கள்.

பரிசுத்த வேதாகமம் வாயிலாக உலக சரித்திரத்தில் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் குறித்து அறிந்து கொள்ளலாம். ஆண்டவரால் உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் துவக்கி இன்றுவரை சுமார் 6000+ ஆண்டுகள் ஆகிறது. 'ஆதாம்' 'நோவா' காலத்து பெருவெள்ளம் வரை சுமார் 2000 வருடங்கள். நோவா காலத்து பெருவெள்ளம் முதல் இயேசு கிறிஸ்து பிறப்பு வரை 2000 ஆண்டுகள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து இன்று வரை சுமார் 2000 வருடங்கள். இந்த 6000 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்கள் இதுதான் என உலகில் எந்த சரித்திரமும் இல்லை. எனவே ஆதாம் முதல் இன்று வரை 6015 ஆண்டுகள். அதற்கு முந்தின காலங்கள் குறித்தும், இனிவரப்போகிற நித்திய காலங்கள் குறித்தும் கூறுகிற புத்தகம் உலகில் ஒன்று உண்டு என்றால் அது நம்மிடம் உள்ள வேதாகமம் ஒன்றுதான். அவைகளை தெரிந்து கொள்ள பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு தேவை. **யோவான் 1:1–3, எபிரேயர் 11:3, ஏசாயா 43:11–13, 44:6–7, 24–26.**

ஆதிகாலம் என நாம் குறிப்பிடுவது 'ஆதாம்' துவக்கி 'மோசே' காலம் வரை. ஏறக்குறைய 3500 ஆண்டுகள் இந்த காலங்களில் மனிதர்கள் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்தனர். உதாராணமாக ஆதாம் 930 ஆண்டுகள். அவரது மகன் 'சேத்' 912 ஆண்டுகள். அவரது மகன் ஏனோஸ் 905 ஆண்டுகள் 'ஏனோசின்' மகன் 'கேனான்' 910 ஆண்டுகள் மெத்தூசலா 969 ஆண்டுகள். பெருவெள்ள காலத்து நோவா 950 ஆண்டுகள் என, ஆதி மனிதர்கள் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்திருக்கின்றனர். எனவே இவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என பல தலைமுறை, சந்ததியினரை பார்த்திருக்க முடியும். எனவே தங்கள் வாழ்நாளில் நடந்த சம்பவங்களை, சரித்திர நிகழ்வுகளை, பின் சந்ததியினருக்கு தாங்களே வாய்மொழி செய்தியாக அறிவித்திருப்பார்கள். எனவே அவர்கள் காலத்தில் பேசப்பட்டது அனைத்தும் **100% உண்மை செய்திகளே.**

நோவா காலத்தில் பெரு வெள்ளத்திற்கு பிறகு மனிதர்கள் வாழ்நாள் குறுகிவிட்டாலும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு, மோசே போன்ற மனிதர்கள் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியம் காரணமாக, பரிசுத்த ஆவியால் கடந்த கால நிகழ்வுகள், நிகழ்கால காரியங்கள் குறித்து தெளிவும், எதிர்காலத்தை குறித்த தீர்க்கதரிசனமும், வெளிப்பாடும் உடையவர்களாக வாழ்ந்தனர் என்பது நிதர்சனம்.

ஆயுசுநாட்கள் சுறுங்கியது :

பெருவெள்ள காலத்துக்குமுன் சுமார் 900 வருடங்கள் வாழ்ந்த மனிதர்களின் காலம் 120 வருடங்களாக சுறுங்கியது. பெரு வெள்ள காலத்து மனிதர்கள் சுமார் 100 வயதில் திருமணம் செய்தனர்.

மோசே துவங்கி ராஜாக்கள் காலம் :

மோசேயின் காலத்தில் கி.மு. 1500 முதலாவது 10 கட்டளைகளை தேவன் கற்பலகையில் எழுதி மோசேயிடம் கொடுத்தார். **யாத்திராகமம் 24:12, 32:15-16, 34:1, 4:28 உபாகமம் 4:13** அதன்பின் தேவன் சொன்ன அனைத்து செய்திகளையும் மோசே எழுதினார். **யாத்திராகமம் 17:14 உபாகமம் 31:22, 24-26, 30 மோசே** எழுதினதுதான் ஆதியாகமம் முதல் உபாகமம் வரை உள்ள 5 புத்தகம் நியாய பிரமாணம். இந்த 5 புத்தகங்கள்தான் யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மறைபிரளா ஒத்த புத்தகங்கள். இந்த புத்தகங்களை ராஜாக்கள் தவறாமல் வாசித்து கடைபிடிக்க வேண்டும் என்று கர்த்தர் கொடுத்த கட்டளை. **யோசுவா 1:8 உபாகமம் 17:18, 19.** இந்த நடைமுறை கடைபிடிக்கப்பட்டு அவ்வப்போது மக்கள் மத்தியில் வாசிக்கப்பட்டது. **யோசுவா 8:34, 35 நாளாகமம் 17:9 நெகேமியா 8:1, 9:3, 34:14-19** நாளாகமம் என்பது நாட்கள் ஆகமம். அதாவது அன்றாட நிகழ்வுகளை கூறுவது நாள் ஆகமம். ராஜாக்கள் சம்பிரதிகளை வைத்திருந்தனர். இந்த சம்பிரதிகள் வேதபாரகர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் எழுத்தர், பதிவாளர்கள் என்றும் சொல்லலாம். சரித்திரங்களை எழுதுவதும், பாது காப்பதும், தெரிவிப்பதும், இவர்கள் வேலை. இது குறித்து வேதத்தில் அனேக குறிப்புகள் உள்ளன. **எஸ்ரா 7, நெகேமியா 8, 2 ராஜாக்கள் 12, 19, 22, 25, 1 நாளாகமம் 18, 24. 2 நாளாகமம் 24 எஸ்தர் 1, 6, மத்தேயு 2:4 ஏசாயா 36 எரேமியா 36.** ராஜாக்களுக்கு மாத்திரம் அல்ல, தீர்க்கதரிசிகளுக்கும் சம்பிரதிகள் இருந்தனர். **எரேமியா 36:14,18** தீர்க்கதரிசனத்தை குறித்து வைப்பது, அரசுக்கு தெரிவிப்பது சம்பிரதிகள் வேலை. அந்நாட்களில் இவ்வாறாக செய்திகள் பாதுகாக்கப்பட்டன. மனிதனுடைய இரட்சிப்பிற்காக இவ்விதமாக பாதுகாக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள் நீண்ட கால ஆய்விற்கு பின், பல கட்ட ஆலோசனைக்கு பிறகு, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலினால் ஆராயப்பட்டு ஆதி திருச்சபை தலைவர்கள் கி.பி. 4ம் நூற்றாண்டில் முழு வேதாகமம் வெளியிட்டனர். அதன் தொடர்ச்சியாக பல ஆய்வுகள் கலந்துரையாடல், கருத்து பரிமாற்றம் என பல ஆய்வுகளுக்கு பின்தான் இன்றைய வேதாகமம் நம் கைக்கு கிடைத்தது.

The Maltese Cross : Consisting of four spearheads with points together. Dates back to the day of the Crusades when the order of the Hospitallers used it for their emblem. Later they made their headquarters on the island of Malta.

மால்டாவின் சிலுவை : ஒவ்வொரு முனையும் இரு கூறுகளைக் கொண்ட நான்கு கூர்முனைகளை உடையது. சிலுவைப்போரின் காலத்தில் ஆஸ்பிட்டவ்வர்கள் தங்கள் அடையாளமாகக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் தங்கள் தலைமையிடத்தை மால்டாவிற்கு மாற்றினர்.

8. உடன்படிக்கை : பழைய will + புதிய will

உடன்படிக்கை என்றால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்ட சாராம்சம். அந்த வகையில் ஆண்டவர். திருத்தூதர்கள் வழியாக மக்களுடன் ஏற்படுத்தியது; பழைய உடன்படிக்கை. இது பல கால கட்டங்களில், பல நிலைகளில், பல காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. உடன் படிக்கையை அதாவது ஒப்பந்தத்தை உடன்பட்டவர்கள் மாற்ற நியதி உண்டு. அந்தவகையில் உடன்படிக்கை நாயகன் மக்களுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை காலத்திற்கு ஏற்ப மாற்றி, பின் நிரந்தரமாக ஆண்டவர் பூவுலகில் அவதரித்த பின் மக்களுடன் ஏற்படுத்துகிறார். ஆகவே பழைய ஒப்பந்தம், புதிய ஒப்பந்தம் என ஆண்டவர் பூவுலகில் அவதரித்த காலத்திற்குமுன், அவதாரத்திற்கு பின் என வகைப்படுத்தியுள்ளார்.

புதிய ஒப்பந்தம் எவ்வளவு நிரந்தரமானது என்றால் ஒப்பந்த நாயகன் இப்பூவுலக வாழ்வை முடித்துக் கொண்டது மூலம் புதிய ஏற்பாடு புதிய will நிரந்தரமாகிறது. அண்ட சராசரங்களை ஆளுகைச் செய்யும் அநாதி தேவன் உலகையும், அதினுள் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் தம்முடைய வல்லமையான வார்த்தையால் படைத்தார். ஆனால் மனிதனை மாத்திரம் தம்முடைய கரத்தினால் உருவாக்கி தம்முடைய ஜீவ சுவாசத்தை அவனுக்கு கொடுத்து ஜீவ ஆத்துமாவாக மாற்றினார்.

பழைய உடன்படிக்கை காலத்திலும் புது உடன்படிக்கை காலத்திலும் பின்பற்ற ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள்தான் 10 கற்பனைகள். இதனை ஆண்டவரே அவரது கரத்தால் மக்களுக்கு கொடுத்தார். அந்த 10 கற்பனைகள்தான் இன்றளவும், உலகம் அனைத்திற்கும் சட்டம் இயற்ற அடிப்படை தத்துவம். அதுவே அனைத்து சட்டத்திற்கும் மையப்பொருள், 10 கற்பனைகள் எதிர்மறை தத்துவத்தில் அமைந்தது. அதாவது அந்த காலத்தில் மக்கள் 6வது அறிவை பெற்றிருந்தாலும் கற்கால மனிதர்களாக இருந்தமையால் கேடானவைகளை செய்யாமல் இருக்க இதனை செய்யாதே. இப்படி நடக்காதே என எதிர்மறையாகச் சொல்லப்பட்டது. Negative Approch.

10 கற்பனைகளாவன :

1) உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

2) யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்.

3) உன்னுடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

4) ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக.

5) உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6) கொலை செய்யாதிருப்பாயாக.

7) விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

8) களவு செய்யாதிருப்பாயாக.

9) பிறனுக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10) பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

ஆகவே ஆண்டவர் வாழ்வுக்கு ஒத்த நெறிமுறைகளை இசைவான கருத்துக்களாக மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி நடக்க வேண்டும். வாழ்க்கை நெறிமுறை இப்படி அமைய வேண்டும். என இசைவான வழியில் போதிக்கப்பட்டது. Positive Approach மனிதனில் தேவன் அன்புக் கூர்ந்து அவருடைய கிருபையையும், மகிமையையும் அவர் மனிதனுக்குக் கொடுத்தார். அத்துடன் அவனுக்கு (Self will) சுய சித்தத்தை கொடுத்து அவன் ஆண்டவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என விரும்பினார். எந்த ஜீவராசிக்கும் இல்லாத ஆறாவது அறிவைக் கொடுத்து, **நன்மை, தீமை** அறியும் ஆற்றலைக் கொடுத்தார். மனிதனை தனது நண்பனாகக் கருதி அவனுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

அந்த வகையில் பழைய ஏற்பாடுக் காலத்தில் உருவானதுதான் ஏதேன் உடன்படிக்கை, நோவா உடன்படிக்கை, ஆபிரகாம் உடன்படிக்கை, பாலஸ்தீனிய உடன்படிக்கை, ஞாயப்பிரமாண உடன்படிக்கை, தாவீதின் உடன்படிக்கை. இவையணைத்தும் முடிவிற்கு வந்தது. ஆனால் முடிவிற்கு வராத புதிய உடன்படிக்கை ஆண்டவரால் அவருடைய வருகைக்குப் பின் மனிதனுடன் ஏற்பட்டது.

பழைய உடன்படிக்கை	புதிய உடன்படிக்கை
1. மோசே மூலமாக வந்தது. நியாயாதிபதிகள் 1:17	1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக வந்தது. எபிரெயர் 8:6, 9:15
2. மோசேயின் சட்டங்கள். அப்போஸ்தலர் 13:38,39	2. ஆண்டவரின் சட்டம். கலாத்தியர் 6:2
3. பாவ பிரமாணம். ரோமர் 7:23, 8:2	3. நீதி பிரமாணம். ரோமர் 9:39
4. மாமிசத்தின் பிரமாணம். ரோமர் 7:5,6	4. ஆவியின் பிரமாணம். ரோமர் 8:2
5. விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்தது அல்ல. கலாத்தியர் 3:12	5. விசுவாசத்தின் அடிப்படை. ரோமர் 3:27
6. அடிமைத்தன நுகம். கலாத்தியர் 5:1	6. விடுதலைப் பிரமாணம். யாத்திராகமம் 1:25
7. இயேசுக் கிறிஸ்துவால் முடிவுக்கு வந்தது. ரோமர் 10:4	7. இயேசுக் கிறிஸ்துவால் துவக்கப்பட்டது. எபிரெயர் 8:6, 10:19
8. சாவுக்கு ஏதுவான பிரமாணம். 2 கொரிந்தியர் 3:7	8. ஜீவனுக்கு ஏதுவான பிரமாணம். ரோமர் 8:2
9. ஆக்கினைத் தீர்ப்பு. 2 கொரிந்தியர் 8:9	9. சுயாதினப் பிரமாணம். கலாத்தியர் 5:1
10. நிழலாட்டம். கொரிந்தியர் 2:14,17	10. உண்மை நிலை. எபிரெயர் 10:1-8

11. பழைய உடன்படிக்கை நிறைவேறியது. மத்தேயு 5:17,18	11. புதிய உடன்படிக்கை தற்போது நடைமுறையில் உள்ளது. எபிரெயர் 8:6, 10:9
12. முழுமையானது அல்ல. எபிரெயர் 7:19	12. முழுமையானது. எபிரெயர் 7:19
13. ஏராளமான பலிகளினால் பாவ நிவாரணம்.	13. ஒரே பலியினால் பாவம் மன்னிக்கப்பட்டது.
14. பாவ நிவாரண பலிகள் தொடருகிறது. எபிரெயர் 10:3	14. ஒரே பலியினால் பாவம் மன்னிக்கப்பட்டது. எபிரெயர் 8:12
15. விலங்குகள் பலியிடப்பட்டன. எபிரெயர் 9:12	15. நமக்காக இயேசு தம்மையே பலியாக்கினார். எபிரெயர் 9:14-28
16. உடன்படிக்கை பாவியின் மூலமாக நிகழ்கிறது. கலாத்தியர் 3:19	16. பாவம் அற்றவர் மூலமாக நிகழ்கிறது. 1 தீமோத்தேயு 2:5
17. கிரியைகளினால் ஆன உடன்படிக்கை. ரோமர் 8:26-31	17. கிருபையினால் ஆன உடன்படிக்கை. யோவான் 1:17
18. தற்கால ஆசாரியத்துவம். எபிரெயர்7:23	18. நிரந்தர ஆசாரியத்துவம். எபிரெயர் 7:17
19. ஆரோன் வழி ஆசாரியத்துவம். எபிரெயர் 7:11	19. மெல்கி சேதேக் முறை ஆசாரியத்துவம். எபிரெயர் 5:5-10, 7:21
20. ஆசாரியர்கள் சட்டத்தால் நியமிக்கப்பட்டவர்கள். எபிரெயர் 7:28	20. ஆசாரியர்கள் உடன்படிக்கை மூலமாக நியமிக்கப்பட்டவர்கள். எபிரெயர் 7:21-28
21. இரட்சிப்பு இல்லை. எபிரெயர் 2:4	21. நிரந்தர இரட்சிப்பு. எபிரெயர் 5:19, 10:10
22. முழுமையானது இல்லை. எபிரெயர் 7:19	22. உடன்படிக்கை முழுமையானது. எபிரெயர் 7:19, 10:14
23. விலைக்கு கொள்ளப்படுவது. எபிரெயர் 5:1, 9:9	23. இலவசமான உடன்படிக்கை. எபேசியர் 2:8, வெளி 22:17
24. இரக்கம் இல்லாதது. எபிரெயர் 10:28	24. முழுவதும் இரக்கத்தினால் ஆனது. எபிரெயர் 8:12
25. தேவ தூதர்களால் கொடுக்கப்பட்டது. கலாத்தியர் 8:19	25. பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்டது. எபிரெயர் 10:15-18
26. உடன்படிக்கை முடிவுக்கு வந்தது. 2 கொரிந்தியர் 3:13	26. உடன்படிக்கை நிரந்தரமானது. 2 கொரிந்தியர் 3:11
27. உடன்படிக்கை இஸ்ரவேலுக்கானது. உபாகமம் 4:7-8, 5:8	27. உடன்படிக்கை உலக மக்கள் அனைவருக்கும் ஆனது. மத்தேயு 26:78

எனவே உடன்படிக்கையை மீறுவது இரட்சிப்புக்கு வழிவகுக்காது. நிரந்தர வாழ்விற்கு ஆண்டவரின் மகிமையில் பிரவேசிக்க வழிவகை செய்யும் புதிய உடன்படிக்கையை பின்பற்றி நடப்பது ஒன்றே மறுமைக்கு உரிய வழி.

The Cross Patt'ee : Resembles the Maltese Cross. A beautiful form of the cross used widely for decorative purposes.

பேற்றே சிலுவை : மால்டா சிலுவை போன்றது. அழகிய இச்சிலுவை வடிவம் பெருலும்பாலும் ஒப்பனை செய்ய பயன்படுத்தப்படுகிறது.

9. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு
உலக மகா சரித்திரம்

வேதாகமத்தை ஆராய்ந்து பாருங்கள். சரியாக கணக்கிட்டால் கிறிஸ்து பிறந்து 2018 ஆண்டுகள் கணக்கிடப்படுகிறது. பொதுவாக இயேசுவின் வம்ச வரலாற்றை நம்மில் அனேகர் மேல்வாரியாக வாசித்திருப்போம். இயேசு கிறிஸ்து முதல், ஆதாம் வரைக்கும் உள்ள பெயர்களை நாம் வாசிப்போமானால் பழைய ஏற்பாடு முழுவதும் நாம் வாசிப்பதற்கு சமம். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு இரண்டு நபர்களால், அதாவது மத்தேயு முதலாம் அதிகாரத்திலும், லூக்கா மூன்றாம் அதிகாரத்திலும் விளக்கப்படுகிறது. மத்தேயு யோசேப்பின் வம்ச வரலாற்றையும், லூக்கா இயேசுவின் தாயார் மரியாளின் வம்ச வரலாற்றையும் விளக்குகின்றனர். வம்ச வரலாறுகளை யூதர்கள் பத்திரமாக பாதுகாத்து வைத்துள்ளனர். பூலோகத்தில் வாழ்பவர்கள் அனைவரும் நோவாவின் 3 மகன்கள் மூலமாக உண்டானவர்கள். அப்படியானால் 'நோவா' முதல் 'ஆதாம்' வரை உள்ள 10 மூதாதையர்களுடன் நமக்கு சொந்தம் உண்டு. தற்போதய ஆய்வின்படி ஆதாம் துவங்கி நோவாவின் காலம் வரைக்கும், அதாவது வெள்ளபெருக்கு முடிய சாதாரணமாக மக்கள் 900 வருடங்கள் உயிர்வாழ்ந்தனர். **ஆதியாகமம் 6:3 வசனத்தின்படி ஆண்டவர் மனித உயிரை 120 வருடங்களாக நிர்ணயித்தார்.** மனிதர்களின் பாவத்திநிமித்தம் அவர்கள் வாழ்நாள் குறைக்கப்பட்டது. அதற்கு ஏற்ப உலகில் நடந்த நிகழ்வுகள், மனித உயிரின் வாழ்நாளை குறைத்து நிர்ணயிக்கிறது. **ஆதியாகமம் 1:6-7 வசனங்கள் "பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும், அது ஜலத்தினிற்று ஜலத்தை பிரிக்கக்கடவது என்றும் கூறினார்."** தேவன் ஆகாய விரிவை உண்டுபண்ணி ஆகாய விரிவிற்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும், ஆகாய விரிவிற்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார். இந்த உலக அமைப்பின் அடிப்படையில்தான் மனிதன் 900 வருடங்கள் வாழ முடிந்தது. அதாவது பூமியின் மேலும், ஆகாயத்தின் கீழ் நிலையிலும், பிரிவின்படி சீதோஷணம், சுற்று சூழல் அனைத்தும் சுத்தமான நிலையில் மனிதனின் வாழ்நாள் நீட்டிக்கப்படுகிறது. நோவாவின் காலத்து பிரளயம் காரணமாக மேல் குறிப்பிட்ட பூகோள அமைப்பு ஆண்டவரால் மாற்றப்பட்டு, கர்த்தர் முடிவுப்படி மனிதன் வாழ்நாள் 120 வருடங்கள் என்ற முடிவிற்கு பூகோள அமைப்பு மாற்றப்பட்டு, இன்றய கோள் அமைப்பு உருவாகிறது. **ஆதியாகமம் 7:11** வசனத்தின் படி நோவாவின் காலத்தில் ஜலபிரளயம் ஏற்பட்டது அந்நாளிலே மகா ஆழத்தின் ஊற்றுக்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகள் திறவுண்டன. பிரளயத்தை நிறுத்த வானத்தின் மதகுகள் அடைபட்டன. வானத்தின் மழையும் நின்று போயிற்று. **ஆதியாகமம் 8:2.** நோவாவின் காலத்து மனித உயிரின் வாழ்விற்கும், சீதோஷ்ண நிலை, சுற்று சூழல் நிலைக்கும், இன்றய சுற்று சூழலுக்கும் வேறுபாடு ஜல

பிரளயத்தால், பிரளயித்திற்கு பின் ஏற்பட்ட பூகோள மாற்றமே காரணம். ஆண்டவரின் அனாதி தீர்மானத்தின்படி மனிதன் ஆயுட்காலம் 900 வருடங்களிலிருந்து 120 வருடங்களாக குறைக்கப்பட பூலோக நிலை மாறுதலே காரணமாக அமைகிறது. நோவாவின் 3 மகன்கள் (1) சேம் (2) காம் (3) யாப்பேத். இவர்களில் மூத்தவர் **'சேம்'** மூலமாக இயேசுவும் யூதர்களும் ஒரு வேளை ஐரோப்பா கண்டத்தை சேர்ந்தவர்களும் வந்திருக்க வேண்டும். இரண்டாவது மகன் **'காம்'** மூலமாக ஆப்பிரிக்கர்கள் உண்டாயிருக்க வேண்டும். கடைசி மகன் **'யாப்பேத்'** மூலமாக ஆசியா கண்டத்தில் உள்ள அனைவரும் (யூதர்கள் தவிர) உண்டாயிருக்க வேண்டும். **இதற்கு ஆதாரமாக நோவாவின் வார்த்தைகள் தேவன் 'யாப்பேத்தின்' கூடாரத்தை விசாலமாக்குவார். அவன் 'சேமின்' கூடாரத்தில் வாசம் பண்ணுவான். ஆதியாகமம் 9:27.** இன்றும் யாப்பேத்தின் குமாரர்கள் சேமின் கூடாரத்தில் தங்கியிருப்பது உண்மை.

இயேசுவின் உலக பிரகார வம்ச வரலாறு இரண்டு பகுதிகளாக அதாவது யோசேப்பு வழியிலும் மரியாளின் வழியிலும் கொடுக்கப் பட்டுள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில் யோசேப்பு முதல் தாவீதின் குமாரன் சாலமோன் வழியாக வம்ச வரலாறு கொடுக்கப்படுகிறது. லூக்கா சுவிசேஷத்தில் யோசேப்பு என ஆரம்பிக்கப்பட்டு உடனே மரியாளின் தகப்பனாகிய ஏலியின் வரிசைக்கு வம்ச வழி மாறி விடுகிறது. **மத்தேயு 1:16 படி யாக்கோபு யோசேப்பை பெற்றான். ஆனால் லூக்கா 3:23ல்** யோசேப்பு ஏலியின் மகன் என சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் ஏலி மரியாளின் தகப்பன். **அதாவது யோசேப்பு ஏலியின் மருமகன். மூலபாஷையில் யோசேப்புக்கும் ஏலிக்கும் நடுவில் மகன் என்ற வார்த்தை இல்லை.** மொழி பெயர்பாளர்களின் சேர்க்கை என வேத பண்டிதர் **ஜான் ஆர்ரைஸ்** என்பவர் எழுதுகிறார். இந்த வம்ச வரலாறு **லூக்கா 3:23-38ம்** வசனம் முடிய அதாவது ஆதாம் வரை எழுதப்பட்டுள்ளது. மத்தேயுவின் சுவிசேஷத்தில் யோசேப்பின் சரித்திரத்தை ஆபிரகாம் வரை மாத்திரம் கொடுக்கிறார். ஆனால் லூக்கா யோசேப்பில் ஆரம்பித்து மரியாளின் தகப்பன் ஏலிக்கு மாறிய பின் ஏலி முதல் ஆதாம் வரை வம்ச வரலாறு தொடர்கிறது. **காரணம் இயேசு கிறிஸ்து ஆதியாகமம் 3:15ல் சொல்லப்பட்டபடி ஸ்திரியின் வித்தாக பிறக்க வேண்டும்.** அதனால் இயேசுவின் வம்ச வரலாறு மரியாளின் கணவரில் தொடங்கி மரியாளின் தகப்பனுக்கு மாறி ஆதாம் வரை கொடுக்கப் பட்டுள்ளது. இந்த வம்ச வரலாற்றின் இன்னொரு முக்கிய பிரிவு தாவீதின் குமாரர்களான சாலமோன், நாத்தான். மத்தேயு சுவிசேஷத்தில் யோசேப்பின் வம்சம் தாவீதின் குமாரனாகிய சாலமோன் வரிசையில் வருகிறது. ஆனால் லூக்கா சுவிசேஷத்தில் மரியாளின் வம்ச வரலாறு தாவீதின் இன்னொரு மகனாகிய நாத்தான் வரிசையில் வருகிறது. **அதாவது இயேசு தாவீதின் குமாரன் தான். ஆனால் சாலமோனின் குமாரன் அல்ல. சாலமோனின் வரிசையிலும் வரவில்லை.** இதற்கு வேத ஆதாரமாக **எரேமியா 22:24-30 வசனப்படி கோனியாவின் வம்சத்தில் யாரும் சிங்காசனத்தில் உட்காரமுடியாது.**

இந்த கோனியா என்பவன் சாலமோன் வரிசையில் வருகிறான். இந்த வம்ச வரிசையில்தான் யோசேப்பு வருகிறான். இந்த வரிசையில் இயேசு பிறப்பாரானால் அவர் தாவீதின் சிங்காசனத்தில் அமர முடியாது. மாமிச பிரகாரமாக பார்போமானால் இயேசு மரியாளின் பிள்ளை. மரியாளுக்கு மாத்திரம் சொந்தம். எனவேதான் இயேசுவின் வம்ச வரலாறு ஆதாம் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசுவின் வம்ச வரலாறு வேதத்தில் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் எந்த புத்தகத்திலாவது, வேறு எந்த மதங்களின் வேதங்களிலாவது, சாஸ்திரங்களிலிலாவது, புராணங்களிலாவது இந்த மாதிரியான முழுமையான வம்ச வரலாறு கொடுக்கப்பட்டுள்ளதா என நாம் ஆராய வேண்டும். உலகில் எங்கும் இந்த அளவு உண்மையான, சரித்திர பூர்வமான, ஆதாரத்துடன் வம்ச வரலாறு கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் தத்துவம், போதனை வாழ்ந்து காட்டிய வழிமுறை, பின் பற்றிய நெறிமுறை, வம்ச வரலாறு சரித்திர உண்மைகள்தான் கிறிஸ்துவத்துக்கு ஆதாரம்.

The Crown and Cross : These symbolise the reward of the faithful in the life after death to those who believe in the crucified **Savior**. Be thou faithful unto death and I will give thee the Crown of Life. (Rev. 2:10)

மணிமுடியும் சிலுவையும் : அறையப்பட்ட மீட்பர் மீது பற்றுறுதி கொண்டிருப்போருக்கு மரணத்திற்குப் பின் வழங்கப்படுவதைக் குறிப்பது. மரணம் மட்டும் பற்றுமை கொண்டொழுகுவீரேல் வாழ்வின் முடியை நானுங்களுக்குச் சூட்டுவேன். (வெளி 2:10)

The Cross Trefflee : A beautiful form with ends formed as trefoils. It is widely used wherever a decorative style of cross is needed. Also known as the Cross Botonnee.

டிராப்லி சிலுவை : முடிவில் மூன்று அழகிய வளைவுகளைக் கொண்டது. எங்கெங்கே அழகிய வடிவில் சிலுவை தேவையோ அங்கு பயன்படுத்தப்படுகிறது. பொட்டோனி (**Botonnee**) சிலுவை எனவும் அறியப்படுகிறது.

The Cross of Lorraine : Has two horizontal arms, a short one near the top and a longer one near the base.

லொரேன் சிலுவை : இரண்டு குறுக்குக் கோடுகளைக் கொண்டது, சிறியது மேலும் பெரியது கீழுமாக அமைந்துள்ளது.

10. குரானில் "YESHUA" ஆண்டவர் "இயேசு கிறிஸ்து"

குரானில் 5 கட்டளைகள் இஸ்லாமிய தூண்கள் என கொள்ளப்படும். (1) 5 முறை தொழுகை (2) வாழ்நாளில் மக்கா, மதினா செல்வது (3) ஏழைகளுக்கு உதவி (4) ரமதான் மாத உபவாசம் (5) Saying a creed (கொள்கைகள்) இஸ்லாம் மத தீவிரவாதிகள் 6வது கொள்கை 'ஜிகாத்' (Jihad) புனிதப் போர் என்பர். திருக்குரான் 'கேபரியேல்' தூதனால் சுமார் 23 ஆண்டுகளில் 'முகமது நபிகள்' நாயகத்துக்கு கொடுக்கப்பட்டது. 609 பொது வருட கணக்குப்படி (Common Era) டிசம்பர் மாதம் 22ம் நாள் தொடங்கி 'குரான்' புனித நூல் ஆண்டவரின் தூதரால் கொடுக்கப்பட்டது. 'குரான்' நூலில் மனித வாழ்க்கை, நெறிமுறை திட்டம் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 'குரானில்' ஆண்டவராகிய 'இயேசு' 'கிறிஸ்து' ஆண்டவர் என குறிப்பிட படவில்லை. 'குரானில்' நபிகள் நாயகத்தின் பெயர் 5 முறையும் 'இயேசு கிறிஸ்து'வின் பெயர் 45 முறையும் எழுதப்பட்டுள்ளது என ஆய்வர்கள் கூறுகின்றனர். மேலும்

(1) கன்னியானவள் கர்பம் தரித்து குமாரனை பெறுவாள்.

(2) குமாரன் தெய்வீக வல்லமை பெற்றவராக இருப்பார்.

(3) அவர் பரிசுத்த ஆவியின் வல்லமை உடையவராக இருப்பார் என்ற உண்மைகள் ஆணித்தரமாக குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'இயேசு கிறிஸ்து' **Jesus (Isa)** உன்னத தேவ தூதராக சித்தரிக்கப்படுகிறார். குரான் என்ற புனித நூல் 114 அத்தியாயங்களை கொண்டது, அவைகள் 'சோரா' என அழைக்கப்படுகிறது.

சோரா 4 வசனம் 17ல் இயேசு பிதாவின் ஏகபுதல்வர் என்ற வாதம் மறுக்கப்படுகிறது. ஆனால் ஆண்டவர் 'இயேசு' கடவுளின் வார்த்தை என்றும் கடவுளின் பரிசுத்த ஆவி என்றும் வர்ணிக்கப்படுகிறார். கன்னிமரியாளுக்கு திருத்தூதர் இயேசுவின் முன்னறிவிப்பு கொடுத்த வாக்குத்தத்தம் 'சோரா' 3 வசனம் 42ல் தெளிவாக வேதாகமத்தில் உள்ளவாறு கூறப்பட்டுள்ளது.

சோரா 4ல் இயேசு கன்னிமரியாளின் புதல்வன் என்றும் கடவுளின் திருத்தூதர் என்றும் விளக்கப்பட்டுள்ளது. இவ்வகை வாக்குத்தத்தம் 'முகமது நபிகளுக்கு' கொடுக்கப்படவில்லை 'சோரா 3' வசனம் 47ல் மரியாள் தேவதூதருக்கு அளித்த பதிலும், அதற்கு திருத்தூதர் அளித்த பதிலும் வேதாகமத்தில் உள்ளது போல் எழுதப்பட்டுள்ளது.

சோரா 3 வசனம் 48ல் கடவுள் இயேசுவுக்கு ஞானத்தையும் ஆகமங்களையும், சுவிசேஷத்தையும், கற்றுக் கொடுப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதாகமத்திற்கும், குரானுக்கும் இவைகளில் ஒற்றுமை இருந்தும் ஆண்டவராகிய 'இயேசு' கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும், இயேசு கிறிஸ்துவே ஆண்டவரின் ஏக புதல்வன் என்றும், இயேசு நமக்காக, நம்மை ரட்சிக்க நமது பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தார் என்ற நம்பிக்கை குரானில் குறிக்கப்படவில்லை.

புனிதமாக இஸ்லாமியர்கள் கருதும் புத்தகங்கள்

(1) மோசேயின் 5 ஆகமங்கள், (2) தாவீதின் சங்கீதங்கள் (3) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 'Infil' என்ற சுவிசேஷம் (4) குரான். ஆனால் கிறிஸ்தவர்களின் வேதத்தில் குறிப்பிட்டுள்ள முதல் 3 புத்தகங்களும் திருத்தப்பட்ட பகுதியாக இஸ்லாமியரால் கருதப்படுகிறது.

'Qumaran' (குமரான்) குமாரன் குகைகள் - சவக்கடல் பகுதி - இஸ்ரவேல் தேசம்

இஸ்ரவேல் தேசத்தில் இன்று வரை புதை பொருள் ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது. இந்நிலையில் 1947ல் வருடம் ஆடு மேய்பவர்களால் காணாமல் போன தங்கள் ஆட்டை தேடும் போது எதிர்பாரா விதமாக கண்டெடுக்கப்பட்டு 1962ம் வருடம் உலகத்திற்கு தெரிய வந்த உண்மையாவன.

1947ம் வருடம் குமரான் குகைகள் என்று அழைக்கப்படும் இயற்கை குகைகளில் வேதாகம தோல் சுருள்கள் கண்டு எடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அகழ் ஆய்வில் அந்த தோல் சுருள்கள் 2000 ஆண்டுகள் பழமையானது எனவும் 2000 ஆண்டுகளுக்குமுன், ஆட்சி செய்தவர்கள், அவர்கள் நாகரீகம், வாழ்க்கை முறைகள் அடங்கி இருந்தது ஓர் அதிசயம். அதன் விளைவாக ஆய்வாளர்கள் அந்த பகுதியில் சுமார் 8 கி.மீ. சுற்றளவில் 230 இயற்கையில் அமைந்த குகைகளை ஆராய்ந்து அவற்றில் 40 குகைகளில் வேதாகம புத்தகம் தோல் சுருளை கண்டெடுத்தனர். சீரழிந்து, உருகுலைந்து இருந்த நிலையில் உள்ள வேதாகம தோல் சுருள்கள் வேதாகம புத்தகம் உருவாக ஆதாரமாக உள்ள தோல் சுருளில் உண்மையின் நகல்களாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்டு இஸ்ரவேல் தேசத்தில் பாதுகாக்கப்படுகிறது. 'குமரான் குகைகள்' கண்டுபிடிப்பின்படி மோசேயின் ஆகமங்கள், சங்கீதம், ஏசாயா தீர்க்க தரிசன புத்தகபகுதி ஆகிய புனித நூல்களின் நம்பகத்தன்மை உறுதி படுத்தப்படுகிறது.

'இஸ்லாம்' 5 கொள்கைகள் அடிப்டையில் உருவான மதம். 'குரான்' என்பது மனிதனுக்கு வழிகாட்டும் புனித நூல். இஸ்லாமியர்களால் ஓதப்படும் நம்பிக்கை (Creed) என்னவென்றால்

(1) 'அல்லா'வை தவிர வேறு கடவுள் இல்லை.

(2) 'வானதூதர்கள்' Angels ஆண்டவரின் கட்டளைகளை நிறைவேற்றும் சக்திகள்.

(3) மோசேயின் ஆகமங்கள், ZABUR, INFIL & QUARAN ஆகிய 4 புத்தகங்கள் தான் இஸ்லாமால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்கள். அவற்றில் 'குரான்' புனித புத்தகம் இறுதியானது. 'புனித நூல் குரான்' முகமது நபிகளுக்கு தனது 40வது வயதில் கொடுக்க ஆரம்பிக்கப்பட்டு Common Era 632ல் முகமது நபிகள் இறக்கும் வருடம் வரை 'காபிரியேல்' தூதரால் கொடுக்கப்பட்டது. 'INFIL' பகுதி ஆண்டவர் 'இயேசுகிறிஸ்து'வின் போதனைகள் அடங்கியது. புனித குரானில் 'மோசே'யின் பெயர்தான் வேறு எந்த பெயரையும்விட அதிகமாக குறிக்கப்பட்டுள்ள பெயர்.

(4) கடவுளின் திருத்தூதர்கள் 28 பேர். ஆதாம் தொடங்கி முகமது நபிகள் வரை அடக்கம். இவர்களில் 'இயேசு கிறிஸ்து' 27வது திருத்தூதர் என்றும் முகமது நபிகள் 28வது இறுதி தூதர் என்றும் வரையறுக்கின்றனர்.

(5) ஆண்டவரின் இறுதி தீர்ப்பு உண்மை.

குரான் அரபிய மொழியில் முகமது நபிகளுக்கு கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 'BAHAI' பிரிவினர் அவர்களது முதல் மதகுரு EL-BAB தான் கடைசி இறை தூதர் என அவரை 29வது தூதர் என கூறுகின்றனர். அவர் தோற்றுவித்த மதம் 'BAHAI' Monotheistic Religion என்று இன்று வரை கடைபிடிக்கப்படுகிறது.

இந்த 'BAHAI' மதம் இரானில் தோன்றி இன்றய இஸ்ரவேல் தேசத்தில் 'HAIFA' பட்டணத்தை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

கிறிஸ்தவ மக்களாகிய நமது நம்பிக்கை ஆண்டவர் மனிதனாக, மனுகுலத்தை ரட்சிக்க உலகிற்கு வந்தார் என்பது மட்டும் அல்ல, அவர் நம்மை ரட்சிக்க தனது ரத்தத்தை சிந்தி பாவத்திளின்று நம்மை ரட்சித்தார், பாவத்தை ஜெயித்தார், உயிர்தெழுந்தார். நம்மை நியாயம் தீர்க்க மீண்டும் இவ்வுலகம் வருவார் என்பது நமது கிறிஸ்துவத்தின் ஆதாரம், அசைக்க முடியாத நம்பிக்கை. பாவத்தின் பலன் இறப்பு. பாவத்தின் சம்பளம் மரணம், பாவத்தில் ஜீவிக்கும் மக்களை பாவத்தினின்று மீட்க ரட்சகரால் மட்டும் சாத்தியம். பாவமற்ற கடவுளை அடைய அதாவது பாவமில்லாத பரிசுத்தரை அடைய பாவியால், தன் சுய நற்கிரியைகளால் முடியாத காரியம். தன் நற்கிரியைகளால் ஆண்டவரின் கற்பனைகளை நிறைவேற்ற முடியுமேயன்றி ஆண்டவரை அடைவது முடியாத காரியம். சுயமாக நற்கிரியைகள் வாயிலாக ஆண்டவரை அடைவது என்றால் மதம் எதற்கு? நாட்டின் சட்டம் ஒன்றே போதுமே? ரட்சிக்கப்படாமல் ஆண்டவரை அடைவது எவ்வாறு? பரிசுத்தர் நம்மை ஏற்றுக் கொள்ளாவிடில் பாவி, சுயமாக நற்கிரியைகள் வாயிலாக பரிசுத்தரை அடைவது எப்படி சாத்தியம்? நற்கிரியைகளை நாம் உலகில் நடப்பித்தாலும், நாம் பாவிதான். பாவமற்றவர், பரிசுத்தர், கடவுள் நம்மை ஏற்றுக் கொண்டால் மாத்திரம் நாம் ரட்சிப்பை அடைய முடியும். நித்திய வாழ்வை அடைய முடியும். நற்கிரியைகள் நம்முடைய ரட்சிப்பிற்கு ஆதாரம். விசுவாசம் இல்லாத நற்கிரியை நம்மை நித்தியத்திற்கு வழி நடத்தாது. **"நியாயபிரமாணத்தினாலான கிரியைகளினாலே மனிதன் நீதிமானாக்கப்படுவதில்லை."** கலாத்தியர் 2:15 நீதியானது நியாய பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது விணாயிருக்குமே? கலாத்தியர் 2:21

வேதாகமம், எபிரேய மற்றும் கிறிஸ்தவ நூல்கள் - இஸ்லாமிய நூல்கள் ஆகியவைகளின் மூலம், பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டது. (Divine Source) இந்த நூல்களின் ஆதாரம்தான் முகமது நபிகளுக்கு கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் போதனைகளை

மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கத்தான் புனிதர்கள், கடவுளின் திருத்தூதர்கள் தங்கள் வாழ்வை, மரணத்தின் வாயிலாக சந்தித்தனர். இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

அந்திரேயா பேதுருவின் சகோதரன் 'அகாயாவிலுள்ள பத்ராவில் 'X' வடிவ சிலுவையில் கட்டி தொங்கவிடப்பட்டார்.

பர்தலேமேயு (நாத்தான் வேல்) அர்மியாவில் உயிரோடு தோல் உரிக்கப்பட்டார்.

யாக்கோபு (கிலியாப்போ மரியாளின் மகன்) தேவாலயத்தின் உச்சியிலிருந்து தூக்கி எரியப்பட்டு, கல்லெறியப்பட்டார்.

யாக்கோபு (செபதேயுவின் மகன்), யோவானின் சகோதரன் முதலாம் 'ஏரோது' அகரிப்பா ராஜாவால் எருசலேமில் வாளால் கொல்லப்பட்டார்.

யூதா (மத்தேயு) அர்மீனியாவில் அம்புகள் எரியப்பட்டு கொல்லப்பட்டார்.

சீமோன் 'பேதுரு' ரோமாபுரியில் நேபோ மன்னனால் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.

பிலிப்பு பிர்ஜியாவிலுள்ள இராம்போவியில் தூண் ஒன்றில் தூக்கிலிடப்பட்டார்.

சீமோன் (சாலோத்தே) பாரசீகத்தில் அவனது 129வது வயதில் சிலுவையில் அறையப்பட்டார்.

தோமா சென்னை தாமஸ் மலையில் (St. Thomas Mount) ஈட்டியால் குத்தி கொல்லப்பட்டார்.

மத்தியாஸ் எத்தியோப்பியா நாட்டில் கல்லெறியப்பட்டு தலை துண்டிக்கப்பட்டார்.

பவுல் கி.பி.67ல் இரண்டாம் முறையாக ரோமாபுரியில் சிறையில் அடைக்கப்பட்டார். நீரோ மன்னன் என்ற ரோம அதிபரின் காலத்தில் சிரச்சேதம் பண்ணப்பட்டு கொல்லப்பட்டதாக பாரம்பரிய சரித்திரம் கூறுகிறது.

யோவான் ஸ்நானகன் ஏரோதியாளின் விருப்பத்திற்கிணங்க தலை துண்டிக்கப்பட்டார்.

ஸ்தேவான் கல்லெறியுண்டு முதல் ரத்த சாட்சியாக மரித்தார்.

ஆண்டவர் போதித்த சுவிசேஷத்திற்காக ரத்த சாட்சிகளாக பலரும் மரித்தனர். தீர்க்கதரிசனங்கள், ஆண்டவர் வருகை முன் குறிக்கப்பட்டவைகள், நேரில் கண்ட சம்பவங்கள் அப்போஸ்தலர் வாக்கு, உறுதிமொழி, சாட்சிகள் இவை அனைத்தையும் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்டதுதான் வேதாகமம். மதத்தின் பெயரால், மதத்திற்காக உருவாக்கப்பட்டது அல்ல வேதாகமம். வேதாகமத்தில் கூட்டவோ நீக்கவோ சரித்திர ஆதாரங்கள், நிகழ்வுகள் இடம் கொடுக்க வேண்டும். இஸ்லாமியர்கள் கூற்று ஒன்றே இறுதியானது ஆகாது.

11. பெயர் வழி நாம காரணம் - Nameology

"Yeshua" in Hebrew - 'Jesus' in Greek - 'இயேசு' என்று தமிழில் ஆண்டவர் தனது அரசில் தேர்ந்தெடுத்த மக்களுக்கு உரிய பெயரை கொடுத்துள்ளதை நாம் வேதாகமத்தில் காணலாம். ஆபிராமை தெரிந்து கொண்ட தெய்வம் அவரை தடுத்து ஆட்கொண்டு அவரது நாமத்தை ஆபிரகாம் என பெயர் மாற்றுகிறார். ஏன்? பெயருக்குறிய முக்கியத்துவம் பல இடங்களில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. வேதாகம தீர்க்கதரிசனங்களில் தூதர்கள் தங்கள் பெயரை கூறி தீர்க்க தரிசனம் உரைப்பதை வேதாகமத்தில் காணலாம். காபிரியேல் தூதன் என்று வேதாகமம் அல்லாது தள்ளுபடி ஆகம (Apocripa) பகுதிகளிலும் குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் தனது ஊழியர்களுக்கு பெயரிடுவது, அதிலும் ஏற்புடைய பெயரை தெரிவு செய்து நாமகரணம் செய்வதுதான் சரியான வழியாக காட்டப்பட்டுள்ளது. முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்கள் சரித்திரத்தை கண்டால் ஆண்டவர் ஆபிராமை, ஆபிரகாம் என்று பெயர் மாற்றி அவருக்கு தனது 100 வது வயதில் ஈசாக்கை மகனாக தருகிறார். ஈசாக்கிற்கு பெயர் சூட்டினது கடவுள் என காண்கிறோம். பின்பு ஈசாக்கு தனது இளைய மகனுக்கு யாக்கோபு என பெயரிட்டதை ஏற்றுக்கொள்ளாமல் இஸ்ரவேல் என பெயர் மாற்றுகிறார். காரணம் என்ன? ஈசாக்கின் இளைய மகனை ஆண்டவர் தெரிந்துகொண்ட காரணத்தால் தானே! **"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே". ரோமர் 9:7** 'மோசே'யை கடவுள் தெரிந்து கொண்டாலும் 'மோசே' என்ற பெயர் எகிப்து ராஜ ஸ்திரியால் வைத்த பெயர் என்றாலும் ஆண்டவருக்கு அது ஏற்புடைய பெயராக இருந்த காரணத்தால் பெயரை மாற்றாமல் 'மோசே' மீது மிகவும் அன்பு பாராட்டி தனது மகிமையை காணவும் அனுமதித்தார். இவ்வளவிற்கும் மேலாக தனது சொந்த குமாரனுக்கு **'Yeshua' in Hebrew - Jesus in Greek** இயேசு என்று தமிழில் பெயரிட கட்டளை தந்தார். காரணம் இல்லாமலா பெயருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது? 'யோவான்' சரித்திரத்தில் யோவானுக்கு பெயரிட்டது ஆண்டவர்தான் என்பதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். 'தமஸ்கு' பட்டணத்தில் ஆட்கொண்ட 'சவுலை' ஊழியத்திற்கு அழைத்து 'பவுல்' அப்போஸ்தலனாக மாற்றினார். இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்வது எது? மனிதர்களின் பெயருக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அந்த பெயர் உச்சரிப்பில் அதற்குறிய மகிமை, அதிர்வு அலைகள் இசைவான செயல்பாட்டை விளைவிக்கும். அதனை விடுத்து ஏனோ தானோ என பெயர் வைப்பதும், கதைகளில் உள்ள பெயர்கள், பிற இதிகாசம் பெயர்களை சூட்டுவதும் ஆண்டவருக்கு ஏற்புடையது ஆகாது. பல நாட்டினர் குடியேறியுள்ள அமெரிக்க நாட்டில் பல ஆலயங்களில் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் வழிபாட்டில் குழந்தைகளுக்கு இட்ட பெயர்களின் பொருளை சபைக்கு அறிவிக்கின்றனர். என்ன பொருத்தமான செயல். பிரியமான பெயரை

வைத்து விட்டு அதன் பொருளை தேடி அலைபவர்களும் உண்டு. பிறர் தனக்கான காரணம் கொண்டு வைத்த பெயரை நாம், நம் குழந்தைகளுக்கும் சூட்டுவதும் உண்டு அந்த பெயர் நமக்கு பொருத்தமா, அல்லது பொருந்தாதா என யோசிப்பது இல்லை. உதாரணமாக பெயர் வைக்கும் போது அறிவுபூர்வமாக சிந்திப்பது நல்லது.

Will Son - Wilson - உடன் படிக்கையின் மகன்
Johnson - ஜான் மகன், யோவானின் மகன்.
Rabison, Rabinson - ரபிசன் - ராபிசன் - குருவின் மகன்
Manson - மான்சன் - மனித குமாரன்

வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள வேததூதர்கள், தீர்க்கர்கள் நற்செயல் புரிந்தார்கள், ஆண்டவருக்கு பிரியமான பெயர்கள் என அனேக பெயர்கள் உண்டு. மேலும் வேதத்தை பாமரனும் படிக்க, பாமரர் கைகளில் கிடைக்க தோன்றிய சீர்திருத்த செம்மல் **மறைதிரு மார்டின் லூத்தர்** தனது சிறை வாசத்தில் சுவர் முழுக்க எழுதி வைத்திருந்த பெயர் 'Vivit'. அதன் பொருள் 'ஆண்டவர் உயிரோடு இருக்கிறார்' "கடவுள் வாழ்கிறார்" என்பதாம். ஜெர்மனி தேசத்தில் ஒரு பகுதியில் பேசப்படும் மொழியின் வார்த்தை. இன்றளவும் 'லுத்தரன்' சபை அடையாளமாக உள்ள 'லுத்தர் பூ' (Luther Flower)ல் உள்ள வாசம் 'Vivit'. அதே போல் ஆண்டவர் தனக்கு பிரியமானவர்களுக்கு செல்ல பெயரும் (வைத்த பெயர் இருக்கும் போது) வைத்து அழைப்பதை காண்கிறோம். எனக்கு பிரியமான 'ஜெசூரனே' 'எசுரனே' என யாக்கோப்பை, இஸ்ரவேலை அழைப்பதை வேதத்தில் காண்கிறோம். இவ்வளவு தெய்வ பெயர்கள், தெய்வ தொண்டர்கள், புனிதர்கள், புனிதர் வைத்த பெயர்கள், வேதாகம பெயர்கள், நற்பண்பாளர்கள் பெயர்கள் என எவ்வளவோ வழிகாட்டுதல் இருந்தும், போதுமான குறிப்புகள் இருந்தும், நாம் கண்ட பெயர்களை குழந்தைகளுக்கு வைத்து அவர்கள் வாழ்வை சீரழிப்பது எவ்வகையில் ஞாயம்? நாம் வேதத்தை புரிந்து கொண்டது இவ்வளவுதானா? இவ்வகை காரியங்களில் ஊழியர்கள் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பது எனது கோரிக்கை. ஆண்டவர் குழந்தைகள்பால் அன்புள்ளவர், பிரியம் உள்ளவர். அவ்வகை பிரியத்துக்கு, அவரது அழைப்பிற்கு நாம் வைக்கும் பெயர் தடையாக அமையக் கூடாது.

ஏசாயா 26:13, 14 "எங்கள் தேவனாகிய பிதாவே, உம்மை அல்லாமல் வேறே ஆண்டவர்மார் எங்களை ஆண்டார்கள். இனி உம்மை மாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துவோம். அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்க மாட்டார்கள், மாண்ட ராட்சதர், திரும்ப எழுந்திரார்கள். அவர்களை விசாரித்து, சங்கரித்து அவர்கள் பெயரையும் அழியப் பண்ணினீர்."

இருக்கிறவராக இருக்கிறவர், அல்பாவும், ஒமேகாவும் முடிவே இல்லாத 'ஏகன்' அவரையே சார்ந்து அவர்வழி நடக்க கவனமாக இருப்பது நமக்கும், நமது சந்ததிக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஆமென்.

12. MELCHI ZEDEK - மெல்கிசேதேக் - MELKI ZEDEK

இந்த பிரபஞ்சம் உருவாக கடவுள்தான் காரணம். ஆண்டவராகிய ஏசுகிறிஸ்து மெல்கிசேதேக், பரிசுத்த ஆவியான தேற்றரவாளன் ஆகியவர்கள் பிரபஞ்சம் உருவாக்கத்துக்கு கடவுளின் உடன் உழைப்பாளிகள் என்றால் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பிரபஞ்சத்தை உருவாக்கிய இறைவன் அதின் அதிசயங்களை மறைபொருளாக வைத்திருந்தாலும் மனிதன் அந்த மறை பொருளை கடவுள் சித்தப்படி இன்றளவும் ஒவ்வொன்றாக வெளிக்கொணர்வதை நாம் அன்றாடம் காண்கிறோம். இந்த மனிதனின் கண்டு பிடிப்புகளை வேதம் ஆதி முதற்கொண்டு வேதாகமத்தில் மறை பொருளாக பலகால கட்டங்களில் குறிக்கப்பட்டுள்ளது நமக்கு வியப்பை தருகிறது.

1. பூமி உருண்டை. ஏசாயா 40:22
2. பூமி அந்தரத்தில் தொங்குகிறது என்பதை கி.மு. 1500ல் யோபுவின் புத்தகம் 26:7ல் காண்கிறோம்.
3. பூமி தானாக சுற்றுகிறது. யோபு 38:12-14
4. மழை, மேகம் நீர் ஆவி ஆவதால் உண்டாகிறது. பிரசங்கி 1:6-7
5. காற்று சுழன்று வருகிறது. பிரசங்கி 1:6-7
6. வானத்தில் வெட்டவெளி உண்டு. யோபு 26:7
7. பூமியின் ஆகர்ஷண சக்தி (இழுப்புத்திறன்) யோபு 26:7
8. மின்சாரம் என்ற சக்தி, மின் சக்திக்கு மின்னல் என்ற வார்த்தை எபிரேய மொழியில் உபயோகத்தில் உள்ளது. யோபு 38:35
9. தாவர வளர்ச்சிக்கு சூரியன், சந்திரன் தேவை. உபாகமம் 33:14
10. சந்திரன் தானாக ஒளிராமல், சூரிய ஒளியை வாங்கி ஒளிர்கிறது. யோபு 25:5
11. மோட்டர் வாகனம். நாகூம் 2:3-4

இந்த பிரபஞ்சத்தை உருவாக்க தெய்வீக இலக்கணம், வரைமுறை, அளவு கோல், இவற்றிற்கு மேலாக தெய்வீக சக்தி ஒன்று இணைந்து செயல் பட்டால்தான் சாத்தியம். வேதத்தில் முதல் 5 ஆகமங்களை காணும்போது பாவ நிவர்த்திக்கு, வழிமுறைகள், ஆசரிப்பு கூடாரம். அதன் வழிமுறைகள், பரிசுத்த தலம், இறை வழிபாட்டுத் தலம், நாள்கள், எண்கள் என எல்லா இறை நிகழ்விற்கும் இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. எந்த ஒரு தெய்வீக நிகழ்வும் மேலெழுந்த வாரியாக, ஏனோதானோ என நிகழ்த்தப்படவில்லை. அனைத்தும் தெய்வீக கட்டுப்பாட்டில் நடைபெற்று வந்ததை வேதாகமம் வாயிலாக காணலாம். அவ்வகை தெய்வீக இலக்கணத்தை, வரைமுறை வழிகளை வகுத்தவர்களில் முக்கியமானவர் **'மெல்கிசேதேக்'** என்ற தாயும் தந்தையும் இல்லாதவர். **ஏசாயா 44:24** ''நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர், நான் ஒருவராய் வானங்களை

விரித்து, நானே பூமியை பரப்பினவர்" என கர்த்தர் தன்னை குறித்து உலக மக்களுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கிறார். கர்த்தர் முடியாததை முடிய பண்ணும் இறைவன். ஆதியில் ஆதாமின் குமாரர்கள் காயீனும், ஆபேலும் பலி செலுத்த, ஆபேலின் பலி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. காணிக்கையின் இலக்கணம் 1. முதற்பலன் 2. பழுதற்றவை என்ற நியதி கர்த்தரால் வரையறை செய்யப்படுகிறது. பின்னாளில் காணிக்கை அளவு நிர்ணயிக்கப்பட்டு **'ஆபிரகாம்' 'மெல்கிசேதேக்கிற்கு'** தசமபாகம் செலுத்துகிறான். **மெல்கிசேதேக்** ஆண்டவர் பெயரால் ஆபிரகாமை ஆசிர்வதிக்கிறார். கடவுள் பெயரால் முதன் முதல் ஆசிர்வதிக்கப்பட்ட மனிதன் ஆபிரகாம். அன்றைய கால கட்டத்தில் காணிக்கையின் அளவு, தரம், இலக்கணம் இறைவனால் அங்கீகரிக்கப்படுகிறது. இந்த தெய்வீக இலக்கணத்திற்கு, இலக்கண ஆக்கலுக்கு **மெல்க்கிசேதேக்** முக்கியமானவர் என்றால் மறுக்க முடியாது. ஆபிரகாமை அழைத்த தேவன், வாக்குத்தத்தம் கொடுத்த தேவன், உடன்படிக்கை செய்த தேவன், ஆசீர்வதிக்க **மெல்கிசேதேக்கை** நியமிக்கிறார். **உபாகமம் 29:29 "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு உரியவைகள்"** என தெளிவாக வேதாமத்தில் கூறப்படுகிறது. தேவனுடைய ஆசாரியனான **'மெல்கிசேதேக்'** தகப்பனும், தாயும், வம்ச வரலாறும் இல்லாதவர். இவர் துவக்கமும், முடிவும் இல்லாமல் தேவனுடைய குமாரருக்கு ஒப்பானவராய் என்றென்றும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறார் **எபிரெயர் 7:3** என்ற வசனம் இவருடைய செயல்பாட்டை நமக்கு தெளிவாக விளக்குகிறது. தேவனுடைய ஆசாரியனாய் இருந்து பாவ நிவாரணம், காணிக்கை, ஆலயம், வழிபாட்டுமுறைகளுக்கு இலக்கணம் வகுக்கும் ஆசாரியனாக என்றென்றும் நிலைத்திருக்கிறார். தேவனுடைய ஆசாரியத்துவ பணிநிமித்தம் பூலோக மக்களை ரட்சிக்க, பாவ நிவாரண வழிகளில் வழி நடத்த நித்திய மீட்புக்கு வழிவகுக்க, பரலோகத்துக்கு பிரதான ஆசாரியன் தேவை என அறிந்து **மெல்கிசேதேக்** முறைமையின்படி ஆண்டவராகிய 'இயேசு கிறிஸ்து' யூதா கோத்திரத்தில் அவதரித்திருந்தாலும் மக்கள் பாவ நிவாரணம், பெற நமக்கு முன்னோடினவராகிய **''இயேசு கிறிஸ்து''** **மெல்கிசேதேக்கின்** முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியனாக நமக்காக அந்த மறைபொருளான திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். **எபிரெயர் 6:20** இயேசு பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின் ஜனங்களின் பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டியதில்லை. ஏனெனில் இயேசு தம்மை தாமே பலியிட்டதினால் இதை ஒரேதரம் செய்து முடித்தார். **எபிரெயர் 7:27. "நியாயபிரமாணமானது பெலவீனமுள்ள மனிதர்களை பிரதான ஆசாரியர்களாக நியமிக்கிறது'' எபிரெயர் 7:28** ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஏற்படுத்தப்பட்ட, பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்து மக்களுக்காக அவர்கள் பாவங்களுக்காக ஒரே தரம் தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தது மக்களுக்கு இரட்சிப்பை அளிக்கிறது. பாவ நிவராணத்திற்கு, மக்களின் உலக பாவத்திற்கு, மக்களை பாவத்தினின்று மீட்க பாவத்தினால் ஏற்பட்ட

மரணத்தை, ஒழிக்க தேவகுமாரன், பாவம் அற்றவர், தம்மை தாமே ஒரே தரம் பலியாக தம்மை ஒப்பு கொடுத்து ரத்தம் சிந்த வேண்டும். அதன் மூலம்தான் மனிதனின் பாவம் நீக்கப்படும். மனித குமாரன் ரத்தம் சிந்துதல் மூலம்தான் மனிதனுக்கு ரட்சிப்பு உண்டு என்ற **'மெல்கிசேதேக்கின்'** முறைமையை நிறவேற்றவே தேவன் மனிதனாக அவதரித்தார். ரட்சிப்புக்கு ஏற்ற சுவிசேஷத்தை போதித்தார். தம்மைதாமே ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தினார். நம்மை மீட்டுக் கொண்டார். நமக்காக பிரதான ஆசாரியனாக தேவனிடம் பரிந்து பேசுகிறவராக என்றென்றும் நிலைத்திருக்கிறார். இந்த மெல்கிசேதேக்கின் முறைமைபடி அமைக்கப்பட்ட ஆலயம் எருசலேம் தேவாலயம் என்ற காரணத்தால்தான் **"கைகளால் கட்டப்பட்ட கட்டிடத்தில் ஆண்டவர் வாசம் செய்வாரோ"?** என்ற ஆண்டவர், எருசலேம் தேவாலயத்தில் இறங்கினார். சீனாய் மலையில் மோசேக்கு வெளிப்பட்ட தேவன் ஆசாரிப்பு கூடாரம் போன்ற ஆராதனை முறைமைகளை பரலோக தொழுகை ஸ்தலம் மாதிரியில் அமைக்க சொன்னது மெல்கிசேதேக்கின் முறைமைப்படி அமைக்கப்பட்ட பரலோக தொழுகை தலம். ஆராதனை முறைமைகள்தான். ஆண்டவர் ஒருவரே கர்த்தர், இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவி என 3 வகைகளில் செயல்பாடுகள் அமைந்தன. ஆனால் **மெல்கிசேதேக்**தான் பரிசுத்த ஆவியானவர் என்ற வாதமும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த பிரபஞ்சத்தின் அதிசயம், காணப்படாத, காணக்கூடாத, கண்டு பிடிக்கப்பட்ட அதிசயங்கள் அனைத்திற்கும் **'மெல்கிசேதேக்'** இலக்கணம் ஒரு ஆதாரம் என்பதை மறைப்பதற்கில்லை.

வேதாகமத்தில் குறிப்பாக தோரா என்று சொல்ல கூடிய முதல் 5 ஆகமங்களில் வரும் ஆராதனை முறைமைகள், நிவாரண பலிகள், முறைமைகள், ஆராதனை கூடம் அதன் இலக்கணங்கள், வடிவமைப்பு, தளவாடங்கள், அளவுகள், நாட்கள், இவை அனைத்தும் **'மெல்கிசேதேக்கின்'** முறைமையின்படி அமைந்து இருக்க வேண்டும். எருசலேம் தேவாலயம் நிச்சயமாக **'மெல்கிசேதேக்கின்'** முறைமையின் படி வடிவமைத்து கட்டப்பட்டிருக்கும். அல்லாமல் போனால் கர்த்தருடைய மகிமை அங்கு ஆலயத்தை நிரப்ப வழி இராது. சாலமோன் ராஜா கர்த்தருக்கு ஆலயம் கட்ட முற்படுவதற்கு முன்பாக கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்தில் உண்டாக்கிய தேவனுடைய ஆசரிப்பு கூடாரம் அங்கே இருந்தது. **நாளாகமம் 1:4.** மோசே வனாந்தரத்தில் உண்டாக்கின தேவனுடைய ஆசரிப்பு கூடாரம் மெல்கிசேதேக்கின் முறைமையின் படியே அமைந்திருக்க வேண்டும். மோசே கூடாரத்தை பெயர்த்து அதை பாளயத்திற்கு புறம்பே தூரத்திலே போட்டு அதற்கு ஆசரிப்பு கூடாரம் என பெயரிட்டான். **யாத்திரையாகமம் 33:7** பின்னும் ஆண்டவர் சொன்னதாவது **"மலையிலே உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே அவைகளை செய்ய எச்சரிக்கையாயிரு". யாத்திரையாகமம் 25:40** பின்னும் யாத்திரையாகமம் முழுவதிலும் கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே என்ற வசனம் **100** இடங்களுக்கு மேலாக சொல்லப்பட்டிருக்கிறது. **கர்த்தர் மோசேவிற்கு காண்பிக்கப்பட்ட,**

கற்பித்த காரியங்கள் அனைத்தும் மெல்கிசேதேக் முறைமையின் படியே பரலோகத்தில் அமைக்கப்பட்ட மாதிரியின் பிம்பம்தான். அமைக்கப்பட்ட ஒன்று, மேலும் இருக்கும் ஒன்றைத்தான் மாதிரியாக காண்பிக்க முடியும். அதனை விளக்கி கற்பிக்க முடியும். அந்த வகையில் பரலோக ஆசாரியன், கர்த்தரின் ஆசாரியன், **'மெல்கிசேதேக்'** முறைமையில் அமைக்கப்பட்ட பரலோக தொழுகை இருப்பிடத்தின் மாதிரியைத்தான் மோசே பாளையத்திற்கு புறம்பே ஆசரிப்பு கூடாரம் என அமைத்தான். அந்த இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்துதான் எருசலேம் தேவாலயம் என்றால் மறுப்பதற்கில்லை.

ஆண்டவர் காண்பித்ததை, கற்பித்ததை நடைமுறைப்படுத்த மோசேவிற்கு ஆண்டவர் போதிய ஞானத்தையும் அறிவையும், பயிற்சியையும் எகிப்து தேசத்தில் அரச மாளிகையில் 40 வருடம் கொடுத்தார். **திருவசனத்தில் மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும், செய்கையிலும், வல்லவனான். அப்போஸ்தலர் நடபடிகள் 7:22.** இந்த வகையில் மெல்கிசேதேக் காரியங்களை வேதவசனம், தீர்க்கதரிசனம், அப்போஸ்தலர்கள் மூலம் சொல்லப்பட்டதையும், அதன் அடிப்படையில், தேவ ஊழியர்கள் கவனத்திற்கு திரட்டி தந்துள்ளேன்.

The Patriarchal Cross : Has two horizontal arms, the upper one slightly shorter then the lower. The upper represents the inscription over the head of our Lord on the cross.

குலமுதுவர் சிலுவை : இரண்டு குறுக்குக்கோடுகள் உள்ளன. மேல்கோடு கீழ்க்கோட்டைக் காட்டிலும் சற்றுக் சிறியது. மேல் உள்ள கோடு ஆண்டவரின் தலைக்குமேல் வைக்கப்பட்ட வாசகத்தை குறிக்கும்.

The Papal Cross : Has three horizontal arms, each a little longer than the other, in desecendeing order. The two upper cross bars are said by some to signify the crosses of the two crucified besides our Lord. This cross is used only in papal processions.

பாப்புவின் சிலுவை : மூன்று குறுக்குக்கோடுகளை உடையது ஒவ்வொன்றும் மற்றதைக் காட்டிலும் சற்றுப் பெரியது. மேலிருக்கும் இருகோடுகளும் ஆண்டவரோடு அறையப்பட்ட மற்ற இருவரையும் குறிக்கும் என்பர். பாப்பரசரின் ஊர்வலங்களில் மட்டுமே இது பயன்படுத்தப்படுகிறது.

13. வேதாகமத்தில் அண்ணகர்கள் கடவுளின் வாக்குத்தத்தம்

எருசலேம் தேவாலயத்தில் இஸ்ரவேல் அல்லாதவர்கள் தேவாலயத்திற்குள் செல்ல அனுமதி இல்லை. பவுல் அப்போஸ்தலர் கிரேக்கர்களை கோவிலுக்கு கொண்டுவர முயன்றபோது பவுல் அப்போஸ்தலரை கொலை செய்ய முயன்றனர். அப்போஸ்தல நடபடிகள் 21:27-30 அந்த வழியில் அங்கஹீனர்கள், உடற் குறைபாடு உள்ளவர்களும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க அந்த நாளில் அனுமதி இல்லை. அந்த வழியில் அப்போஸ்தல நடபடிகள் 8:27ல் குறிப்பிட்டுள்ள எத்தியோப்பியன், ஒரு அண்ணகன், அண்ணகர்கள் முழுமையாக யூதகுலத்தவராக கருதபடாத நிலையில் எத்தியோப்பியனான அண்ணகன் எருசலேம் சென்று தொழுகையை, அதாவது யூத சம்பிரதாயத்துக்கு உட்பட உள்ளவர்கள் வழியில் Probably as a Proselyte தொழுகை நடத்தி இருக்க வேண்டும். அந்த காரணத்தால் ஆண்டவர் அவனது உள்ள கிடக்கையை அறிந்தவராக அப்போஸ்தலர் பிலிப்புவை நேரடியாக எத்தியோப்பியனிடம் அனுப்பி, அவனுக்கு போதித்து, ஞானஸ்நானமும் செய்விக்கிறார். அப்போஸ்தல நடபடிகள் 8:27, 28, 37-39 இது யூதர்கள் முறைமைக்கு எதிரான செயல். கடவுள் முன் அனைவரும் சமம். அனைவருக்கும் சம உரிமையை இந்த சம்பவம் உறுதிப்படுத்துகிறது.

யூதர்களுக்கு போதனை செய்யவே மத்தேயு தனது சுவிசேஷத்தை பிரதானமாக எழுதுகிறார். அதில் "தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாக பிறந்தவர்களும் உண்டு. மனிதர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு, பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கி கொண்டவர்களும் உண்டு." மத்தேயு 19:12 இதில் 3வது வகையில்தான் கத்தோலிக்க குருமார்கள் தங்களை இறைபணிக்கு அற்பணித்திருக்க ஞாயம் உண்டு. வேதாகமத்தில் அண்ணகர்களை குறித்து பலபகுதிகள் உண்டு. எஸ்தர் 1:10 எஸ்தர் 7:9 எஸ்தர் 2:14 எஸ்தர் 4:5,9,10 எஸ்தர் 2:21, 6:2 தானியேல் 1:7-10 2 ராஜாக்கள் 9:32.

இவர்கள் ஆண்டவர் குறித்த, முதல் இரண்டு முறைப்படி அண்ணகர்களாக ஆக்கப்பட்டவர்கள், மற்றும் பிறந்த அண்ணகர்களை குறித்து அதிகம் அக்கரைப்பட்டவராக ஆண்டவர் அவர்களுக்கு வேதாகமத்தில் பிரதான இடம் கொடுக்கவே ஏசாயா தீர்க்கதரிசன புத்தகம் 56:3-7 வாக்குத்தத்தம் தருகிறார்.

(1) அண்ணகர்கள் தங்களை பட்டமரம் என்று சொல்ல வேண்டாம்.

(2) ஆண்டவரின் உடன்படிக்கையை கை கொள்பவர்களுக்கு "என் ஆலயத்தில், என் மதில்களுக்குள்ளும், குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் உள்ள கீர்த்தியையும் பார்க்கிலும் உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன்".

(3) என் ஜெபவீட்டில் அவர்களை மகிழப்பண்ணுவேன்.

(4) அவர்களுடைய பலிகள் அங்கிகரிக்கப்படும்.

(5) என் ஜெபவீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு எனப்படும்.

ஆண்டவரின் இந்த வாக்குத்தத்தங்களை பார்க்கும் போது இன்றைய சமுதாயம் அண்ணகர்களுக்கு அங்கீகாரம், சம உரிமை அளிக்க தவறிவிட்டதாகவே தெரிகிறது. சமுதாயத்தை ஒதுக்கி, திருச்சபைகளை கருத்தில் கொண்டால் திருச்சபைகளும் அவர்களுக்கு நியாயம் செய்யவில்லை. சில சபைகளில் உயர் குருபட்டங்களுக்கு தலைமை குருஸ்தானங்களுக்கு திருமணம் செய்யாமல் தங்களை இறைபணிக்கு ஒப்பு கொடுத்தவர்கள்தான் தகுதி உடையவர்கள் என சட்டம் உள்ளது. இவ்வளவு இருந்தும், வேதம் படிக்க, வேதம் படித்த அண்ணகர்களுக்கு திருச்சபையில் உரிய இடம் இல்லை என்பது உண்மை.

The Name and Meaning of YAHWEH in Different Indian Languages

Sl. No.	Language	Name	Transliteration	Meaning	Pronunciation in English
1.	Hebrew	יהוה	YHWH	Yahweh,LORD, Lord	Yahweh
2.	[illegible] Telugu	యెహోవా	YEHOVA	Yahweh	Yehova
3.	Malayalam.	യഹോവ	Yahova	Yahweh,	Yahova.
4.	TAMIZH	யெகோவா	YEHOVAH	LORD, YAHWEH	YEHOVAH
5.	Bodo (Assam)	[illegible] यावे	Yahova	Lord, YaHweh	Yehova
6.	MIZO	PATHIAN	LALPA	LALPA	LALPA
7	Hindi	यहोवा	yahowa	Lord,	Yahowa
8.	Odia	ଯିହୋବା	[illegible] YAHWAH	LORD OF HOST	Jeehobba
9.	Ao (NAGA)	YAHWEH	—	—	—
10.	Assamese	যিহোৱা	Jihua	God, Lord	Jihua
11	Kannada	ಯೆಹೋವನು	yahovanu	God, Lord	yahovanu

14. காலங்கள் - கணக்கிடும் முறை - விழாக்கள்

காலங்களை கணக்கிடும் முறை 'கிறிஸ்து' பிறப்பிற்கு பின் உலக அளவில் ஒத்துக் கொண்ட முறைமையில் 'Solar' (சூரிய) கணக்கில் லண்டனில் உள்ள 'Green wich' தலைமையகத்தில் முறைப்படுத்தப் படுகிறது. பழைய ஏற்பாட்டு காலங்கள் 'Lunar' அடிப்படையில் அதாவது சந்திரன் தோற்றம் சந்திரகிரகணம், அடிப்படையில் அமையப்பெற்றது. சந்திரன் வழி கணக்கு யூதர்களால் பின்பற்றப் படுகிறது. Lunar வழிகணக்கு முறையில் ஆண்டவர், பாடு, சிலுவை மரணம், உயிர்தெழுதல் ஆகிய முக்கிய நிகழ்வுகள் கணக்கிடப் படுகிறது. மற்ற கிறிஸ்துவ பண்டிகைகள் கிறிஸ்துவ பிறப்பு உள்ளடக்கிய பண்டிகைகள் உலக கிறிஸ்துவ அறிஞர்களால் Solar கணக்கீட்டில் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட நாளில் உலகம் அனைத்திற்கும் ஒரே நாளில் கொண்டாடப்படுகிறது. அதன்வழி டிசம்பர் 25ம் நாள் ஆண்டவர் அவதரிக்கவில்லை. அந்த நாள் சரியான நாள் அல்ல. என்பது அறியாமை, அதேபோல் ஆண்டவர் மரித்து, உயிர்த்த நாளுக்கு இடைப்பட்ட காலம் 3 நாட்கள் என்பது யூத முறைப்படி சரியானதுதான். அதாவது ஆண்டவர் மரித்தது வெள்ளிக் கிழமை மாலை நேரம், வெள்ளி மாலை 6 மணியிலிருந்து சனி மாலை 6 மணியுடன் 2ம் நாள் கணக்கு என்றும் சனிக்கிழமை மாலை 6 மணியிலிருந்து அதாவது 6 மணிக்குபின் 3ம் நாள் என்றும் கணக்கிடப்பட்டு 3ம் நாள் உயிர்தெழுந்தார் என தீர்மானிக்கப்பட்டது. இஸ்லாமியர் பண்டிகைகள் Lunar முறையில் கணக்கிடப்படுகிறது. அது போலவே தீபாவளி போன்ற இந்துக்கள் பண்டிகை Lunar நாட்காட்டி அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இஸ்லாமியர்கள், ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிறப்பு, போதனைகளை ஒத்துக் கொண்டவர்கள். அவர் இறக்கவில்லை பிதாவானவர் அவரை மரணம் அடையும்முன், சிலுவையில் அறையப்படும்முன் எடுத்துக்கொண்டார் என்பது அவர்கள் வாதம், மரணத்தை ஒத்துக் கொண்டால் உயிர்தெழுதலை எதிர்கொள்ள வேண்டும் என்ற காரணம். சிலவருடங்களுக்கு முன் நம் நாட்டில் வாழ்ந்த புகழ் பெற்ற பெரியவர் உயர்திரு. சத்யசாய் பாபாவை பலர் அறிந்திருப்பர். அவர் அவருடைய 'மெக்சிகன்' அபிமானி Dr. John S. Hislop என்பவருக்கு நமது ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் திருஉருவத்தை சிலுவை மரத்தில் உயிர்நீத்தபின் அவர் உடல் இருந்த நிலையினை ஆண்டவர் உயிர்துறந்த சிலுவை மரத்துண்டுகளில் இருந்து அதில் ஆண்டவர் திருஉருவத்தை உண்டாக்கி கொடுத்துள்ளது, அந்த அபிமானி தான் எழுதிய புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த திருஉருவப்படம் அப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. பிற மதத்தலைவர்கள் நமது ஆண்டவரை குறித்து சாட்சியாக சொன்னது, காண்பித்தது ஒரு முக்கியமாக கருத இடம் உண்டு. எது எப்படியானாலும் ஆண்டவர் உலகத்தில் தோன்றினார், நமக்காக வாழ்ந்தார், நமக்காக ரத்தம்

சிந்தி உயிர் தியாகம் செய்தார், மீண்டும் உயிர் பெற்றார் என்பதுவே முக்கியமானது. எந்த தேதி, எந்த இடம்? எப்படி? எதனால்? என்பது முக்கியம் அல்ல. பலரால் எழுப்பப்படும் ஐயங்களுக்கு மூலகாரணம் இஸ்ரவேல் தேசத்தில் யூதர்கள் ஆட்சி "இயேசு கிறிஸ்துவை" ரட்சகராக ஏற்றுக் கொள்ளாததுதான். அதனால் 'தோரா' என்று சொல்லக்கூடிய 5 ஆகமங்கள் நீங்கலாக மற்ற சரித்திர நிகழ்விடங்கள் 'இஸ்ரவேல்' அரசால் பாதுகாக்கப் படவில்லை. அனைத்து சரித்திர நிகழ்விடங்களும் பாலஸ்தீனியர்கள், தனிநபர்கள், தனிப்பட்ட நிறுவனங்கள் பராமரிப்பில் இன்றைய இஸ்ரவேல் தேசத்தில் உள்ளது. இந்த காரணங்களால் ஆண்டவர் காலத்து சரித்திர நிகழ்விடங்கள் அறுதியிட்டு உறுதியாக்கப்பட்டு பாதுகாக்கப் படவில்லை. சரித்திர நிகழ்விடங்கள் அவரவர் ஆய்விற்கு ஏற்ற வகையில் உறுதி செய்யப்பட்டு மக்களுக்கு எடுத்து கூறப்படுகிறது. உதாரணமாக இன்றைய இஸ்ரவேல் புனித பயணம் மேற்கொள்பவர்கள் பார்க்கும் 'யோவான் ஸ்நானன்' ஆண்டவருக்கு திருமுழுக்கு கொடுத்த இடம் என்று காண்பிக்கும் இடம் உண்மையான இடம் இல்லை. உண்மையான இடம் யோர்தானுக்கு அக்கரை பகுதி, தற்பேதைய 'ஜோர்டான்' நாட்டு பகுதி என கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் ஆண்டவர் மரித்து அடக்கம் செய்யப்பட்ட இடம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் நம்பப்படும் இடம் அல்ல. வேத வசனக் கூற்றுப்படி நகருக்கு புறம்பே உள்ள ஐரோப்பிய நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இடம்தான் என்று உறுதி செய்யப்படுகிறது. அதேபோல் 'மறுரூபமலை'யில் ஆண்டவர் தந்த மறுரூப காட்சி இன்றைய நாளில் காண்பிக்கப்படும் கோவில் அல்ல அதன் அருகில் உள்ள மற்றும் ஒரு கோவில் உள்ள வளாகம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இஸ்ரவேல் தேசத்தில் இன்றளவும் அகழ் ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கிறது. இஸ்ரவேல் அரசு ஆண்டவரை குறித்து அக்கரை கொள்ளவில்லை, என்றாலும் புனித போப் ஆண்டவர் அவர்களால் சரித்திர நிகழ்விடங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்டு வருகிறது என்பது சரித்திர உண்மை.

The Cross and Triangle : A symbol used mostly in church embroidery. Here the cross interwined with the triangle emphasizes that Christ is one in the Holy Trinity.

முக்கோணமும் சிலுவையும் : திருச்சபையின் நூல்வேலைப்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. சிலுவையின் ஊடாக இருக்கும் முக்கோணம், கிறிஸ்து மும்மையில் ஒருவர் என்பதைக் கட்டுகிறது.

15. சுவிசேஷம் - விசுவாசம் - நம்பிக்கை - உறுதிப்பாடு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கன்னிமரியாளிடம் பரிசுத்த ஆவியால் உற்பவித்து பிறந்தார் என்பது நமது விசுவாசம் **ஏசாயா 7:14, 15. 9:6, 11:1-5.** அதுவே நமது நம்பிக்கை. அந்த நம்பிக்கை புனித குரான் வாயிலாகவும் உறுதி செய்யப்படுகிறது. இயேசு கிறிஸ்து ஆண்டவரால் அனுப்பப்பட்ட தேவதூதர், மேலும் தீர்க்கதரிசி என்ற வகையில் குரான் நூலும் ஏற்றுக் கொள்கிறது. **யோவான் 8:46.** பாவி என்று உங்களில் யாராவது என்னை குற்றப்படுத்த முடியுமா? என்ற சவால் ஒருவராலும் ஏற்றுக் கொள்ளப்படாத நிலை. இவை எல்லாவற்றிக்கும் மேலாக சனகரிம் சங்கம் முன்பு வேதபாரகர்கள், சதுசேயர், பரிசேயர் முன் பிரதம ஆசாரியனால் விசாரிக்கப்படும் போது ஆண்டவர் இயேசு கிறிஸ்து அளித்த உறுதி பிரமாணம், சாட்சி எந்த தீர்க்கதரிசிகளாலும். கடவுளின் தூதர்கள் என கருதப் படுபவர்களாலும், குரானிலோ, வேதாகமத்திலோ, வேறு எந்த மதத்திலும், எவராலும் அறிவிக்கப்படாத பிரமாணம், உறுதியான வெளிப்பாடு. **மத்தேயு 26:63, 64** பிரதம ஆசாரியனால் கூட்டப்பட்ட சனகரிம் சங்கம் என்பது அந்நாளில் ரோம சாம்ராஜ்யத்தில், யூதர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உயர்நிலை நியாயாய்தலம். இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத்துக்கு ஒப்பானது. மக்களுக்குதான் யார் என்பதை வெளிப்படுத்தினார். சபைகளில் வெளிப்படுத்தினார். அப்போஸ்தலர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். தெய்வீக செயல்களால் தனது தெய்வீகத்தை காண்பித்தார். தெய்வீக அரும் செயல்களை நிகழ்த்தி காட்டினார். தான் தெய்வம் என்பதை நிரூபித்தார். உயிர்தெழுந்தபின் அனேகருக்கு தம்மை காண்பித்தார். இவைகளுக்கு ஒத்த எந்த ஒரு நடவடிக்கையும், யாராலும் எந்த நாட்டிலும், எந்த வேதத்திலும், நடந்ததாக குறிப்புகள் இருக்கிறதா? என்றால் இல்லை என உறுதியாக சொல்ல முடியும். இந்திய தேசத்தில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், புத்தர்கள் நீங்கலாக பிற இனத்தவர்களுக்கு இந்துக்கள் மதம் என்று ஒன்று இல்லாவிடினும், பல தெய்வங்களை, பல வழிபாட்டு முறைகளில், பல்வேறு மக்கள் அவரவர்களின் வழக்கப்படி வழிபடுவது இன்று வரை கடை பிடிக்கப்பட்டு வருகிறது. பல தெய்வ வழிபாடு இருப்பினும், அந்த தெய்வங்களுக்கு சரித்திரமோ, சான்றுகளோ நம் ஆண்டவருக்கு ஒப்ப ஒன்றும் இல்லை. இந்திய நீதிமன்றமும் (Income Tax appelate Tribunal) Hinduism was neither a religion nor a community. It consist of a number of communities having different Gods worshiped in different ways. Even the worship of God was not essential for a person who had adopted the Hindu way of life. என தீர்ப்பளிக்கிறது Times of India dt. 17.3.2013 ஆதிகால தமிழர் வழிபாடு "ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்றும், ஆதிபகவன் என்றும், கடவுள் ஒருவரே என்றும் வரையறை செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன பின் நாட்களில் வியாசர் முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட 4 வேதங்களை பின்பற்றிய ஆரியர்கள் தமிழ் நாட்டில் வந்தபின்தான் பல

தெய்வழிபாடு பிரபலமானது. தமிழ் நட்டில் வாழ்ந்த சித்தர்கள் தமிழர்கள் வழிபடும் தெய்வங்கள் அனைத்தும் கைவினை பொருள்கள் என்றும், அவை செயல்பட இயலாதவைகள் என்றும், அவை அனைவரும் மனிதர்கள்தான் என்றும், தோற்றுவிக்கப்பட்ட பல தெய்வங்களை வணங்குவதால் முக்தி மார்க்கம் காணமுடியாது என்றும் **ஒரே கால கட்டத்தில்** பல சித்தர்கள் தீர்க்கமாக சொல்லி சென்றனர். அவர்கள் எழுதிய பாடல்கள் இன்று வரை பலரால் போற்றப்படுகிறது. ஆதிதகப்பன் செய்த தவறால் மனிதர்கள் அனைவரும் சாகாமையிலிருந்து பாவத்தினால் சாவிற்கு கடவுள் நம்மை ஒப்புக் கொடுத்தார். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினின்று சாகாமையை அடைவது முக்திமார்க்கம். அறிவு சார்ந்த மக்களின் இறுதி குறிக்கோள், சாகாமையை அடைவது. அதற்கு வழிகாண்பதும் ஒன்றே அவர்கள் வாழ்வின் இலட்சியம். கடவுளை ஒருவனும் ஒரு காலும் கண்டதில்லை. கடவுள் ஆவியாக இருக்கிறார். அவர் ஒளியில் வாசம் செய்கிறவர். புறமதத்தினர் நான்கு வேதங்களும், மனிதன் ரட்சிப்படைய சாகாமையை அடைய, முக்தி அடைய, மோட்சம் சேர, பரம்பொருளை சேர, நித்திய வாழ்வில் பிரவேசிக்க, பாவம் அற்ற பரம்பொருள், கடவுள் சன்னிதானம் அடைய, பாவம் அற்ற பரம்பொருள் மனிதனாக அவதரித்து, மனுக்குலத்திற்காக, தம்மை தாமே ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தி, இறந்த பின் உயிர் பெற வேண்டும் என்ற விதி. கோட்பாடு வரைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. **இந்த தெய்வீக முறைமை மெல்கிசேதேக்கின் முறைமையாக இருக்கலாம் என நம்ப வழி உண்டு. ஏசாயா 25:7,8 அந்த தெய்வீக வழியில் மனிதன் இறைவனை அடைய முதற் பேரானவரான இயேசு கிறிஸ்து தம்மை தாமே ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தி மரித்தார். அப்போஸ்தலர் நடபடிகள் 26:23** இறப்பை வெற்றி கொண்டு உயிர் பெற்றார். அந்த வழியில் மனிதர்களும் இறுதி தீர்ப்பு நாளில் நீதிமானாக தீர்க்கப்பட கடவுளின் சித்தப்படி நமது செயல்களுக்கு தக்கதாக, ஆண்டவரை ஏற்றுக்கொண்டு சுவிசேஷ வழியில் ரட்சிப்படைய வழிகாண வேண்டும். இறுதி தீர்ப்பு நாள் குறித்து குரானிலும் சொல்லப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு மக்கள் தீர்ப்பு அவர்களுடைய கிரியையை சார்ந்ததாக இருக்கலாம். ஆனால் சுவிசேஷத்தை தெரிந்த நம் வாழ்க்கை முடிவு நிச்சயம் சுவிசேஷத்தின் அடிப்படையில்தான் அமைய முடியும். அவனவன் கிரியை வழி நியாயதீர்ப்புதான் ஆண்டவரை அடைய வழி என்றால், ஏன் கடவுள் தன் குமாரனை கன்னியிடம் தோற்றுவிக்க வேண்டும்? உலகில் உள்ள எவரும் இயேசு கிறிஸ்து வழி வந்தவர் இல்லையே. கடவுளின் தூதர்களில் இல்வாழ்வில் ஈடுபடாதவர்கள் இயேசு கிறிஸ்து தவிர எவரும் இல்லை, தீர்க்கதரிசனங்கள் முன் குறிக்கப்பட்ட இவரே மனிதகுல ரட்சிப்பிற்காக முன் குறிக்கப்பட்டவர். நற்கிரியைகளால் மட்டும் மரித்தபின் நியாய தீர்ப்பு நாளில் சாகாமையை அடைய முடியும் என்றால் முன் குறிக்கப்பட்ட இயேசுவின் பிறப்பின் தனித்துவம் எதற்கு? சுவிசேஷம் எதற்கு? ரத்தம் சிந்தி மரிக்க வேண்டிய அவசியம் என்ன? நாட்டின் சட்டம் மட்டும் போதுமே!

ரட்சிப்பிற்கான அவசியம் என்ன? எந்த போதனையும் தேவை இல்லையே! எந்த மார்க்கமும் அவசியம் இல்லையே! நாட்டின் சட்டப்படி வாழ்வை அமைத்துக் கொள்ளலாமே! இந்த கேள்விகளை உங்கள் முன் வையுங்கள். இயேசு கிறிஸ்து அவர்கள் தனித்தன்மையான பிறப்பு அவசியம்! ரத்தம் சிந்துதல் அவசியம்! உயிர்தெழுதல் அவசியம்! என்ற பதிலே இறுதியானதாக நமக்குக் கிடைக்கும்.

இறுதியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தீர்க்கர்களால் முன் குறித்தபடி கன்னிமரியாளிடம் பிறந்தார். இல் வாழ்வில் ஈடுபடாமல் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். அவரை முன் மாதிரியாக்கி அவர் வழியில் மற்றவர்கள் பின்பற்ற போதனை செய்தார். 'சனகர் சங்கத்தில்' பிரதம ஆசாரியர் முன் நியாயம் விசாரிக்கப்பட்டு அவரின் தெய்வத் தன்மையை பிரமாணமாக பதிவு செய்தார். தம்மை தாமே ஒப்பு கொடுத்து, ரத்தம் சிந்துதலே பாவ மன்னிப்புக்கு வழி என்ற இறை வழியில் சிலுவையில் ரத்தம் சிந்தினார். முன் குறித்தபடி 3ம் நாள் உயிர்தெழுந்தார். மரணத்தை ஜெயித்தார். **உயிர் பெற உள்ள மக்களுக்கு முதற் நபராக உயிர் பெற்றார். பலருக்கு தரிசனமானார். யோவான் 5:27-29 அதுவே நமது விசுவாசம்.** அவர் காட்டிய வழி, உபதேசம், சுவிசேஷம். அதுவே இறைவனை அடைய ஒரே வழி. நித்திய வழி வேறு மாற்று வழியோ, மார்க்கமோ உலகில் இல்லை.

The Cross Botonnee : Sometimes called the Budded Cross because of the moderate form of its trefoil ends. Hence is suggests the young or immature Christian, while the Cross Fleuree, or flowered cross, denotes by its more fully opened endes the adult Christian.

பொட்டோனி சிலுவை : இதன் இறுதிப் பகுதியை வைத்து மொட்டுச் சிலுவை என்பர். மொட்டு இளைய வளர்ச்சியடையாத கிறித்துவரைக் குறிக்கும். மலர்ந்த சிலவையோ முழுமையும் வளர்ச்சியுள்ள கிறித்துவரைக் குறிக்கும்.

The Cross Crosslet : Four Latin crosses joined at their bases. Represents Christianity spreading in the four directions and is especially appropriate when the missionary idea is expressed.

ஒருங்கிணைச் சிலுவை : இறுதிப் பகுதிகளில் நான்கு இலத்தீன் சிலுவைகளை உடையது. நாலாத்திக்கிலும் கிறித்துவம் பரவுவதைக் குறிக்கிறது. இதில் அருள்தொண்டு பணியில் நோக்கம் தெளிவாகச் சுட்டப்படுகிறது.

16. தெய்வம் கண்டேன் - தெய்வமாகக் கண்டேன் - தெய்வத்தையே கண்டேன்!

ஆதிமனிதன் தன் தேவை, உணவில் இருந்த காரணத்தால் இயற்கை உணவை தெய்வமாக கருதினான். இயற்கை உணவு நிலத்தில் கிடைக்கிறதை அறிந்த மனிதன், நிலத்தை தெய்வமாக வழிபட்டான். நீர் இன்றி உணவில்லை என அறிந்து நீரை இறைவனாக்கினான். பின் நெருப்பின் மதிப்பை அறிந்தவன் அதனை வழங்கும் சூரியனை தெய்வம் ஆக்கினான். பின் காற்றின் ஆற்றலையும், சக்தியையும் அறிந்து அதனையும் தெய்வமாக்கினான். பிற்காலத்தில் விண்ணையும், அதில் உள்ள கோள்களையும் தெய்வம் என்றான். இவ்வகை சக்திகள் விண்வெளியிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் என்று அரூபமான சக்தியை இறைவன் என்றான். இம்மட்டும் பாமரன் கண்ட அதிசயம், காணக்கூடாத அதிசயம், வியந்த அதிசயம் இவை அனைத்தையும் தெய்வமாக்கி, வழிபடும் தெய்வங்களின் எண்ணிக்கையை கூட்டினான். இவர்களுடன் தனது மூதாதையர்கள், பெரியவர்கள், பிரியமானவர்கள், என தெய்வத்தின் பட்டியலை அதிகமாக்கினான். பின் அரூபமான சக்தியை உருவத்துக்கு உட்படுத்தி, தனித்த நிலையில் மனிதனுக்கு ஒத்த உருவத்தில் சன்னியாசி ஆக்கினான். அவ்வாறே இறைவனுக்கு சிலை வடித்தான். அரூபியை வணங்குவது ஞானிகளுக்கு முடியும். பாமரனுக்கு முடியுமா? வெறுமையை உணர்ந்து வணங்குவது கடினம். அதற்கு மாறாக உருவக பிம்பத்தை வடிவமைத்து அதனை வணங்குவது சுலபம். எனவே நிலம், காற்று, நீர், கோளங்களுக்கு உருவம் கொடுத்து கடவுள் சிலைகள் அமைத்தான். அதனை வணங்கினான். இன்றும் வணங்குகிறான். தமிழன் மாத்திரமா இதனை கடை பிடித்தான்? உலக மக்கள் அனைவரும் இறைவனை கண்ட வழியே அதுதான்! மனிதனுடைய மன இயல்பு, சுற்று சூழல், பாரம்பரியம் இவைகளுக்கு பொருந்த கடவுளை கற்பித்தான். பிற்காலத்தில் இறைவனுக்கு தனியாக சிலை வைத்து வணங்குவது மக்களுக்கு பொருந்தவில்லை. தாங்கள் குடும்பமாக, உறவுகளுடன் இருக்க இறைவனை தனித்து வைத்து பார்க்க மனம் ஒப்பவில்லை. எனவே இறை மகனுக்கு துணையாக சக்தியை உருவாக்கினான். பின் அவர்களுக்கு திருமணம் நடத்தினான். திருமணம் ஒன்று நடந்தால் குழந்தை வேண்டுமே? என குழந்தைகளை உருவாக்கினான். இறைவன் என்று தனிமையில் உருவாக்கப்பட்டவனுக்கு குடும்பம் கொடுத்து அதற்கு ஏற்ப உடைகள் அலங்காரங்கள், ஆடை, அணிகலன்கள் என படைத்தான். அதையே பிற்காலத்தில் விலை உயர்ந்த நகைகளாகவும், கிரீடங்களாகவும், அணிகலங்களாகவும் செய்து மகிழ்ந்தான்.

கடவுள் மனிதனுக்கு ஆறாவது அறிவை கொடுத்தது, உணர வேண்டும், பகுத்து அறிய வேண்டும் என்பதற்காகத்தான். அதனை விடுத்து ஆறாவது அறிவை பெற்றும் ஆண்டவனை, கடவுளை,

பரம்பொருளை அடைய நினையாமல் ஐந்தாம் அறிவை கடந்த நிலையில் நிற்கிறான். கடல் நீர், மேகமாக, மழையாக, அருவியாக, ஆறாக, நதியாக கடலை சேர்வது போல் மனிதன் கடவுளால் உருவாக்கப் பட்டு கடவுளை அடைந்தால்தான் நிம்மதி, அமைதி கிட்டும். பிரம்மத்தால் உருவாக்கப்பட்டவன், பல நிலைகளை கடந்து பிரம்மத்தை அடைய வேண்டும். இந்த உண்மையை, இயல்பான நிலையை அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி, 'மன வளக்கலை' கண்ட தத்துவ மேதை தொடங்கி பல யோகிகள், அருட்தொண்டர்கள் பெரியோர்கள் மக்களுக்கு தெய்வம் உங்களில் வாழ்கிறார். உங்களில் வாழும் தெய்வத்தை நீங்கள் உணர வேண்டும். நீயே ஆலயம். ஆலயம் தீட்டுப்படுவது கூடாது. தீட்டுப்படுவது தெய்வத்தையே தீட்டுபடுத்துவதற்கு சமம் என கூறுகின்றனர். வேதாகமத்தில் நோவாவின் காலத்தில் நோவாவுடன் ஆண்டவர் பேசினார். அக்கால மக்கள், மனிதன் கடவுளின் ஆலயம் என்ற நியதியை புறம் தள்ளின காரணத்தால் தண்ணீரால் அந்த சந்ததியை அழித்தார். இறைவன் தீர்க்கதரிசிகள் மூலமாக இறை செய்தியை மக்களுக்கு தெரிவித்தார், எச்சரித்தார், தண்டித்தார். இறைவன் அக்காலத்தில் மனிதனோடு நேரடியாகவும், தீர்க்கர்கள் மூலமாகவும் உரையாடினார். மனிதனை உண்டாக்கிய காரணத்தை உணர்த்தினார். பாவத்தில் மக்கள் மடிவதை இரட்சிக்க, நித்திய வாழ்விற்கு மனிதனை அழைக்க, வழிகாட்ட, நல்வழிபடுத்த தமது குமாரனை உலகிற்கு தந்தார். இறைவன் மனிதனானார். நற்செய்தி தந்தார். இறைவனோடு வாழ வழி வகுத்தார். அதன் வழிதான் பிரம்மத்திலிருந்து தோன்றிய மனிதன் பிரம்மத்தை அடைய கடவுள் வழி கண்டார். கடவுள் நம்மில் வாழ்கிறார். அதனால் நாம் கடவுளுக்கு ஒத்த வழியில் வாழ்ந்தால் மட்டும் போதாது. மன வளகலை பயின்றால் மட்டும் பிரம்மத்தை அடைய முடியாது. அந்த வழி நற்கிரியை வழி. முக்தி மார்க்கம் அடைய வேதாகம வழி, நற்செய்தி வழி காண வேண்டும். ஆறு அறிவிற்கு ஒவ்வாத சிலை வழிபாடு, கைவினை பொருள் வழிபாடு இறைவன் காட்டிய வழி அல்ல. சிலை வழிபாட்டால் இறைவனை அடைய முடியாது. நற்செய்தி வழி இறைமகன் காட்டிய வழி ஒன்றே இறுதியானவழி.

ஆண்டவருக்கு சூட்டப்பட்ட பெயர் 'yeshua' in Hebrew Jesus in Greek.

ஆண்டவருக்கு சூட்டப்பட்ட பெயர் :

'yeshua' in Hebrew 'yeshu'

'Jesus' in Icelandie

'yerhu' 'Jesus' in Portuguese.

'Isus' in Romanian.

17. தமிழ் வேதாகம உருவாக்கம்

இந்திய மொழிகளிலே தமிழ் மொழியில்தான் முதல் புத்தகமாக வேதாகமம் அச்சிடப்பட்டது. அந்த பணியை செய்தவர் 23 வயது ஜெர்மானியர் 'சீகன் பால்க்கும்' அவரது நண்பர் 29 வயது 'ப்ளுட்சோவும்'. 'சீகன் பால்க்' 1682ம் வருடம் ஜூன் 10ம் நாள் செல்வந்தராக பிறந்து 6 வயதில் தாயையும் 8 வயதில் தந்தையையும் இழந்தார். இவர் 16ம் வயதில் ரட்சிக்கப்பட்டார். 1705ம் ஆண்டு நவம்பர் 19ம் நாள் கப்பல் பயணம் புறப்பட்டு 1706ம் ஆண்டு ஜூலை 9ம் நாள் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். டென்மார்க் அரசனால் அனுப்பப்பட்ட இருவரும் தரங்கம்பாடியிலுள்ள டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனியில் வேலை செய்கிறவர்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்டனர்.

'சீகன் பால்க்' தரங்கம் பாடியில் கடற்கரை மணல் மீது தமிழ் எழுத்துக்களை எழுதிப்பழகினார். 'சீகன் பால்க்' இந்தியா வருவதற்கு முன்பே பல ரோமன் கத்தோலிக்க பாதிரிமார்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வந்திருந்தார்கள். ஆனால் தெய்வீக மொழியாகிய கிரேக்கு - லத்தீன் மொழிகளை தவிர பிற மொழிகளில் வேதத்தை மொழி பெயர்ப்பது தெய்வ குற்றம் என்பதால் இந்திய மொழியில் மொழி மாற்றம் செய்ய முனையவில்லை. 'சீகன் பால்க்' இரண்டரை ஆண்டுக்குள் 1711ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி புதிய ஏற்பாடு முழுவதையும் தமிழில் மொழில் பெயர்த்தார். மொழி மாற்றம் முழுவதும் பாமர மக்கள் பேசும் தமிழ் மொழியிலேயே அமைந்தது. 1714ம் ஆண்டு இந்திய மொழிகளிலே முதல் தடவையாக வேதாகமத்தை தமிழில் அச்சிட்டார். 1719ம் வருடம் பிப்ரவரி 23ம் நாள் குடும்ப ஜெபம் செய்து, தனக்கு பிடித்த 'இயேசு என் நம்பிக்கை' என்ற ஜெர்மன் கீர்தனையை பாடக் கேட்டு மரித்தார். அக்காலத்தில் 'சீகன் பால்க்' மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகள் (1) பள்ளிகூடம் ஏற்படுத்தியது (2) அநாதையர் இல்லம் ஆரம்பித்தது (3) ஆலயம் அமைத்தது (4) வேத பாட சாலை அமைத்தது (5) காகித தொழிற்சாலை அமைத்தது (6) அச்சகம் துவக்கியது (7) புத்தக வெளியீடு (8) தமிழுக்கு தொண்டு (9) கிறிஸ்துவை உபதேசித்த குற்றம். 'சீகன் பால்க்கு' அவரின் மரணத்திற்குபின் மொழிமாற்று பணியினை 'பென்சமின் ஆல்ஸ்' 1723ல் ஆரம்பித்து 1727ல் அச்சுபணிகளை முடித்தார். இவர்கள் சாதரண வழக்கத் தமிழில் பைபிளை வெளியிட்டார்கள். இந்த வேதாகமத்தில் காணப்பட்ட குறைகளை களைவதற்காக பல திருத்த மொழி பெயர்ப்புக்கள் வெளி வந்தன. இலங்கை தமிழ் திருப்புதல், பெப்ரீசியசின் திருப்புதல், ரேனியஸ் திருப்புதல், பெர்சிவல் திருப்புதல், ஐக்கிய அல்லது பவர் திருப்புதல், லார்சன் திருப்புதல், மோனவரன் திருப்புதல் என பல திருத்த மொழிபெயர்புகளில் தமிழ் வேதம் வெளி வந்தது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் பலர் அடங்கிய குழு மூலமாக பணியாற்றப்பட்டு

குழுவின் தலைவர் பெயரில் மொழி பெயர்ப்பு வெளி வந்தது. இவை அனைத்திலும் 1858ல் 'Henry Power' என்ற குழுவானவர் தலைமையில் மொழி பெயர்ப்பு துவங்கி 1871ம் ஆண்டு வெளி வந்த 'ஐக்கிய திருப்புதல்' என்ற மிக சிறந்த மொழி பெயர்ப்பைத்தான். கடந்த 140 ஆண்டுகளாக நாம் அனைவரும் பயன்படுத்தி வருகிறோம். மொழி மாற்றத்தில் திருப்தி அடையாததற்கு காரணம் 'Hebrew' மொழிதான். தமிழ் மொழி போல் அதிக சொற்கள் 'Hebrew' மொழியில் இல்லாத காரணத்தால், ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு 'Hebrew' வார்த்தையை பொருள் கொள்ள வேண்டும். அதனால் மொழி மாற்றத்தில் பூரண திருப்தி அடைய முடியவில்லை. அதுவே பல மொழி மாற்றத்திற்கு காரணம். உதாரணத்திற்கு Hebrew மொழியில் ஆண்டவர் பெயர் 'YESHUA' என்று உள்ளதை கிரேக்க மொழி மாற்றத்தில் 'JESUS' என்று சொல்லப்பட்டு அதுவே எல்லா மொழிகளிலும் சொல் வழக்காகிவிட்டது. எபிரேய மொழியில் மகன் என்ற சொல் உண்டு. ஆனால் மருமகன் என்ற சொல் இல்லை. இவைகளை உதாரணப்படுத்தவே எழுதுகிறோம்.

ஆண்டவருக்கு சூட்டப்பட்ட பெயர் :

'yeshua' in Hebrew 'yeshu'
'Jesus' in Icelandie
'yerhu' 'Jesus' in Portuguese
'Isus' in Romanian
'yeshua' in Hebrew
'Lisus' in Russian
'Jesus Wahanse' in Sinhale
'Jesus' in Spanish
'Yesu இயேசு' in Tamil
'Yesu' in Telugu
'Eesa' in Arabic
'Isa' in Islamic
'yesus' (Christian) in Indonesia
'ISOA' in Irish
'Gesu' in Italian
'Lesu' in Japanese
'Yesu' in Korean
'Yeshu' in Marathi
'Eestho' 'Yeshu' in Malayalam
'Jesus' in Polish

பிதாவாகிய கடவுள் 'yahweh' தேவ தூதனால் கர்த்தருக்கு சூட்டிய பெயர் 'yeshua' (Christian) in Hebrew 'yeshu' (Jewish Secular) in Hebrew.

18. யோகம்

இன்றய வாழ்வில் யோகம் குறித்து அறியாதவர்கள், அறிவு சார்ந்தவர்களிடம் மிகக்குறைவே. யோகம் என்பது சித்தத்தில் ஏற்படும் விருத்திகளை அடக்கி கையாள்வது. இதுவே யோக சாஸ்திரம். பதஞ்சலி முனிவர் எழுதிய நூல்தான் இதற்கு ஆதாரம். ஊருக்கு உழைத்திடல் யோகம் என்று பாரதியார் கூறுகிறார். இதற்கு 'கர்ம' யோகத்துடன் தொடர்பு கொள்ளலாம். அதாவது தன்னலமற்ற தொண்டே யோகம் என பாரதியார் விளக்குவதாக கொள்ளலாம். புறச் சூழலால் பாதிக்கப்படாத சமநிலை கொண்டவனை 'யோகி' என பகவத்கீதை சொல்கிறது, "யஸ்மான்னோ த்விஜதே லோகஹ, லோகன்னோ த்விஜதே சயஹ" என்று கீதை சொல்லும் வரிகளின் பொருள் இதுதான். கீதை கூற்றுப்படி உணவு, பேச்சு, உறக்கம், நடமாட்டம் ஆகியவற்றில் அளவுடன் இருப்பவர் 'யோகி'. மனம், அறிவு, சித்தம், அகங்காரம் ஆகியவை அடங்கிய, உட்கருவி யோகம் என்கிறார் பாரதியார். சித்தத்தின் இயக்கங்களை கட்டுப்படுத்துவதே யோகம் என என்று பாரதியார் விளக்குகிறார். ஜீவனும் பிரம்மமும் இணைதல் யோகம் கூறுவர். வெறுமனே யோகாசனம் செய்பவர்கள் யோகிகள் அல்ல. எல்லைக்கு உட்பட்ட வாழ்வை எல்லைக்கு அப்பாற்பட்ட சக்தியுடன் இணைப்பது யோகம் என்றும், சமநிலை தவறாத வழிமுறையே அதற்குவழி என்றும் கூறுவர். கர்ம, ஞான, பக்தி, ராஜ யோகி, யாராக இருந்தாலும் இந்த அணுகுமுறை அவர்களுக்கு கை வரவேண்டும். அசாத்தியமான சில சக்திகளை கொண்டவர்கள் சித்த புருஷர்கள், யோகிகள் என்றும் சொல்வர். இந்த சக்திகள் யோகத்தின் பாதையில் செல்பவர்களுக்கு இயல்பாய் கிடைக்கும். எது எவ்வாறாயினும், அஷ்டமா சக்திகளை பெற்றவரானாலும் பரம் பொருளை அடைவது, பரமத்தின் சித்தப்படியே நடக்கும் என்பதும், சக்தியை பெறுவது பரம் பொருளை அடைய வழி வகுக்குமேயல்லாமல் சக்தி பெற்றவன் எவனும் பரம் பொருளை அடைவான் என்பது அறியாமை. 'யோகா' அல்லது 'யோகம்' என்பது வெறும் ஆசனங்கள் மட்டும் அல்ல. யோகம் என்பதன் பொருள், இணைவது. மனித வாழ்வு பரம் பொருளுடன் இரண்டற கலக்கும் இணைப்பைத்தான் யோகம் என பண்டைய இந்திய தத்துவங்கள் பொருள் கொண்டன. இதற்கேற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள் யோகிகள். உடல், உணவு, மனம், சிந்தனை, வாழ்க்கை, அணுகுமுறை என பல அம்சங்களை தழுவி விரிவது யோகம். இவற்றின் வழிமுறைகளை கர்ம யோகம். ஞானயோகம், ராஜ யோகம், பக்தி யோகம் என பல வழிமுறைகள். பரம் பொருளுடன் இணைய ஞானம், பக்தி, செயல், முதலானவற்றை இந்த வழிமுறைகள் பரிந்துரைக்கின்றன. யோகம் அடைய ராஜயோகம் என்ற வழிமுறையை பெரும்பாலானவர்களால் பின் பற்றுகின்றனர்.

இந்த பயிற்சிகளை அன்றாடம் வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் ஒருவர் பரம் பொருளுடன் இரண்டறக் கலக்கலாம் என்ற கூற்று, பள்ளி, கல்லூரிகளில் பயின்று பட்டம் பெறுவதை நினை ஊட்டுகிறது.

எட்டு அங்கங்களை கொண்ட இந்த பயிற்சியில் ஒரு பகுதிதான் 'ஆசனம்'. அடுத்த பகுதி பிராணாயமம். இவை இரண்டும்தான் 'யோகா' என்ற பெயரில் அதிகம் கற்பிக்கப்படும் பயிற்சிகள்.

1. யமம் : ஒருவர் செய்ய வேண்டிய கடமைகள் அஹிம்சை, சத்தியம், கள்ளாமை, பிரம்மச்சாரியம், இரக்கம், ஜெபம், பொறுமை, திடம், மித உணவு, பரிசுத்தம் ஆகிய 10ம் 'யமம்' பகுதியில் அடங்கும்.

2. நியமம் : உடல் சுத்தம், தியானம். உறக்கம், உணவு, தவறு செய்யாமை, ஜெபம், விரதம் ஆகியவை.

3. ஆசனம் : உடல் பண்பாடு பயிற்சி.

4. பிராணாயமம் : மூச்சு பயிற்சி. ஆசனமும், பிராணாயமம் உடலின் உள் உறுப்புகள், வெளி உறுப்புகள் ஆரோக்கியமாகவும், செயல்திறனுடன் வைத்த அறிவு கூர்மை அதிகரிக்கச் செய்யும். கவனக் குவிப்பு இந்த பயிற்சிகளால் நன்கு வசப்படும்.

5. பிரத்யாஹாரம் : வெளிமுக ஈர்ப்பு புலன்களை, உள்முகம் திருப்புதல்.

6. தாரணை : ஏதேனும் ஒரு பொருளின் மீது மனதை, நிறுத்துவது.

7. தியானம் : தாரணையில் ஆழ்ந்திருப்பது.

8. சமாதி : தியானத்தில் ஐக்கியமாவது.

நுட்பமாக பார்த்தால் இந்த 8 அம்சங்களும் ஒன்றுக்கொன்று துணைபுரிவதாக அமையும். இவை அனைத்தும் ராஜ யோகம் எனப்படும் வழிமுறையில் உள்ளவை, கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் ஆகியவை முறையே செயல், ஞானம், பக்தி ஆகியவற்றின் வழியில் யோகத்தை அடைவது. ராஜயோகம் நமது நடத்தை, பழக்க வழக்கம், உடல்திறன், மன ஒருமைப்பாடு ஆகியவை மூலம் யோகத்தை அடைவது. இதன் பகுதிதான் ஆசனமும், பிராணாயமமும்.

இவ்வகை 'யோக' பயிற்சிகளால் மனிதன் தன்னலமின்றி பிறர் நலம் பேணி, ஆரோக்கிய வழியில், தன் மனநிலையை ஒருமுகப்படுத்தி நோயற்ற நல்வாழ்விற்கு வழிவகுக்கலாம். ஆனால் இவ்வகை யோக வாழ்க்கை, ஒழுக்கம், ஆகியவை இறைவனை நம் பால் ஈர்க்க வழி வகுக்குமேயன்றி, நல்நெறிமுறைகளால் தன்னிச்சையாக 'பரம் பொருளை' அடைவது இயலாது. அவ்வகை போதனை மனிதனுக்கு ஒரு காலும் யோகத்தை அடைய வழி வகுக்காது. போதிக்கப்படும் யோக வழிகளால் ஒருவரும் ஒருக்காலும் பரம் பொருளை அடைந்ததும் இல்லை, அடையப் போவதும் இல்லை.

இது சத்தியம்.

19. புதிய ஏற்பாடு - விளக்க குறிப்புகள்

வேதாகமத்தில் விளக்கம் தேவை படும் பகுதிகளுக்கு மாத்திரம் விளக்கம் கொடுத்துள்ளேன். இந்த விளக்கம் கிராமப்புற ஊழியர்களுக்கு உபயோகமாக இருக்கும் என நம்புகிறேன்.

'மார நா தா'

வேதாகம பகுதிகளில் பிரதானமான பகுதி ஆண்டவர் அவதாரம் முதல் அவர் மரிப்பு மற்றும் உயிர்த்த வரை. அதனை நான்கு சுவிசேஷகர்கள் அவர்களுடைய நடையில் அவர்கள் வழியில் எடுத்து எழுதுகின்றனர். இதிலிருந்தே அந்த நால்வரும் அவர்களுக்குள் கலந்து எழுதின பகுதி இல்லை என்பது உறுதியாகின்றது. மேலும் வேதாகம நூல் ஒருங்கிணைப்பாளர்கள், அப்போஸ்தலர்கள் எழுதினதை கூட்டாமலும் குறைக்காமலும், அப்படியே வேதாகமத்தில் தந்திருப்பது, வேதாகம நம்பகத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இதில் பெரும்பகுதி மொழிமாற்றத்தால் சில கருத்து சிதறல்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே அச்சில பகுதிகளை தேர்வு செய்து விளக்கம் தர முனைந்துள்ளேன்.

ஆண்டவர் பிறப்பு நட்சத்திரம் காட்டிய வழி.
மத்தேயு 2ம் அதிகாரம் - ஆண்டவர் பிறப்பு

கிழக்கில் நட்சத்திர ஒளி தெரிந்ததும் சாஸ்திரிகள் இறைவன் அவதரித்ததை அறிந்தனர். வானவியல் நிபுனர் 'கெப்ளர்' ஆய்வுபடி நட்சத்திரம் கி.மு.7ல் தோன்றி இருக்க வேண்டும் என்பது கணிப்பு. அந்த சமயம் இரண்டு பெரிய கிரகங்கள் "சனியும்" (Saturn) "வியாழனும்" (Jupiter) சமீபித்து பெரிய பிரகாசத்தை வால் நட்சத்திரம் போன்ற நட்சத்திரத்தை உண்டாக்கி இருக்க வாய்ப்பு உண்டு. சனி கிரகம் இஸ்ரவேலுக்கு உரிய நட்சத்திரம், வியாழன் அரசனுடைய நட்சத்திரம். **"நட்சத்திரம்".** எபிரேய மொழியில் "X pole of the heavens" என்ற விளக்கம் கொடுக்கப்படுகிறது. (A concise Hebrew and Aramic Lexicon of the old Testament. The contarvan pictorial Encyclopedia of Bible விளக்கம் 'crystal Ball'. Gesenius Hebrew and Chaldee Lexicon to the old Testament தரும் விளக்கம் 1) நட்சத்திரம் 2) A Globe 3) A Ball.

எசேக்கியல் 43:2 - இஸ்ரவேல் தேவனுடைய மகிமை கீழ் திசையிலிருந்த வந்தது. நட்சத்திர ஒளி தெரிந்ததைக் கொண்டு சாஸ்திரிகள் இளவரசன் தோன்றி உள்ளதைச் சாஸ்திரியமாக தெரிந்து, எருசலேம் வந்து ஏரோது அரசனிடம் வினா எழுப்பிகின்றனர்.

வெளிப்படுத்துதல் 26:16 நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாய் இருக்கிறேன். அரசர் பிறந்து உள்ளது எங்கே என்ற கேள்வி? அதற்கு ஆதாரம் கிழக்கில் தோன்றிய நட்சத்திர ஒளி!

சாஸ்திரிகள் வாக்கை ஏரோது அரசன், பிரதான ஆசாரியன், ஜனத்தின் வேதபாரகர் எல்லோரையும் கூடி வரச் செய்து கிறிஸ்து அரசர் பிறப்பை உறுதிப்படுத்தி உள்ளனர். அத்தோடு "கிறிஸ்து" யூதேயாவிலுள்ள "பெத்லகேம்" ஊரில் பிறப்பார் என்ற தீர்க்கதரிசிகள் கூற்று விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆண்டவர் பிறப்பு "லூக்கா" சுவிசேஷம் 2ம் அதிகாரம் 11-16 வசனங்களில் தேவதூதர்களால் அறிவிக்கப்பட்டு ''இயேசு'' குழந்தையை "பெத்லகேம்" சென்று தரிசித்தார்கள் என்றச் செய்தி தேவதூதர் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. ஆண்டவர் பிறப்பு, தேவதூதர்கள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது.

வழிக்காட்டிய நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்துக்கு மேல் வந்து நிற்கும் வரை அவர்களுக்கு முன் சென்றது என்பது எந்த ஒரு கற்பனைக்கும், அறிவிற்கும் முரணானது. பூமியை ஒத்த கோளம் வீட்டின் மேல் இருப்பது நினைத்து பார்க்க முடியாத ஒன்று. கிழக்கில் இருந்த சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள் என்றால் நட்சத்திரம் வழிக்காட்டியது தவறாகிறது. நட்சத்திரம் நேராக "பெத்லகேமுக்குத்" தான் வழிக்காட்டியிருக்க வேண்டும். ஆனால் சாஸ்திரிகள் நட்சத்திரத்தைக் கண்டோம் என்றுதான் கூறுகின்றனர். மேலும் "பெத்லகேம்" "எருசலேமுக்குப்" பத்து கி.மி. தொலைவில் உள்ள கிராமம். எருசலேமுக்கு வந்தவர்கள் அருகமைந்த கிராமத்திற்கு செல்வது கடினம் அல்ல. மேலும் சாஸ்திரிகள் குழந்தை இயேசுவை இரண்டாம் வயதில்தான் தரிசிக்கின்றனர் என்பது வரலாறு. பெத்லகேம் - உணவு கிடைக்கும் வீடு என்பது பொருள். தாவீதின் முன்னோர்கள் வாழ்ந்த ஊர். இவ்வூரில்தான் தாவீது சாமுவேலால் மன்னனாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

<u>மத்தேயு 2:11</u> தூபவர்க்கம், வெள்ளைப் போளம் (Myrrh) இவைகள் அனைத்தும் ஒரு மரத்தின் சாறு, பிசின் இலைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இவைகள் எகிப்து தேசத்தில் அதிகம். இன்னும் சுற்றுலா செல்பவர்களை வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு கூட்டி செல்கின்றனர். இந்த வகை வாசனை திரவியங்கள் ஆண்டவர் காலத்தில் உபயோகத்தில் இருந்து வந்துள்ளது.

<u>மத்தேயு 2:23</u> "நசரேயன்" ஆண்டவர் நாசரேத்தில் வளர்ந்த காரணந்தால் "நசரேயன் என அழைக்கப்பட்டார்." "நசரேய விரதம்" பூண்டவர் அல்ல, ஆண்டவர். ''நசரேய விரதம்'' என்றால் "பிரிக்கப்பட்டவன்", "நியமிக்கப்பட்டவன்" "ஏற்படுத்தப்பட்டவன்". இவர்கள் திராட்சரசம் குடியாமலும், தங்கள் தலை முடியை வெட்டாமலும், பிரேதங்களைத் தொடாமலும், நீக்கப்பட்ட ஆகாரத்தை புசியாமலும் வாழ்க்கை நடத்துபவர்கள்.

<u>மத்தேயு 3:7</u> "பரிசேயர்" என்றால் பிரிந்து இருப்பவர்கள். மறை ஒழுக்கத்திற்கும், சட்டத்திற்கும் உட்பட்டு வாழ்பவர்கள். இவர்கள்

கோட்பாடு "மோசே" போதனைகளாகிய முதல் 5 நூல்களை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் ஆன்மாவின் அழிவின்மை. இறந்தப் பின் தீர்ப்பு, உயிர்த்தெழுதல், விண்ணக தூதர்கள் இவைகளை விசுவாசித்தனர். சுத்தமாகுதல், உபவாசம், தசமபாகம், ஓய்வு நாள் இவைகளில் நம்பிக்கை உள்ளவர்கள்.

சதுசேயர்கள் யூத மதத்தில் ஒரு பிரிவினர். பிரதான ஆசாரியர்கள் அனைவரும் சதுசேயர்கள், ஆசாரியக் குலத்தினர், செல்வந்தர்கள், உயர்குடிமக்கள். இவர்களும் தோரா என்ற முதல் 5 நூல்களை தங்கள் வழிக்காட்டும் நூல்களாக ஏற்றுக் கொண்டவர்கள். "சனகர் சங்கத்தில்" அதிக செல்வாக்கு உள்ளவர்கள். கொள்கையில் பரிசேயர்களில் இருந்து மாறுபட்டவர்கள்.

மத்தேயு 4:1-10 ஆண்டவர் சோதிக்கப் பட்ட இடம் "Quarantana Mountain" north west of Jerusalem.

மத்தேயு 5:20 "வேதபாரகர்" என்றால் நியாயப்பிரமாணத்தை அறிந்து எழுத திறமையுள்ளவர்கள். நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம் செய்து அதன் அடிப்படையில் சட்டங்களையும், சடங்குகளையும், ஏற்படுத்தியவர்கள். இவர்களுக்குத்தான் யூதர்களுக்குள்ளே அதிக மதிப்பும், மரியாதையும் உள்ளது. 5:34 "பரிச்சேதம்" இந்த பதம் பொது மொழிபெயர்ப்பில் இல்லை.

மத்தேயு 9:10 "ஆயக்காரன்" ரோம பேரரசுக்கு தலைவரி, நிலவரியை வசூலித்துக் கொடுப்பார்கள். இவர்கள் இந்த உரிமையைப் பெற ஒரு தொகையை அரசுக்குக் கட்டி, பின் வரியினை மக்களிடம் வசூலிப்பவர்கள். ரோமயர்களைத் தவிர யூதர்களும் ஆயக்காரர்களாக இருந்தனர். பொதுவாக ஆயக்காரர்களை பாவிகளாக மக்கள் கருதினர். லேவியனரான மத்தேயு "ஆயத்தொழிலை" விட்டு இயேசுவின் சீடரானார்.

மத்தேயு 10:25 "பெயல் செபூல்" பேய்களின் தலைவன். சாத்தானை இந்த பெயர் கொண்டு அழைத்தனர்.

மத்தேயு 11:21 "கோராசினே" கலிலேயாவிலுள்ள பட்டிணம். ஆண்டவர் இங்கு பல அருஞ்செயல்களை நிகழ்த்தியும் மனம் திரும்பாத மக்கள் வாழ்ந்த ஊர் "கப்பர்நகூம்" வடக்கே நாலு கி.மீ. தூரத்தில் உள்ள பட்டிணம்.

பெத்சாயிதா இதுவும் ஆண்டவரால் சபிக்கப்பட்ட பட்டிணம். பேதுரு, அந்திரேயா, பிலிப்பு ஆகியவர்களின் ஊர். கலிலேயா கடலுக்கு வடக்கே உள்ள ஊர். தற்போதைய பெயர் "எந்கேல்". மீன் பிடிப்பவர்கள். அதிகம் வாழும் பட்டிணம்.

மத்தேயு 13:55, 56 சகோதரர்கள், சகோதரிகள். இவர்கள் மரியாளின் பிள்ளைகள்தான். இயேசு மரியாளின் முதல் மகனென்று லூக்கா 1:25,

12:41-50 கலாத்தியர் 1:19 வசனங்கள் ஆண்டவர் இயேசுவின் பிறப்பிற்குப்பின் பிறந்த குழந்தைகள் உண்டு என்பதனை உறுதிச் செய்கிறது.

மத்தேயு 17:15 "சந்திரரோக" வலிப்பு நோய், தண்டுவட அமைப்பின் சீர்குலைவு. நிலவு கதிர்களுக்கும், வலிப்பு நோய்களுக்கும் தொடர்பு உண்டு.

மத்தேயு 23:7 "ரபி" மோசேயின் சட்டத்தில், புலமை மிக்கவர்கள் பிறருக்கு கற்பிப்பவர்கள். எபிரேய மொழியில் "ரபி" என்ற சொல்லை "அரமேய" மொழியில் "ரபூனி" என்பார்கள்.

மத்தேயு 26:2 "பஸ்கா" இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும் முன் ஆசரிக்கப்பட்ட பண்டிகை. தலையீற்றை பலியிட உண்டான பண்டிகை. இந்நாள் வரை யூதர்கள் மத்தியில் கொண்டாடப்படும் பண்டிகை. அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்ததை நினைவுக்கூறும் பண்டிகை. அந்த பண்டிகையில் பஸ்காவின் புனிதத்தை பெரியவர்கள் இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்வார்கள். பஸ்கா பண்டிகை கொண்டாட பிற தேசத்து மக்களும் எருசலேம் வருவார்கள். ஆண்டவர் பஸ்கா பண்டிகை ஆசரிக்கும் நாளில் "இராப்போஜனம்" ஏற்படுத்தப்பட்டது. அந்த பஸ்கா பலியாக இயேசு கிறிஸ்துவை எண்ணவேண்டும்.

மத்தேயு 26:48 முத்தத்தின் மூலம் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுப்பது, ஆண்டவர் இருப்பிடம், செல்லும் இடம், எங்குச் சென்றால் அவரைக் காணலாம் என்பதை ஆண்டவரின் சீடர்கள் தெரிந்திருந்த நிலையில் முத்தத்தினால் காட்டி கொடுப்பதற்கு ஆய்வாளர்கள் கூறும் கருத்து : ஆண்டவராகிய 'இயேசு' பிதாவின் ஏக புதல்வன். மனித உடலில் மனிதர்களை ரட்சிக்க வந்த கடவுள் அவதாரம். ஆண்டவரின் தெய்வீகம், தெய்வீக தன்மை, தெய்வ வரம் அப்பகுதி மக்கள் அறிந்தது. வேதாகமத்தில் முன்பே குறிப்பிட்டது போல தேவாலயத்தில் இருந்து மறைந்து போனார் என்ற வாக்குகள் நாம் அறிந்தது. மேலும் ஆண்டவரும், அவருடைய சீடர்களும் ஒத்த தோற்றம் கொண்டவர்கள். ஒத்த தோற்றம் கொண்டவர்களை எளிதில் அறிந்து கொள்ள முடியாத தோற்றத்தில் இருந்த காரணத்தால் தான், ஆண்டவரை காட்ட முத்தம் மூலம் காட்டி கொடுக்க நிர்பந்தம் ஏற்பட்டது.

மத்தேயு 27:34 'கசப்பு கலந்த காடி' சிலுவையில் படும் பாடுகளை மறக்க இவ்வகை போதை பொருளை குடிக்க கொடுப்பது மரபு. ஆனால் ஆண்டவராகிய 'இயேசு' தனது அனாதி தீர்மானத்தின்படி நமக்காக, தாமாகவே தன்னை ஒப்புக்கொடுத்து மரணத்தை சந்திக்க வேண்டும் என்பது பரலோக நியதி. அதன் வழிதான் நம் ரட்சிப்புக்கு வழி காணமுடியும். எனவே பாடுகளை, வேதனைகளை, கஷ்டத்தை தாமாகவே ஏற்றுக்கொண்டார்.

மத்தேயு 27:46 "ஏலீ, ஏலீ லாமா சபக்தானி".

மாற்கு 15:34 "எலோயீ எலோயீ லாமா சபக்தானீ".

ஆண்டவர் சிலுவையில் தொங்கிய நிலையில் சொன்ன வார்த்தை அங்கு குழுமியிருந்த மக்களுக்கு விளங்கவில்லை. அங்கு குழுமியிருந்த மக்கள் யூதர்கள் மற்றும் ரோமர்கள். யூத மக்களுக்கு எபிரேயமும், அரமேயமும் தெரியும். அப்படி இருக்க ஆண்டவர் பேசிய மொழி இவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

எபிரேய மொழியில் "ஏலாஹீ, ஏலாஹீ லாமா ஷபக்டானீ" என்பது மாற்கு, மத்தேயு எழுதின வார்த்தைகளுக்கு ஒத்ததாகத்தான் உள்ளது. 'ஏலாஹீ' என்பது கல்தேய மொழி 'ஷபக்டானீ' என்பதும் கல்தேயர் மொழி 'ஷபக்' என்ற வார்த்தை எபிரேய மொழியிலும் 'Aramic' மொழியிலும் இல்லை. 'ஷபக்' என்பது கல்தேய மொழி என மிக தெளிவாக "ஜெஸனியஸ் எபிரேய - கல்தேய மொழி பேரகராதியில் கூறுகின்றனர். 'எட்சபட்டானி' என்றுதான் மூலமொழியான எபிரேயத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் To leave, To be left, Foresaken, abandon என பொருள்.

மத்தேயு 27:57-60 அரிமத்தியா யோசேப்பு கன்மலை கல்லறை குறிப்பிட்டுள்ள இடம் தற்போது "ஐரோப்பிய கிறிஸ்தவ சங்கத்தின்" பொறுப்பில் உள்ள இடம். அந்த இடம் சுண்ணாம்பு கற்களால் ஆன குகைகள் உள்ள இடம். அவ்விடத்தில் திராட்சை ரசம் தயாரிக்க பயன்படும் 'Press' ஒன்றும் உள்ளது. அதனை வைத்து அரிமத்தியா 'யோசேப்பு' ஒரு செல்வந்தர் என கணிக்கின்றனர். அந்த இடம் 'எருசலேம்' நகருக்கு புறம்பே உள்ள இடம். தற்போது 'இஸ்ரவேல்' செல்லும் யாத்திரிகர்கள் (கத்தோலிக்க சபை மக்கள் நீங்கலாக) அரிமத்தியா 'யோசேப்பு' இடத்திற்குத்தான் செல்கின்றனர். அந்த இடம் தற்போது "ஐரோப்பிய கிறிஸ்தவ சங்கத்தால்" பராமரிக்கப்படுகிறது. ஆண்டவராகிய 'இயேசு' கிறிஸ்து வைக்கப்பட்ட இடம் என்ற ஆதாரம், சரித்திர, வேதாகம குறிப்புகளை விளக்கி, ஆராதனை நடத்த வசதி செய்துள்ளனர். அந்த இடம்தான், ஆண்டவர் உடல் வைக்கப்பட்ட இடம், உயிர்த்த இடம், எனவும், காலியான கல்லறை உள்ள இடம் என யாத்திரிகர்களுக்கு விளக்கி காண்பிக்கின்றனர்.

மத்தேயு 27:62 ஆயத்த நாள் என்பது ஓய்வு நாளுக்கு ஆயத்தம் செய்யும் நாள். யூதர்கள் ஓய்வு நாள் சனிக்கிழமை. எனவே ஆயத்த நாள் வெள்ளிக்கிழமை. கிறிஸ்தவர்கள் ஓய்வு நாள் ஞாயிற்றுக்கிழமை யூதர்கள் கணக்குப்படி சூரிய அஸ்தமனத்துடன் நாள் முடிவிற்கு வருகிறது. அதாவது வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து ஓய்வு நாள் தொடங்குகிறது. இன்று வரை இஸ்ரவேல் தேசத்தில் ஓய்வு நாள் மிகவும் கடினமாக, மிகுந்த கட்டுப்பாட்டுடன், சிலர் வெகு கட்டுப்பாட்டுடன் நடைமுறை படுத்துகின்றனர். இஸ்ரவேல் தேசத்தில் Financial Capital 'Telaviv' நகரம். அங்குதான் இந்திய தூதரகம் அமைந்துள்ளது. நிர்வாக தலைநகரம் 'ஜெருசலேம்' நகரம். ஜெருசலேம் நகர தங்கு விடுதிகளில் வெளிநாட்டு யாத்திரிகர்கள்

தங்குவது இல்லை. ஏன்னென்றால் தங்கும் யாத்திரிகளுக்கு கூட விடுதிகளில் சனிக்கிழமை உணவு கிடைக்காது. விடுதி ஊழியர்கள் எவரும் பணிக்கு வரமாட்டார்கள். எனவே யாத்திரிகர்கள் 'ஜெருசலேம்' அருகில் உள்ள 'பெத்லகேம்' நகர விடுதிகளில்தான் தங்குகின்றனர். அங்கு கட்டுப்பாடு அதிகம் இல்லை. ஓய்வுநாள் கதைகள் அங்கு பல பேசப்படுவது ரசிக்கும்படியாக இருக்கும்.

<u>மத்தேயு 14:64 தேவ தூஷணம்.</u> இறைவனுக்கு எதிரான நிந்தையை குறிக்கிறது. இறைவனையோ, அவரது பெயரையோ, செயல்களையோ, சொல்லாலோ, செயலாலோ, இழிவு படுத்துவதும், பழித்துக் கூறுவதும், தெரிந்து செய்யும் பாவம். 'இயேசு கிறிஸ்து' மனிதர் பாவங்களை மன்னித்ததை இறை நிந்தனை என்ற யூதர்கள் குற்றம் சாட்டினர் <u>மத்தேயு 9:3</u>. இயேசு தன்னை மேசியா என்றதாலும் <u>தானியேல் 7:13</u>, தான் இறைமகன் என்று உரிமை கொண்டாடினதும் இறை நிந்தனை, தேவ தூஷணம் என்று கருதிய யூத தலைமை சங்கம் 'இயேசுவுக்கு' சாவுக்கு உரிய தீர்ப்பு வேண்டும் என கூக்குரலிட்டது. தேவ தூஷணத்துக்கு உரிய தண்டனை மரணம். பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம், லேவியராகமம் 24:15 யோவான் 19:7, மத்தேயு 12:3, மாற்கு 3:29, லூக்கா 12:10.

<u>மாற்கு சுவிசேஷம் 9:2 மறுரூபமானார்.</u> ஆண்டவர் தமது நெருங்கிய சீடர்கள் முன்பாக மறுரூபமானார். ஆண்டவர் மரித்து உயிர்த்தபின் மறுரூபமாக காட்சித்தந்தார். ஆண்டவர் தெய்வ நிலையில் வந்த மனிதர். ஆகையால் தனது தெய்வீக நிலையில் மறுரூப நிலைக்கு மாறினார். தன்னை அந்த நிலைக்கும் கொண்டுவரமுடியும் என முன் கூட்டியே வெளிப்படுத்தினார். நாமும் நியாயதீர்ப்பு நாளுக்குபின் ஆண்டவருடன் சேர இதே மறுரூப நிலை வேண்டும். அதற்கு முதற்பலனாக ஆண்டவர் தாம் மரித்து, உயிர்த்தபின் மறுரூபமாக மக்களுக்கு காட்சிதருகிறார். 'பவுல்' அப்போஸ்தலர் மனிதர்களின் மறுரூப நிலையினை, மரித்தபின் நாம் அடையவிருக்கும் நிலையினை தெளிவாக விளக்கியுள்ளார்.

<u>மாற்கு 12:41-44 காணிக்கை பெட்டி.</u> இன்றைய நாட்களில் தேவாலயங்களில் வரும் காணிக்கை பல இனங்களாக பிரிக்கப்பட்டு பற்பல நல காரியங்களுக்கு என இனம் காணப்பட்டு ஒதுக்கப்படுகிறது. அன்றைய நாளில் 'எருசலேம்' தேவாலயத்தில் 13 உண்டியல் பேழைகள் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு உண்டியல் பேழையும் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு என குறித்து வைக்கப்பட்டிருந்தது. அன்னாளில் ஏழை விதைவை தனது இறுதி பணத்தை, ஏழைகளின் உதவி தொகைக்கான உண்டியலில் சேர்த்தது ஆண்டவரின் கவனத்தை ஈர்த்தது. அதனால் ஆண்டவர் சீடர்களிடம் ஏழை விதவை உண்டியலை அதன் உதாரணத்துவத்தை விளக்கி கூறுகிறார்.

<u>மாற்கு 15:21 'சிரேனே' ஊரானும் சீமோன் எனப்பட்ட ஒருவன்</u> 'சிரேனே' 'Cyrene' ஊர் வட ஆப்பிரிக்காவில் உள்ள பட்டிணம்.

ஆப்பிரிக்கா தேசத்தவன் அந்த 'சீமோன்' என்பதால் அவர் ஒரு கறுப்பின மனிதன் என சொல்வர். எது எப்படியாயினும் 'சீமோன்' சிலுவையை சுமக்க, கட்டாயப்படுத்தப்பட்டு ஆண்டவர் தன் உடல் பலவீனத்தால் முன்னே நடக்க 'சீமோன்' பின்னே சிலுவையை சுமந்து வந்தது வரலாறு. லூக்கா 23:26.

<u>மாற்கு 15:46 கன்மலையில் வெட்டியிருந்த கல்லறை</u> சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடையும் நபர்கள் குற்றவாளிகளாகத்தான் இருப்பர். அவர்கள் மரணம் அடையும் போது குற்றவாளிகளுடன்தான் அடக்கம் செய்யப்படுவர்.

<u>ஏசாயா 53:9</u> வாக்கியம் நிறைவேறவே அரிமத்தேயு ஊரான், சனகர் சங்கத்தினர், ஏசுவின் சிலுவை மரணத்தை 'சனகர்' சங்கத்தில் எதிர்த்தவன், 'பிலாத்து'விடம் கேட்டு புதிதாக வெட்டப்பட்ட கல்லறையில் ஆண்டவராகிய இயேசுவை வைத்தனர். குற்றவாளிகளுடன் அடக்கம் செய்யப்படாமல் புதிய கல்லறையில் வைக்க ஏற்பாடு செய்தவர்கள் அரிமத்தேயு ஊரான 'யோசேப்பு' மற்றும் 'நிக்கதேமு' என்ற இஸ்ரவேல் 'ரபி'.

<u>லூக்கா எழுதின சுவிசேஷம்</u> இந்த சுவிசேஷம் முழுவதும் ஆண்டவராகிய 'இயேசு கிறிஸ்து' மனிதனாகவும், இரட்சகராகவும் வாழ்ந்ததை விளக்கும் நூல். 'லூக்கா' இந்த சுவிசேஷத்தையும், அப்போஸ்தலர்கள் நடபடிகளையும் எழுதியுள்ளார். இவர் ஒரு கிரேக்கர், வைத்தியர், வரலாற்று ஆசிரியர். அத்துடன் இவர் பவுலின் உடன் ஊழியர். 'பவுல்' ரோமபுரிக்கு கொண்டு செல்லப்படும்போது அவருடன் சென்றவர். பவுல் சந்தித்த கப்பற் சேதத்தை இவரும் சந்தித்தார். இவர் ஆண்டவர் காலத்து நிகழ்வுகளை ஆராய்ந்து, நேரடியாக கண்டவர்களை பேட்டி கண்டு, நற்செய்தி நூலை எழுதினார். அதுவே இவரது ஆய்வுக்கு ஆதாரமாக அமைந்தது மட்டும் அல்லாது அப்போஸ்தல நடபடிகளையும் அதே ஆய்வுக்கு உட்படுத்தி தீர்க்கமாக, சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் தெளிவாக எழுதியுள்ளார். இவர் இயேசுவின் தாயார் 'மரியாளை' சந்தித்து 'இயேசுவின்' பிறப்பு, இளம் வயது நிகழ்வுகள் அனைத்தையும் கேட்டறிந்தார். கொலோசேயர் 4:14, 2 தீமோத்தேயு 4:11, பிலேமோன் 24.

ஆண்டவரின் தாயாரிடம் தீர்க்கமாக விசாரித்த காரணத்தால் ஆண்டவரின் பிறப்பை தாய் வழி, வம்சாவழி வரலாறாக எழுதுகிறார். மத்தேயு ஆண்டவரின் வம்ச வரலாறை தகப்பன் வழியாக சொல்கிறார். இவர் சுவிசேஷம் எழுதின காலம் சுமார் கி.பி. 60.

<u>லூக்கா 1:19 தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல்.</u> வேதத்தில் 4 தூதர்களை குறித்து சொல்ல காண்கிறோம். அவர்களில் 'லூசிபர்' 'அபதான்' (Abaddon) என்ற இரண்டு நபர்களும் தேவ சந்நிதியிலிருந்து தள்ளப்பட்டவர்கள். மற்ற இரண்டு தேவதூதர்கள் 'மைக்கேல்' மற்றும் 'கேபரியேல்'. இவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணிகளை

நிறைவேற்றுவதாக வேதம் நமக்கு விளக்குகிறது. அந்த இருவரில் 'காபிரியேல்' தூதன் ஆண்டவரின் இடதுபுறம் அமரும் அருகதை உள்ளவர் என்ற வாதமும் உண்டு. வேத வசனப்படி 'கேபரியேல்' ஆண்டவரின் சன்னிதானத்தில் நிற்கிற தூதர் என்ற விளக்கம் போதுமானது.

லூக்கா 2:22 சுத்திகரிப்பு. குழந்தையை ஆண்டவருக்கு ஒப்படைக்கும்முன் 5 வகை சுத்திகரிப்பு நடைபெற வேண்டும்.

(1) விருத்த சேதனம் (2) குழந்தைக்கு பெயர் சூட்டுதல் (3) தாயின் சுத்திகரிப்பு (4) குழந்தையை ஆண்டவருக்கு ஒப்பு கொடுத்தல் (5) காணிக்கை. லேவியராகமம் 12. இதுவே ஆதிகால பழக்கம். மத்தேயு 19:13-15 யூதமுறைப்படி முதற் பேரான குழந்தையை (இயேசு கிறிஸ்துவை) ஆண்டவருக்கு செலுத்திவிட்டு அவரை மீட்க 5 ஷேக்கல் பணம் ஆசாரியர்களுக்கு செலுத்த வேண்டும். அந்த நாளில் அவருக்கு சூட்டின பெயர் **'Yeshua' in Hebrew - 'Jesus' in Greek - தமிழில் 'இயேசு'.**

லூக்கா 17:14-19 பத்து குஷ்டரோகிகள் - நன்றி சொன்ன சமாரியன். ஆண்டவரால் சுகமாக்கப்பட்ட 10 குஷ்டரோகிகளில் ஒரு சமாரியனான அந்நியன் நன்றி தெரிவிக்க ஆண்டவரிடம் வந்தான். வேத வசனங்களின்படி அந்த 10 நபர்களும் சுத்தமானார்கள் (Cleansed). ஆனால் அந்த அந்நிய சமாரியன் ஆண்டவருக்கு நன்றி சொன்னதின் நிமித்தம் ஆண்டவர் அவனுக்கு சொன்னது "Arise go thy way, thy faith hath made thee whole" 10 நபர்களும் சுத்தமானார்கள். குஷ்ட ரோகிகள் உடல் கை கால் உறுப்புகள் குறைவுபட்ட நிலையில் சுத்தமானார்கள் உறுப்புகள் குறைபாடு நீங்கினதாக வேத வசனம் கூறவில்லை. ஆனால் அந்த சமாரியன் நன்றி சொன்னபின், ஆண்டவர் வார்த்தையால் அவனது சரீர குறைபாடுகள் நீங்கினது. "உன்னுடைய விசுவாசம் உன்னை முழுமை அடைய வைத்தது" என்றார். அதன் பொருள் அந்த 10வது நபர் அந்நியன் மாத்திரம் சரீர குறைபாடுகள் நீங்கப்பெற்று முழுமை பெற்றான். (Dake's Annotated Reference Bible).

லூக்கா 23:38 இவர் யூதருடைய ராஜா என்ற வாசகம் 'கிரேக்க' மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் 'கிரேக்க' மொழி வியாபாரத்திலும், சமுதாய மொழியாக இருந்தது. அதேபோல் 'லத்தீன்' மொழி அரசு மொழியாகவும், 'எபிரேய' மொழி பிராந்திய மொழியாகவும் இருந்த காரணத்தால் 3 மொழிகளிலும் வாசகம் எழுதப்பட்டது.

யோவான் எழுதின சுவிசேஷம்

யோவான் 2:1-11 கானா ஊர் திருமணம். ஆண்டவர் கலந்து கொண்ட திருமணத்தில் திராட்சரசம் குறைவுபட்டது. 'இயேசு'வின் தாயார் ஆண்டவரிடம் முறையிட 'என் வேளை இன்னும் வரவில்லை' என இயேசு கூறினார். 'இயேசு'வின் தாயார் முறையிட்ட போது திராட்சரசம்

தீர்ந்து விடவில்லை. ஆனால் குறைவுபட்டது. வழக்கமாக திருமண காரியங்களில் அழைக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்களைத்தான் பந்திக்கு முந்தி அதாவது முதன்மையாக அழைப்பார்கள். 'இயேசு'வும் அவருடைய தாயாரும் அழைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் முக்கிய விருந்தினர்களாக இருக்க நியாயம் இல்லை. சுவிசேஷ செய்தியாக சொல்ல வேண்டுமானால், ஆண்டவர் தான் கொடுக்கவிருந்த தெய்வீக ரசத்தை ஏழைகளுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் (Supressed & oppressed) கொடுக்கவேண்டும் என்று காத்திருந்தார். அதற்காகவே தனது தாயாரிடம் எனது வேளை வரவில்லை என கூறினார். மனிதர்கள் தயாரித்த ரசம் வசதியானவர்களுக்கு என்றால், தெய்வீக ரசம் ஏழைகளுக்கு, வசதி குறைந்தவர்களுக்கு என தேர்ந்தெடுத்து கொடுத்த தெய்வம். 'யூதர்கள் தங்களை சுத்திகரிக்கும் முறைமையின்படி' எந்த ஒரு விசேஷங்களுக்கும், தங்களை சுத்திகரிக்க கற்சாடிகளில் நீர் இருக்கும். யூதர் முறைமைபடி என்றால் சுத்திகரிப்புக்கான நீர் என்றால் அப்பகுதி தொழுகை ஸ்தலத்திலிருந்து (Synagogue) சுத்திகரிப்பு நீர் கொண்டு வரப்பட்டு வீட்டில் உள்ள கற்சாடிகளில் ஊற்றப்படும். தொழுகை ஸ்தலத்திலிருந்து கொண்டு வந்து கலந்த நீர்தான் சுத்திகரிப்புக்கான தண்ணீர். சுத்திகரிப்புக்கான தண்ணீரில் 'Red Heifer' (சிகப்பு கன்றுகுட்டியின்) சாம்பல் கலக்கப்பட்டிருக்கும். அந்த நீரின் கலப்புத்தான் சுத்திகரிப்பு நீர். அந்த நீர் கலவையைத்தான் ஆண்டவர் திராட்சை ரசமாக மாற்றினார் என்பது சரித்திரம்.

<u>யோவான் 19:26, 27 'ஸ்திரியே அதோ உன் மகன்'.</u> ஆண்டவர் சிலுவையில் பாடுகள் அனுபவிக்கும் வேளையில் அந்த கால கட்டத்தில் 'இயேசு'வின் தாய் மரியாளின் கணவன் 'யோசேப்பு' உயிருடன் இருந்திருக்க நியாயம் இல்லை. 'இயேசு' தன் உயிர் பிரிந்தபின் தனது தாயினை பராமரிக்க ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மூத்த மகன் கடமை. குடும்ப சூழல், மரியாள் வாழ வசதி இல்லாத காரணத்தால் தனது தாய் வசதியாக எஞ்சிய நாட்களை கழிக்க ஒரு இடம், புகலிடம், தேவை என்ற காரணத்தால் தகுந்த நபரை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார் என்பது சரித்திரம். அவர் தேர்ந்தெடுத்த நபர் 'யோவான்'. அவருக்கு எருசலேம் நகரத்தில் சொந்த வீடு இருந்தது என்றும், வாழ்க்கைக்கு தேவையான வசதி இருந்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது. 'மரியாள்' ஆண்டவர் மரித்தபின் சுமார் 8 வருட காலம் 'யோவான்' பராமரிப்பில் இருந்ததாக ஸ்தல சரித்திரம் கூறுகிறது. மேலும் 'இயேசு' சனகரிம் சங்கத்தில் நியாயம் விசாரிக்கப்படும்போது, அவரை சிலுவையில் அறைய மறுப்பு தெரிவித்து வாதாடியவர்கள், யோசேப்பும், 'நிக்கதேமுவும்' தான். ஆண்டவர் மரித்து நல் அடக்கம் செய்யபட உதவியவர்கள் 'யோசேப்பும், நிக்கொதேமுவும்' தான். 'நிக்கொதேமு' இஸ்ரவேலின் ஒரு 'ரபி'. இவர் பரிசேயர். 'இயேசு'வை தேடிவந்த ஒரே 'ரபி'. பரி சேயரும், பிரதான ஆசாரியனும் இருந்த சபையில் 'இயேசு' குற்றம் அற்றவர் என வாதிட்டார். அவரே ஆண்டவரை அடக்கம் செய்ய 45

ராத்தல் வெள்ளை போளத்தை கொடுத்து நல் அடக்கம் செய்தார் என ஆதாரங்கள் கூறுகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் :

அப்போஸ்தலர் 'லூக்கா' எழுதிய நற்செய்தி நூலின் தொடர்ச்சியாக இதனை அவர் எழுதுகிறார். ஆதித்திருச்சபை பற்றிய உண்மை வரலாறு நூல் இது ஒன்றே. இந்த பகுதி நற்செய்தி பகுதிக்கும் பவுல் அப்போஸ்தலர் சபைகளுக்கு எழுதின கடிதங்களுக்கும் ஒரு பாலமாக அமைகிறது.

நடபடிகள் 1:1-3 அண்டவர் தாம் பரலோகம் எடுத்துக் கொள்ளப்படும் முன் உபதேசித்தவைகள்.

(1) சரீர பிகாரமாக உயிர்த்தெழுந்த இயேசு, யோவான் 21:4

(2) 'இயேசு'விற்கு கொடுக்கப்பட்ட அதிகாரம். மத்தேயு 28:18, லூக்கா 24:49

(3) சுவிசேஷத்தை உலக அளவில் எடுத்து செல்வது. மத்தேயு 28:19,20 மாற்கு 16:15, லூக்கா 24:47

(4) ஞானஸ்நானம். மத்தேயு 28-19, மாற்கு 16:16

(5) ஆண்டவரின் கட்டளைகளை கடைபிடிப்பது. தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் சுவிசேஷ நடபடிகள். மத்தேயு 28:20

(6) சுவிசேஷ அடையாளங்கள், மாற்கு 16:17-20

(7) உண்மையான தீர்க்கதரிசிகள். லூக்கா 24:25-27

(8) உபத்திரவங்கள் அவசியம். லூக்கா 24:46

(9) உயிர்த்தெழுதலும், பரத்துக்கு ஏறுவதும் அவசியமானது. லூக்கா 24:26

(10) இயேசுவே சுவிசேஷத்தின் மையம். லூக்கா 27:44

(11) உயிர்த்தெழுதலின் உண்மை நிலை. லூக்கா 24:39-43

(12) சுவிசேஷம் முழுமையாக நிறைவேறியது. லூக்கா 24:27

(13) சுவிசேஷத்தை பிரசங்கிக்க அதிகாரம். லூக்கா 24:47, மாற்கு 16:15

காரியங்களை குறித்து அந்த 40 நாள் அளவில் எடுத்துச் சொல்லப்பட்டது.

பவுல் அப்போஸ்தலர் சபைகளுக்கு எழுதின கடிதங்கள்:

இவருடைய கடிதங்கள் அனைத்தும் பாமரனுக்கு புரியும் வகையில் சாதாரண நடைமுறையில் எழுதப்பட்டது. மேலும் அவருடைய கடிதங்களில் நமக்கு தோன்றும் சந்தேகங்களை, அவரே கேள்வியாக கேட்டு, அதற்கு பதில் எழுதியிருப்பது கூடுதல் சிறப்பு. அவருடைய கடிதங்கள் அனைத்தையும் அவரே எழுதவில்லை. மாறாக அவர்

சொல்ல அவரது உதவியாளர்கள் எழுதியுள்ளனர். அந்தந்த சபைக்கு அங்குள்ள சபை மக்களின் ஆன்மீக நிலை, சுற்றுச் சூழலுக்கு தக்கவாறு அவர்களுக்கு ஆன்மீக அறிவினை புகுத்தியுள்ளார். 'கொரிந்து' சபைக்கு எழுதும் போது வானத்திலும், பூமியிலும் தேவர்கள் உண்டு என்ற கருத்து, வானசேனைகளை, நீர், நிலம், ஆகாயம், படைப்பு, இயற்கை அதிசயங்கள் என மனிதனுக்கு அதிசயமாக தோன்றின எல்லாம், மனிதனுக்கு தேவர்களாக தெரிந்தனர், வழிபட்டார்கள் என்ற கருத்தை ஆணித்தரமாக எடுத்து சொல்லியுள்ளார்.

<u>கலாத்தியர் 1:17-18</u> பகுதியில் பரிசுத்த பவுல் அரபு தேசத்தில் 3 வருடம் சுற்றி திரிந்த காலத்தில் ஆண்டவராகிய 'இயேசு' 'கிறிஸ்து' அவருக்கு நேரடியாக சுவிசேஷத்தை போதித்தார் என காண்கிறோம். நடபடிகள் 1:1-3, கலாத்தியர் 1:12, பவுல் அப்போஸ்தலர் சுற்றித்திரிந்த அரபு தேச பகுதியின் தலைநகரம் இன்றைய 'Petra' என்ற பகுதி. யோர்தான் நாட்டில் உள்ள உலக அதிசய பகுதி. அரேபியா என்ற பரந்த பகுதியில் சீனாய், மோவாபு, ஏதோம், யோர்தானுக்கு கிழக்கு பகுதி, மத்திய அரேபியா, அரேபியாவின் தென்பகுதி கடற்கரை உள்ளடக்கிய பகுதியில் பவுல் அப்போஸ்தலர் 3 வருடங்கள் சுற்றிதிரிந்தார் என்பது வரலாறு.

நான் எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்கு முன்பாக நிச்சயமாய் சொல்கிறேன். கலா 1:20

ஆண்டவர் வசனம் தந்தார், அதை பிரசித்த படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி. சங் 68:11

நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும், பேசாமல் இருக்க கூடாதே. அப் 4:20

எல்லாவற்றையும் சோதித்து பார்த்து, நலமானதை பிடித்து கொள்ளுங்கள். 1 தெச 5:21

என் நேசரின் சிலுவை

“நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை, தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்.” அப் 2:36

ஒளிரும் வைரஞ் சிலுவை மன்னரின் மகுடத்தில் உண்டு
மின்னும் தங்கச் சிலுவை செல்வந்தர் கழுத்தில் உண்டு
உறுதியான இரும்புச் சிலுவை ஆலய முகப்பில் உண்டு
பளிங்குகல் சிலவைகள் பல கல்லறை தோட்டத்தில் உண்டு
என் நேசர் சுமந்த சிலவை மனுமக்களின் மீறுதல் அன்றோ.
என் நேசர் குற்றம் சாற்றியவர்களை அத்திமரத்தைபோல் சபித்திருக்க கூடாதா?
சிலுவை பாடுகளை தவிர்திருக்க கூடாதா?
ஏரோதையும் பிலாத்தையும் நம்பச் செய்திருக்க கூடாதா?
சிலுவைவிலிருந்து காயமின்றி குதித்திருக்க கூடாதா?
எப்படி முடியும் அவரால்
வலது கையை பிணைப்பது மனுமக்களிடம் கொடை அன்பின் ஆணி
இடது கையை பிணைப்பது மனுமக்களின் தீர்ப்பின் ஆணி
வலது காலை பிணைப்பது தாழ்மையின் ஆணி
இடது காலை பிணைப்பது பாவியை மீட்கும் உடன்படிக்கையின் ஆணி
சிலருக்கு என் நேசரின் சிலவை இடறுதலுக்கானது
நகைப்பபிற் குரியது தவறாக புரிந்தலுக்கானது
அவமானத்திற்கானது ஆனால்
நேசரின் அன்பையும் நீதியையும் புரிந்தோர்
சிலுவையின் இரகசியத்தை அறிவர்.
பிதா உயிரோடு எழுப்பினார் இயேசுவை ஏன்
பிலாத்து இறுதி அதிகாரி அல்ல
சிலுவை இறுதி வார்த்தை அல்ல காலியான கல்லறையே
இயேசுவின் இறப்பு நிலையற்றது உயிர்ப்பே நித்திய ஜீவன்
தோற்கவில்லை சாத்தானை
அவர் மரணம் முடிவல்ல
நித்திய ஜீவனின் ஆரம்பம்
இறைவா இயேசுவே உம் சிலுவைக்கு கோடாடறு ஜோடி

நன்றி

பிஷப் ஞானாபரணம் ஜான்சன் அவர்களின்
ஆங்கில கவிதையின் தமிழாக்கம்
தமிழ் ஆக்கம்
திருமதி. **ரோடா விஜயன்**

துணைநூற்பட்டியல்

இந்தக் தொகுப்புக்கு ஆதாரமாக அமைந்தநூல்கள் சில:

1) அகத்தியர் ஞானம் - (மூலம்)
The Madras Religious Tract Society
The Madras Religious Book Society
(1818, 1848, 1864, 1915)

2) அகத்தியர் ஞானம் - விளக்க உரை:
டாக்டர் வீ. ஞானசிகாமணி, சென்னை.

3) அகத்தியர் அறைகூவல் - விளக்கஉரை:
திரு.தர்மன் பால்ராஜ், திருச்சி

4) 'முக்திவழி' - ஆசிரியர்:
மறைத்திரு. அமரர் N.J.S.சிவசுந்தரம்
பதிப்பாசிரியர்:
Rev. D.விஜயகுமார், ஈரோடு.

5) 'கிறித்தவம் தேவையா? - சாது செல்லப்பா

6) 'தமிழ்ச்சித்தர் பாடல்களும் விவிலியமும் (கடவுட் கொள்கைகள்) - டாக்டர் மோசசு மைக்கேல் ∴பாரடே, சென்னை.

7) கிறித்துவமும் தமிழும் - பக்கம் 11, 18
திருநெல்வேலி தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்.
முதற் பதிப்பு 1936

8) தமிழர் சமயம், தமிழர் வேதம் - தமிழகத்துக் கோயில்கள் யு. சுப்பிரமணியன்
முன்னாள் ஆணையர்
இந்துசமய அறநிலைத்துறை
தமிழ்நாடு

9) Christ in Ancient Vedas (Revised enlarged Edition) : Dr. Joseph Padinjerakara

10) கிறிஸ்தவ ப்ராஹ்மண சேவா சமதி : ஆராதனை முறைமை

இந்நூல் வேண்டுவோர்,

இக்கைந்நூலின் ஆசிரியர் **டாக்டர் B.விஜயன்** (கைபேசி எண். 9965524030) மற்றும் **J.ஆனந்த்**, அண்ணாநகர், சென்னை (கைபேசி எண். 9789023419) ஆகியவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.



எம்மாவூர் சீஷர்களுக்கு
இயேசு தம்மை
வெளிபடுத்தின
இடம்

யோர்தான் நதியில்
ஆண்டவர்
ஞானஸ்நானம்
பெற்ற இடம்





இயேசு கிறிஸ்து
பேதுருவிற்கு வானத்தின்
திறவு கோலை தந்தேன்
என்று கூறிய இடத்தில்
உள்ள நினைவு சின்னம்,
ஆலயம்

ஆண்டவரின் பிறப்பு அறிவிக்கப்பட்ட
இடத்தில் அமைந்த ஆலயம்

மறுரூப மலையில்
அமைந்த ஆலயம்